
# வல்வெட்டித்துறை:
# ஒரு படுகொலையின்
# வாக்குமூலங்கள்

மார்ச் 2025



INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT

# நிறைவேற்றுச் சுருக்கம்

இந்திய அமைதிகாக்கும் படையால் இலங்கையில் நடாத்தப்பட்ட மிகமோசமான கொடுமைகளில் ஒன்றான, 1989இல் நடந்த வல்வெட்டித்துறைப் படுகொலையின் கதையை அதில் உயிர் பிழைத்தவர்களின் குரல்களால் பதிவு செய்கிறது இந்த அறிக்கை. சிறிலங்கா அரசாங்கத்துடன் மேற்கொள்ளப் பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக தமிழ் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களையும் நோக்குடன், 1987ல் இருந்து 1990 வரையிலான காலப் பகுதியில் ஏறத்தாள 70,000 வரையான இந்தியப் படைகள் இலங்கைக்கு அனுப்பப்பட்டன. அவர்கள் வந்தடைந்த பின்னர் அவர்களே இரக்கமற்ற தாக்குதல்களில் ஈடுபடுபவர்களாக மாறிப் போனார்கள்.

வட இலங்கையின் ஒரு கடலோர நகரே வல்வெட்டித்துறையாகும். இதனை VVT என்றும் அழைப்பர். ஓகஸ்ற் 1989, வல்வெட்டித்துறைக்கு அருகே அமைந்திருந்த இராணுவ முகாம்களைச் சேர்ந்த இந்தியப் படைகள் நடாத்திய மோசமாக தாக்குதல்களில் 16 வயதிற்குட்பட்ட 5 சிறுவர்கள், ஒரு கைக்குழந்தை உட்பட 60க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். படுகொலை நடந்த மூன்று நாட்களும் மிகவும் அதிர்ச்சிகரமானதாக அமைந்தன. தங்களது அன்புக் குரியவர்களும் நண்பர்களும் தங்கள் கண்முன்னே கொல்லப்படுவதை பார்க்கும் நிலை மக்களுக்கு ஏற்பட்டது. இது மட்டுமன்றி, உயிர் தப்பிப்பதற்காக இரத்த வெள்ளத்தில் இறந்தது போல நடிக்க வேண்டிய சூழ்நிலைக்குள்ளும் சிலர் தள்ளப்பட்டார்கள். வெறித்தனமான பழிவாங்கல் மற்றும் கூட்டுத் தண்டனையாக, வீடுகள், கடைகள், திரையரங்குகள், வாகனங்கள், கையிருப்பு உணவுகள், மீன்பிடி உபகரணங்கள் என்பன எரியூட்டி அழிக்கப்பட்டன. ஆரம்பத்தில் இதனை மறுத்த சர்வதேச சமூகம், இப்படுகொலைக்கு ஆதாரம் ஏதும் இல்லை என்றும், துப்பாக்கிச் சூடுகளுக்கிடையில் சிக்கி பொதுமக்கள் தற்செயலாகக் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் வழக்கமான நழுவல் வாதங்களை முன்வைத்தது. படுகொலை நடந்து ஒரு வாரத்தின் பின்னர் அங்கே சென்ற சில பத்திரிகையாளர்கள், எரிந்த சடலங்களின் துர்நாற்றம் அப்போதும் நிரம்பியிருந்தது என்றும், அகற்ற முடியாமல் இருந்த சடலங்கள் எரிக்கப்பட்ட இடங்களில் கருகிய மண் திட்டுக்கள் ஆங்காங்கே காணப்பட்டன என்றும் அங்கே பயங்கர அமைதி நிலவியது என்றும் செய்தி வெளியிட்டனர். ஆனால் வல்வெட்டித்துறையில் இருந்த தனிமனிதர் ஒருவரின் பொறுப்புமிக்க பணி 35 வருடங்களுக்குப் பிறகு, இந்த அறிக்கை உருவாவதை சாத்தியமாக்கியிருக்கிறது. தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டபோதும், அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். பாடசாலை அதிபரும், விஞ்ஞான ஆசிரியருமான நடராஜா ஆனந்தராஜ் என்பவரே அவராவார். இறந்தவர்களை தகனம் செய்த கையோடு அந்த நகரத்தில் நடந்தவற்றைப் பதிவு செய்ய ஆரம்பித்தார். அவர் படுகொலையில் உயிர் தப்பியவர்களிடம் இருந்து 200 வரையான வாக்குமூலங்களை சேகரித்து, அவற்றை வேறு தகவல்களோடு ஒன்றாக இணைத்து, குற்றங்களுக்கு பொறுப்புக்கூறும் வலுவான வழக்காகவும், பொதுமக்கள் புதைகுழிகளை தோண்டியெடுத்தல் உள்ளடக்கப்பட்ட இழப்பீடுகளை பெறுவதற்கான ஆவணத் தொகுப்பாகவும் உருவாக்கியிருந்தார். குறைந்த பட்சம் இலங்கையின் மோதல் பற்றி, எந்தவொரு எதிர்கால உண்மையறியும் குழுவும் விசாரிக்கும் போது அவர்கள் இந்திய அமைதி காக்கும் படையின் காலத்தை உள்ளடக்க வேண்டும்.

வல்வெட்டித்துறை மக்கள் இந்திய அமைதிப் படையின் காலத்தில் மட்டுமின்றி, அதற்கு முன்னரும் ஏன் பின்னரும் சிறிலங்காப் பாதுகாப்பு படையினரிடமிருந்து எவ்வளவு வன்முறையை எதிர்கொண்டார்கள் என்பதைப் புரிந்து கொள்வது கடினம். குறைந்தது மூன்றில் ஒரு பகுதி மக்கள் அங்கிருந்து வெளிநாட்டிற்குச் சென்று, முன்னர் பக்கத்து பக்கத்து ஒழுங்கைகளில் வசித்தவர்கள், இப்போது தெற்கு இலண்டனில் பக்கத்து பக்கத்துத் தெருக்களில் வசிக்கிறார்கள். கடந்த 35 வருடங்களாக ஒவ்வொரு ஓகஸ்ற் மாதமும் இப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூருவதற்காக ஒன்று கூடுவதுடன், அடுத்த சந்ததிக்கும் இந்த நினைவுகளை கடத்தி விடுகின்றார்கள்.

# உள்ளடக்கம்

1. பின்னணி ---------------------------------------- 06
2. சூழமைவு ---------------------------------------- 09
3. தாக்குதல் சம்பவம் ---------------------------- 13
4. உடனடிப் பாதிப்புக்கள் ------------------------ 41
5. சட்டப் பகுப்பாய்வு ----------------------------- 48
6. முடிவும் பரிந்துரைகளும் ----------------------- 54

# 1. பின்னணி

## நில அமைவியல்

இலங்கையில் வடக்கேயுள்ள யாழ்ப்பணக் குடாநாட்டின் உச்சியில் வல்வெட்டித்துறை அமைந்திருக்கிறது. 1989இல் ஏறத்தாள 15,000 மக்களைக் கொண்ட சிறு நகரமாக இருந்தது. சுற்றி சுற்றி இருக்கும் சிறிய வீடுகள், அங்காங்கே அமைந்திருக்கும் இந்துக் கோவில்கள், அடர்ந்திருக்கும் மரங்கள், இவற்றோடு மணல் வீதிகளில் நாக்கை தொங்கப்போட்டபடி அலையும் தெரு நாய்கள், இவை வல்வெட்டித்துறையின் சிறப்பம்சங்கள். இது கப்பல் கட்டும் மையமாக வரலாற்றில் அறியப்பட்டாலும், இருபதாம் நூற்றாண்டில் பரபரப்பான மீன்பிடி, கடல் வணிக மற்றும் வீடுகளுக்கு கீழே பதுங்கு குழிகளில் தங்கள் கடற்கலன்களை பாதுகாக்கும் கடத்தல்காரர்களின் மையமாகவும் உருவானது.[1] தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த இடமும் வல்வெட்டித்துறையே ஆகும். இந்தக் காலத்தில் இயங்கிய ஏறத்தாள 24 தமிழ் இயக்கங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளே முன்னிலையில் இருந்ததனால், 'கரந்தடிப் போர் முறையின் முக்கிய இடமாகவும்' வல்வெட்டித்துறை அறியப்பட்டிருந்தது.[2]

இலங்கையில் வடக்கு, கிழக்குப் பிரதேசம் தமிழர் பெரும் பான்மையாக வாழும் இடமாகும். இருந்தாலும் இலங்கையின் மொத்த சனத்தொகை என்று பார்க்கையில் சிங்களவர்களே பெரும்பான்மையினர். இந்த வேறுபாடு வரலாற்றின் தீவிரமான இன வன்முறைகளுக்கு அடிகோலியது. 1983–ல் உள்நாட்டுப் போராக வெடித்தது. தமிழ்ப் போராளிகள் தங்களுக்குள் பிளவுபட்டு, ஒருவருக் கொருவர் போட்டி போட்டுக் கொண்டாலும், அவர்களின் நோக்கம் ஒன்றாகவே இருந்தது: தமிழ் மக்களுக்கான அரசியல் சுய நிர்ணயத்துடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட தனி நாட்டை உருவாக்குவதே அதுவாகும். இலங்கையில் போராட்டம் ஆரம்பித்தபோது, பல தமிழர்கள் கடல்கடந்து இந்தியாவின் ஆதரவை எதிர்நோக்கினர், இந்தியாவை 'தாய் நாடாகவே' பார்த்தனர்.[3] அவர்களுக்கு இந்தியாவிலும் இந்திய இராணுவத்திலும் பற்று இருந்தது. பதிலாக இந்தியா விடுதலைப் புலிகளுக்கு இரகசிய ஆயுத உதவிகள் செய்ததோடு பயிற்சியும் அளித்தது. கட்டற்ற அகதிகள் ஊடுருவலால் எழும் பிரச்சனைகளை தடுப்பதும் பகுதியான காரணம் எனலாம். வல்வெட்டித்துறைக்கும் தென்னிந்திய மாநிலமான தமிழ் நாட்டுக்கும் இடையியலான நீரிணையை சட்ட விரோதமாகவோ அல்லது வேறுவகையிலோ ஒரு மணிநேரத்திற்குள் படகில் கடந்துவிடலாம்.

## இந்திய அமைதி காக்கும் படை

1987 கோடைகால ஆரம்பத்தில் இலங்கைப் படையினரால் தமிழ் போராளிகளின், குறிப்பாக விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை களைவதுடன், இடங்களை மீளக் கைப்பற்றும் நோக்கோடு, மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையே வடமராட்சி இராணுவ நடவடிக்கையாகும். சிக்கலான புவிசார் அரசியல் காரணமாக இந்திய அரசாங்கம் இதில் நேரடியாக தலையிட்டதுடன், பூமாலை நடவடிக்கை என்னும் பெயரில் முற்றுகையிடப்பட்ட யாழ்ப்பாணத்திற்குள் விமானங்களில் இருந்து உணவுப் பொதிகளை போட்டது. அதே நேரம் இலங்கை அரசாங்கம் தெற்கில் ஏற்பட்ட பிறிதொரு கிளர்ச்சியை முறியடிப்பதற்காக தனது படையின் கவனத்தை தெற்கில் செலுத்த வேண்டி ஏற்பட்டது. 1987 ஜூலையில், அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இந்திய–இலங்கை சமாதான உடன்படிக்கையில் கையெழுத் திட்டனர். இந்த உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இந்தியப் படைகளை அனுப்பி குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதன் மூலமாக, இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிக்குள் சமாதானத்தைப் பேணவும், தமிழ் மக்களின் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபடவும், அங்கே இந்திய இராணுவத்தை அனுப்புவதற்கு இந்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டது. மாறாக இலங்கை இராணுவம் அப்பிராந்தியத்தை விட்டு வெளியேறலாம் அல்லது தங்கள் முகாம்களுக்குள் முடங்கிக் கொள்ளலாம். விடுதலைப் புலிகள் இந்த ஒப்பந்தத்தின் பங்காளர்களாக இருக்கவில்லை.

மூன்று மாதங்களின் பின்னர், அதாவது நவம்பர் 9, 1987 அன்று உரையாற்றிய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இந்திய அமைதி காக்கும் படை ஒழுக்கத்திலும் துணிவிலும் சிறந்து

[1] Mathisutha, *India's Mylai* (film) https://www.youtube.com/watch?v=xyfpABjWxnQ, *நடராஜா ஆனந்தராஜின் ITJP உடனான நேர்காணல்.*

[2] *Chris Nuttall, Guardian (12 August 1989).*

[3] *India's Mylai ஆவணப் படத்தில் திரு. ஆனந்தராஜ்.*

விளங்குவதாக அவர்களைப் பாராட்டினார். [4] தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்ப்புக்கு முகம் கொடுத்த படையினர், பெரும்பாலும் மக்களையும் போராளிகளையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாமல் இருந்தார்கள். அதனால் பொதுமக்களை கொலை செய்வது உட்பட்ட வன்முறையை ஏற்கனவே கையில் எடுக்க ஆரம்பித்திருந்தார்கள்.[5] இது தமிழ் மக்கள் 'அப்பாவிப் பொதுமக்களைக் கொல்லும் படை' [6] (Innocent People Killing Force) என அவர்களை அழைப்பதற்கு இட்டுச் சென்றது. 1987 செப்ரெம்பரில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் மூத்த தலைவர் திலீபனும், 1988 ஏப்ரலில் சாதாரண குடிமகளான அன்னை பூபதியும் இந்திய அமைதிகாக்கும் படையின் அடக்கு முறையையும் வன்முறையையும் எதிர்த்து உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிரிழந்தார்கள். இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் நடந்த இந்திய அமைதி காக்கும் படை நடவடிக்கை 32 மாதங்கள் நீடித்தது. ஆயுதப் போராட்ட காலங்களில் இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை மேலும் 10,000ஆல் இக்காலப் பகுதியில் அதிகரித்ததென அனைத்துலக மன்னிப்புச் சபை (Amnesty International) கணக்கிட்டுள்ளது.[7] இந்திய அமைதிப் படைக் காலம் முடிந்து, பல தசாப்தங்கள் கடந்த நிலையிலும், இற்றைவரை இறந்தவர்களின் துல்லியமான கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

இந்திய அமைதி காக்கும் படை மோசமாக நடந்து கொண்டதற்கு பல காரணிகள் உண்டு என அவர்களின் அனுதாபிகள் வியாக்கியானப்படுத்தினர். அவர்கள் மேற் கொண்ட பணி, அடிப்படையில் அரசியல் ரீதியிலானது என்பதால் போதுமான அளவு துல்லியமாக இருக்கவில்லை; [8] மெட்ராஸ் றெஜிமென்ட்டைத் தவிர, இதர படைகளுக்கு தமிழ் மக்களோடு நல்லுறவைப் பேணுவதில் மொழி ஒரு பெரும் தடையாக இருந்தது; அத்தோடு அவர்கள் பொது மக்களை தாக்குவதோ அல்லது மக்கள் சொத்துகளை அழிப்பதோ தவிர்க்க வேண்டும் என்று கடுமையாக உத்தரவுகளால் தடுக்கப்பட்டிருந்தார்கள்; மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத பலம் இந்தியப் படையினரை விட மேலோங்கியிருந்தது. உதாரணமாக AK-47 துப்பாக்கிகள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் மட்டுமே இருந்தன; போன்ற வாதங்கள் இவர்களால் முன் வைக்கப்பட்டன. அழுத்தங்களுக்கு முகம்கொடுத்த போது, இந்திய அமைதி காக்கும் படையினரும் மனித உரிமைகளை மீறியிருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை என்றும், ஆரம்பத்திலிருந்தே 'உள்ளூரில் செயல்பட்டு வந்த பிரஜைகள் குழுவிடம்' படையினர் தரப்பில் ஏதாவது அத்துமீறல்கள் இருந்தால் தங்கள் கவனத்திற்கு கொண்டுவரும்படி அறிவுறுத்தியே இருந்தார்கள் என இந்தியாவின் கல்வியாளர் ஒருவர் கூறியிருந்தார். [9]

---

[4] *cited in P A Ghosh, Ethnic Conflict in Sri Lanka and the Role of Indian Peace Keeping Force (IPKF) (1999) p189.*

[5] *1987 ஒக்ரோபர் 21–22 இல் நடந்த யாழ்ப்பாணப் படுகொலையும் இதில் உள்ளடங்கும். யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்குள் இந்தியப் படையினர் நடாத்திய படுகொலையில் வைத்தியர்கள், தாதிகள், நோயாளர்கள் உள்ளிட்ட 70 வரையானோர் கொல்லப்பட்டனர்.*


[6] *Maj Vivek Chadha, Company Commander in Low Intensity Conflict (2009) p57.*

[7] *Amnesty International, Sri Lanka: The Indian Peace Keeping Force and 'Disappearances (September 1990) p3.*

[8] *P A Ghosh, Ethnic Conflict in Sri Lanka and the Role of Indian Peace Keeping Force (IPKF) (1999) pp147–149.*

[9] *S D Muni, Pangs of Proximity: India and Sri Lanka's Ethnic Crisis(1993) p155.*

# வரைபடம் 01 : இந்திய இராணுவ முகாம்கள்



# 2. சூழமைவு

**இந்த அறிக்கை 1989ல் நடந்த படுகொலையைப் பற்றி பேசுகிறது. ஆனால் இந்த வன்முறையின் பாதிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட விளைவுகளில் ஒன்றாக மன அழுத்தமும் மிரட்சியும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்குக் கிழக்கில் படிப்படியாக இயல்பாகிப் போனது.**

வல்வெட்டித்துறையை சுற்றி ஏழு இந்திய இராணுவ முகாம்கள் ஒரு 'கயிற்று வளையம் போல்' அமைக்கப் பட்டிருந்தன. [10] அதாவது, வல்வெட்டித்துறை நகரவாசி ஒருவர் கூறுவது போன்று, சோதனைச் சாவடிகள் மூலமும் ஊரடங்கு உத்தரவு மூலமும் நகரத்தையே மிக விரைவாக சுற்றிவளைக்க அவர்களால் முடியும். பல ஆண்டுகளாக தொடர்ந்த இன வன்முறையால், அந்த ஊரிலிருந்த பலர் அவ்விடத்தைவிட்டு வெளியேறி இருந்தனர். அதனால் பல வீடுகள் ஆட்களே இல்லாமல் இருந்தன. வீடுகளின் கூரைகளை மறைவிடங்களாக விடுதலைப் புலிகள் பயன்படுத்தத் தொடங்கினர் என இன்னொருவர் நினைவு கூர்ந்தார். [11] விடுதலைப் புலிகள் எங்காவது மறைந்திருக்கின்றார்கள் என்று தகவல் இந்திய அமைதி காக்கும் படைகளுக்குக் கிடைத்தால், அவர்களை அப்புறப்படுத்தும் அல்லது அழித்தொழிக்கும் நோக்குடன், சந்தேகத்திற்கிடமான வீடுகளை நோக்கி, எறிகணைத் தாக்குதல்களை அவர்கள் நடத்துவார்கள். அதனைத் தொடர்ந்து தன்னிச்சையாக பழிவாங்கும் நோக்குடன், சந்தேகத்திற் கிடமான வீட்டைச் சுற்றியுள்ள 15 அல்லது 20 வீடுகளை சுற்றிவளைத்து, சோதனைசெய்து, அங்குள்ள ஆண்களைத் தாக்கி, தங்கள் முகாம்களுக்கு இழுத்துச்சென்று தடுத்து வைப்பார்கள். காலப்போக்கில் இது 'வழக்கமான நிகழ்வாக மாறி' மக்களுக்கு பழகிப்போனது, ஆனால் இதுவே எப்போதுமே எதுவும் நடக்கலாம் என்ற பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நிலையிலேயே அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். [12]

***ஓகஸ்ற்றில் நடந்த இப்படுகொலைக்கு வழிவகுத்த இரண்டு சம்பவங்கள்.***

**முதலாவது முன்னோடிச் சம்பவம்**

வல்வெட்டித்துறை மக்களுக்கும், இந்திய அமைதி காக்கும் படைக்கும் இருந்து வந்த உறவில், 19 ஜனவரி 1989 அன்று பிளவு ஏற்பட்டது. இரண்டு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட பின்னர், இந்திய இராணுவம் பொதுமக்கள் மீது மிக மோசமான தடியடித் தாக்குதல்களை நடாத்தியது. கிட்டத்தட்ட 150 பொது மக்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள்[13] என்று மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டது.

சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பிறகு, 26 ஜனவரி, வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் தலைவரும், பட்டயக் கணக்காளருமான சபாரட்ணம் செல்வேந்திரா மற்றும் அதன் செயலாளரும் பருத்தித்துறை பாடசாலை ஒன்றின் அதிபருமான நடராஜா ஆனந்தராஜ் ஆகியோர் வட பகுதிக்கான இந்திய அமைதி காக்கும் படைத்துணைத் தளபதிக்கு, நடந்த சம்பவங்களைப் பற்றி கடிதம் எழுதினர். [14] இந்திய அமைதி காக்கும் படை அதை மறுக்கவில்லை. வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு விபரித்துள்ளது போன்று, காலை பத்துமணி அளவில், பொலிகண்டியில் அமைந்திருந்த இந்திய அமைதி காக்கும் படை முகாமிலிருந்து, கால் நடையாக ரோந்து சென்ற படையினரில் இருவர் குண்டு வெடிப்பொன்றில் காயமடைந்தனர். அந்த இராணுவ முகாமைச் சேர்ந்த கப்டன் தர அதிகாரி ஒருவர், மேலதிகப் படைகளுடன் சம்பவ இடத்திற்கு விரைந்தார். அடுத்த மூன்று மணி நேரத்திற்கு சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஒரு சதுர மைல் சுற்றளவில் தனது கட்டளையின் கீழ் வீடுகளுக்கு எரியூட்டியதுடன், அங்கு வசித்த மக்களை பெரிய தடிகளாலும், மிதி வண்டிச் சங்கிலிகளாலும் மட்டுமில்லாமல் உலக்கைகளாலும் தாக்கினர். காயமடைந்த ஆண்களை வல்வெட்டித்துறை வரை "சிறப்புக் கவனிப்புக்காக" நடந்து செல்லுமாறு நிர்ப்பந்தித்தனர். அத்தோடு விடாமல், பொலிகண்டி முகாம் கப்டன் தன்னிலை மறந்து செயற் பட்டதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும் "வெறிபிடித்த" சக படையினருடன், ஊறணியில் உள்ள அரசாங்க மருத்துவமனைக்குள் நுழைந்து, அங்குள்ள மக்களைக் கொடூரமாக் தாக்கினார் என்று வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு மேலும் விபரித்திருந்தது. மருத்துவமனையில்

---

[10] *Indian Express (24 August1989) இல் Rita Sebastian எழுதிய கட்டுரையில் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் தலைவர் திரு. செல்வேந்திரா.*

[11] *இந்திய அமைதிப்படையில் வடமராட்ச்சி டிவிசனின் பிரதிக் கட்டளைத் தளபதிக்கு பிரஜைகள் குழு எழுதிய கடிதத்தில்–26 ஜனவரி 1989*

[12] *ITJP உடனான நடராஜா ஆனந்தராஜ் மற்றும் வல்வெட்டித்துறை மக்களது நேர்காணல்கள்.*

[13] *UTHR, Jaffna Report 3.*

[14] *இந்திய அமைதிப்படையில் வடமராட்ச்சி டிவிசனின் பிரதிக் கட்டளைத் தளபதிக்கு பிரஜைகள் குழு எழுதிய கடிதத்தில்–26 ஜனவரி 1989.*

மட்டுமன்றி, அதனைச் சுற்றியிருந்த ஒழுங்கைகள் மற்றும் வீதிகளில் இருந்த மக்கள் மீதும் மிக மோசமான தாக்குதலை மேற்கொண்டனர். 150 வரையிலான மக்களுக்கு மருத்துவ உதவி தேவைப்பட்டது. இதில் 100க்கும் மேற்பட்டோர் பாரதூரமான எலும்பு முறிவுகள், ஒன்றுக்கு மேற்பட்ட கண்டல் காயங்கள், காயங்கள் என்பன காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற வேண்டியிருந்தது. இவ்வாறு காயமடைந்தவர்களில், "மார்பகங்களிலும் கன்னங்களிலும் பற்களால் கடிக்கப்பட்டு" சிகிச்சைக்கு வந்திருந்த பெண் ஒருவரும் உள்ளடங்கும். இது பாலியல் ரீதியான தாக்குதல்களையும் இந்தியப் படைகள் மேற்கொண்டதற்கான ஆதாரமாக இருந்தது. இந்த வெறியாட்டத்தில் மருத்துவமனை ஊழியர்கள் பலரும் தாக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை உருவாகியதுடன், மருத்துவமனையும் 'செயலிழந்து' போனது என அச்சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினர். மேலும், காயமடையாமலிருந்த மருத்து வமனை ஊழியர்கள் பொலிகண்டி இராணுவ முகாமைச் சேர்ந்த கப்டனால் அவரது இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கே அவர்களுக்கு மேலும் தண்டனை வழங்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

இந்த 'வெறித்தனம்' கடைசியாக யாக்கரை இராணுவ முகாமின் தளபதியின் தலையீட்டினால் முடிவுக்கு வந்ததாக வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. யாக்கரை இராணுவ முகாம் தளபதி, தனது இரண்டாம்நிலை அதிகாரியை மருத்துவமனைக்கு 'அருள் கூர்ந்து' அனுப்பினார். அவர் தொடர்ச்சியான தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்ட பின்னர், கிட்டத்தட்ட மாலை ஆறு மணியளவில் மருத்துவமனை ஊழியர்கள் விடுவிக்கப் பட்டார்கள். இவர்களில் சிலர் இன்னமும் நடக்க முடியாதவர்களாக இருந்தார்கள்.

பிராந்திய துணைத் தளபதியால், ஜனவரி 19இலிருந்து ஒரு வாரத்தில், மேலும் தாக்குதல் நடைபெறுவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் எடுத்ததற்காக, பிரஜைகள் குழு நன்றி தெரிவித்தது. பிரஜைகள் குழு இதை அவருடைய இரக்கத்தின் வெளிப்பாடு என்று குறிபிட்டதோடு, இதுபோன்று இனிமேல் ஒருபோதும் நடக்காமல் இருப்பதற்கு உறுதியளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது. இது உள்ளூர் மக்களால் இந்திய அமைதி காக்கும் படையுடன் நல்லுறவைப் பேண எடுத்த முனைப்பும் நேர்மையும் கூடிய முயற்சிகள் என படையினர் புரிந்து கொண்டதனால், இத்தாக்குதலின் தீவிரத்தன்மை அவர்களையே உறைய வைத்ததாக ஒப்புக்கொண்டனர். ஆனால் இதை புரிந்து கொள்வதற்கு இவ்வளவு பெரிய இழப்பை சந்தித்திருக்க வேண்டாம் என்பதே பிரஜைகள் குழுவின் நிலைப்பாடாக இருந்தது. தாங்கள் இப்பொழுது மக்களிடம் அதன் நம்பகத்தன்மையை அனேகமாக இழந்து விட்டதாக கவலையடைந்தது. படையினரின் பழிவாங்கும் நடவடிக்கைகள் சாதாரணமாகிப் போன நிலையில், இந்த சம்பவம் முன்னர் நடந்த எல்லாவற்றையும் விட விஞ்சியிருந்தது.

'ஜனவரி 19ம் திகதி இந்திய அமைதி காக்கும் படை பொலிகண்டியை சுற்றிவளைத்த போது, தன்னைக் கைது செய்ததுடன், மோசமாகத் தாக்கியதாகவும்' இதில் பாதிக்கப்பட்ட ஒருவர் தன்னுடைய தனிப்பட்ட வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். [15] குறிப்பாக அவருடைய கை சேதமாக்கப் பட்டிருந்தது. ஒரு வாரத்திற்கு பிறகு படையினரால் அவர்மீது மேலும் தாக்குதல் நடாத்தப் பட்டதுடன், ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த கையின் நிலைமை மேலும் மோசமடைந்தது. அது பற்றிய மேலதிக தகவல்கள் அவரின் வாக்குமூலத்தில் விளக்கப் பட்டிருக்கவில்லை எனினும், பல மாதங்கள் கடந்த பின்னரும் கூட, தன்னுடைய கை சரியாகவில்லை என்றும், தன்னால் தொழில்செய்து, வருமானத்தை ஈட்டமுடியவில்லை என்றும் அவர் அதில் தெரிவித்துள்ளார். கடினமான காலங்களில் இந்திய இராணுவத்தை வழக்கமாக ஆதரித்து வந்த இந்திய பத்திரிகையான தி ஸ்டேட்ஸ்மேன் (The Statesman), மோதலின் போது அதிகப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக வருத்தத்தை வெளிப்படுத்தியது. மேலும் இந்திய அமைதி காக்கும் படையின் மூத்த அதிகாரிகள் தமக்கு ஏற்பட்ட இழப்புக்குப் பழிவாங்கும் நடவடிக்கையில் நேரடியாக தலைமை தாங்கியதாகவும் ஏற்றுக்கொண்டது.[16]

சபாரட்ணம் செல்வேந்திராவும், நடராஜ் ஆனந்தராஜ்ும் யாக்கரை பிரதேச தலைமையகத்தின் இந்திய அமைதி காக்கும் படை பிரிகேடியர் மற்றும் தளபதியை சந்தித்தனர். இந்த பிரச்சனைகளில் அவர்களின் பொறுப்புக்கூறல் பற்றி விளக்கம் கேட்பதே அதன் நோக்கமாகும். பொலிகண்டி முகாம் கப்டனையும் யாக்கரை முகாம் தளபதி அழைத்து, அவரது செயல்களுக்காக மன்னிக்குக் கேட்கவேண்டுமென்று கட்டளை இட்டார். தன்னிலை மறந்து கட்டளைகள் பிறப்பித்து தேவையே இல்லாமல் பெரும் தாக்குதலை [17] நடத்தியதாக வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு கருதியது. [18] இங்கே திரு. ஆனந்தராஜ் தலையிட்டு, மன்னிப்பு அவசியம் இல்லை. எதிர் காலத்தில் பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தப்பட மாட்டாது என்பதை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும் எனக்கோரினார். மாறாக கிடைத்தது மன்னிப்பல்ல. அக்கப்டன் மக்கள் மீது வன்மத்தைக் கொண்டிருப்பார்கள் என்று மக்கள் ஐயம் கொண்டிருந்தனர். அவர்கள் பயந்தது போலவே ஓகஸ்ற்றில் இது சோககரமான விளைவுகளை ஏற்படுத்தியது.

---

[15] *பிரமாணப்பத்திரம் (5 செப்ரெம்பர் 1989).*
[16] *The Statesman(18 August 1989).*
[17] *ITJP உடனான நடராஜா ஆனந்தராஜ் அவர்களின் நேர்காணல்.*
[18] *இந்திய அமைதிப்படையின் வடராட்ச்சி டிவிசனின் பிரதிக் கட்டளைத் தளபதிக்கு பிரஜைகள் குழு எழுதிய கடிதத்தில்–26 ஜனவரி 1989.*

## இரண்டாவது முன்னோடிச் சம்பவம்

ஒரு மாதத்திற்கு பிறகு, 15 பெப்ரவரி 1989, 47 வயதான கிறிஸ்தவ பாதிரியார் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த மேலும் பலருடன், தனது பெற்றோரின் வீட்டில் இருந்தார். அந்த வீடு இராணுவ முகாமிற்கு பக்கத்தில் இருந்தது. அவர்கள் எல்லோரையும் படையினருக்கு நன்றாகத் தெரியும். அன்று ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் ஒருவரின் துப்பாக்கியில் இருந்து கைதவறி அந்த வீட்டுக்கு அருகில் குண்டொன்று பாய்ந்தது. ரோந்து அணியினை சேர்ந்த 20க்கும் அதிகமான படையினர், அந்த குடும்பத்தினரை சுற்றி வளைத்து, துப்பாக்கிச்சூடு நடத்தியதோடு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அவர்கள் அடைக்கலம் கொடுத்ததாக குற்றம் சாட்டினர். பாதிரியார் படையினரால் தடுத்து வைக்கப்பட்டார். அவருடைய இரண்டு சகோதரிகளும் தாங்கள் அப்பாவிகள் என்று எதிர்ப்பு தெரிவித்தனர். படையினர் திரும்பிச்செல்லத் தொடங்கினர். திடீரென இரண்டு படைவீரர்கள் திரும்பிச் சுடத்தொடங்கினர். இதில் சகோதரிகளான எலிசபெத் ஜெயராணி விஜயதாசன், ஜொய்சி அதிசயராணி தியாகராஜா ஆகிய இருவரையும் சுட்டுக் கொன்றனர். ஜொய்சி அப்போது நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தார். படையினரின் குண்டு சிசுவின் தலையை துளைத்துச் சென்றது.[19] ஜொய்சியின் மூன்று வயது மகன் காலிலும் குண்டு பாய்ந்திருந்தது. பாதிரியார் மருத்துவ உதவியை நாடி, சிறுவனை தூக்கிக்கொண்டு சென்றபோது, ஒரு மாதத்திற்கு முன் நடந்த வன்முறைகளுக்கு மூளையாக இருந்த பொலிகண்டி முகாம் கப்டனை எதிர்கொள்ள நேர்ந்தது. தனது ஜீப் வண்டியை நிறுத்திய அந்த கப்டன் என்ன நடந்தது என்று வினவிவிட்டுச் சென்றார். சம்பவம் நடந்த சிறிது நேரத்தில், ஒரு இந்திய அமைதி காக்கும் படை அதிகாரி வந்து, நடந்த கொலைகளுக்கும் சம்பவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் என்று கடிதம் எழுதி கையொப்பம் வைக்குமாறும், அவ்வாறு செய்தால் அதற்கு பணம் தருவதாக அறிவுறுத்தினார் என்று தன்னுடைய வாக்குமூலத்தில் பாதிரியார் கூறியுள்ளார். மேலும் இதற்குப் பாதிரியார் மறுப்புத் தெரிவித்ததோடு, வெறுப்புடன் அந்த இடத்தை விட்டு நகந்ததாகவும் தனது எழுத்து மூலமான தனது சாட்சிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.[20] தனது சகோதரிகள் கொல்லப்பட்டதற்கு இந்திப் படையினரின் ‘பொதுவான பதட்டமே‘ காரணம் என பாதிரியார் பழிசுமத்தினார். சம்பவம் நடந்த சில காலத்தின் பின்னர், தேவாலய தலைமையகம் பாதிரியாரை வேறு திருச்சபைக்கு இடம் மாற்றியது.

இந்த தீவிரமான சம்பவங்கள இந்திய அமைதி காக்கும் படையினர் சிலரின் தனிப்பட்ட நடத்தையால் நடந்தது என்று கருதி விட முடியாது. பதின்ம வயது சிறுவர்களும் இளைஞர்களும் காரணமில்லாமல் தடுத்து வைக்கப்பட்டனர். திரு. நடராஜ் ஆனந்தராஜ் பிரஜைகள் குழு தலைவராக மட்டுமின்றி, ஒரு பாடசாலையின் அதிபராக, எப்போதுமே அவராக இராணுவ முகாம்களுக்குச் சென்று, அங்கே காரணமில்லாமல் தடுத்து வைக்கப்படும் இளைஞர்களை தனது மாணவர்கள் என்று உறுதி செய்து விடுவிக்க உதவினார்.[21]

## பிரஜைகள் குழுவின் ஒரு எழுதப்படாத ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தை

இந்த சம்பவங்கள் நடந்து சில நாட்களுக்கு பிறகு, வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு இந்திய அமைதி காக்கும் படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அதிகாரப் பூர்வமற்ற யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த முயன்றது. ஒருவரிடமிருந்து இன்னொரு தரப்பிற்குத் தகவல்களைப் பரிமாறி, இரு தரப்பையும் ‘ஒரு கனவான் ஒப்பந்தத்திற்கு‘ இணங்கச் செய்வதில் வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழு வெற்றிகண்டது.[22] அதன்படி இந்திய அமைதி காக்கும் படையினர், வல்வெட்டித்துறை பிரதான வீதிகளில் தாக்குதல் அச்சமின்றி ரோந்து செல்லலாம் என்றும், ஆனால் நகரத்தின உள் ஒழுங்கைகளை தவிர்க்க வேண்டும் என்றும் உடன்பாடு காணப்பட்டது. இதன் விளைவாக படையினருக்கு இரண்டு விதமான சுழற்சி முறைமை உருவாக்கப்பட்டது. இது வன்முறைகளின் எண்ணிக்கைகளை வெகுவாக குறைத்தது.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களை மீளவும் ஒருங்கிணைத்து, தமது பலத்தினை ஒப்பீட்டளவில் மேம்படுத்தி, பிற இடங்களில் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக தாக்குதல் நடத்தக்கூடும் என்ற பயத்தால், இந்த ஒப்பந்தம் இந்திய இராணுவத்தின் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியது.[23] மற்றைய இடங்களை ஒப்பிடும் போது, வல்வெட்டித்துறை பல மாதங்கள் அமைதியாக இருந்தாலும், சுற்றிவர இருந்த இராணுவ முகாம்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் உந்துகணைத் தாக்குதல் உட்பட்ட சிறிய தாக்குதல்கள் பலவற்றை நிகழ்த்தியமை இந்திய அமைதி காக்கும் படை அதிகாரிகளையும் படையினரையும் ‘ஒருவித பதட்ட நிலையிலேயே‘ வைத்திருந்தது.[24] இரு தரப்பினருமே இந்த ‘கனவான் ஒப்பந்தம்’ எந்த நேரத்திலும் மீறப்படலாம் என்று உணர்ந்திருந்தனர்.

---

[19] UTHR, *Jaffna Dossier 2*(2 March 1989).

[20] *பிரமாணப்பத்திரம் (4.3.1989).*


[21] *ITJP உடனான நடராஜா ஆனந்தராஜ் அவர்களின் நேர்காணல்.*

[22] *Ibid.*

[23] UTHR, *Jaffna Report 3.*

[24] *David Housego, Financial Times (17 August 1989).*

# வரைபடம் 02 : மூன்று-நாள் படுகொலையின் முக்கிய இடங்கள்



# 3. தாக்குதல்ச் சம்பவம்

## முதல் நாள். வல்வெட்டித்துறை. 02-08-1989:

ஓகஸ்ற் இரண்டாம் திகதி 1989, புதன்கிழமை, வல்வெட்டித்துறை ஒரு பரபரப்பான சந்தை நாளாக இருந்தது. அன்று பாடசாலை விடுமுறை என்பதால் அந்த நகரத்து இளைஞர்கள் விடுமுறை மனநிலையில் காணப்பட்டார்கள். கல்யாணி என்ற சிறுமி தேர்வில் நன்றாக தேர்ச்சியடைந்ததால், அவளுடைய அக்காவின் துவிச்சக்கர வண்டியை எடுத்து சென்று, தின்பண்டம் வாங்கிவர அனுமதி கிடைத்தது. கல்யாணி தத்தி தத்தி துவிச்சக்கர வண்டியை ஓட்டியபடி வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்த கடைக்கு செல்கிறாள். அருகாமையில் ஏறத்தாள 30 பள்ளிக்கூட மாணவர்கள் இரண்டு அணிகளாக பிரிந்து கிரிக்கெட் விளையாட ஆயத்தமாகினர். அதே நேரம் பொலிகண்டியைச் சேர்ந்த இளம் மீன்பிடித் தொழிலாளர்கள் சிலர் கடற்கரை வீதிவழியே வேலைக்கு நடந்து செல்லும் போது, நுல்லான் வைரவர் கோவில் அருகே இந்திய அமைதி காக்கும் படையினரால் தடுக்கப்பட்டனர்.



### இந்திய அமைதிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் காணப்பட்ட 'கனவான் ஒப்பந்தம்' முற் பகலில் முறிக்கப்பட்டது, ஆனால் இதற்கு பொறுப்பானவர்கள் யார் ?

அக்காலத்தில் வெளிவந்திருந்த செய்தித் தாள்கள் நடந்தது, இந்திய அமைதி காக்கும் படைமீது விடுதலைப் புலிகள் நடாத்திய 'பதுங்கித் தாக்குதல்' என விபரித்தன. ஃபினான்சியல் ரைம்ஸ் (Financial Times) வெளியிட்டிருந்த செய்தியில் டேவிட் கவுஸ்கோ விவரிக்கையில் இந்திய அமைதி காக்கும் படையை சேர்ந்த 30 படையினர் வல்வெட்டித்துறையை நோக்கி ரோந்து சென்றபோது, சுற்றியிருந்த வீடுகளின் கூரை முகடுகளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகிகள் 'திடீர் தாக்குதல்' நடத்தினர். ஆறு படையினர் கொல்லப்பட்டதோடு ஒரு அதிகாரி உட்பட பலர் காயமடைந்தனர். 'புலிகளின் வழக்கமான மிருகத்தனமான தாக்குதல்களின் ஏற்படும் இழப்புகளுடன் ஒப்பிடுகையில் இதில் ஏற்பட்ட இழப்புக்கள் மிகவும் மோசமானதே. தங்கள் தரப்பு ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டதால், இந்தியப் படையினர் பழிவாங்கிக் கொண்டனர்' என அதில் மேலும் எழுதப்பட்டிருந்தது. [25]

வல்வெட்டித்துறை மக்கள் இதை முற்றாகவே மறுத்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (UTHR) தமது விசாரணையில் கண்டறிந்தவற்றைத் தமது அறிக்கையில் பதிவு செய்திருந்தது: சிவபுர வீதியிலுள்ள புலிகளின் மறைவிடம் ஒன்றைச் சுற்றிவளைத்து, அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் எண்ணத்துடன் உடுப்பிட்டி–வல்வெட்டித்துறை வீதியில், சந்திக்கு சற்று அருகிலிருந்து மேற்குப்பக்க வீதிகளுக்குள் நுழைந்தனர் என்றும், இதில் ஒரு அணி ஊரிக்காடு முகாமிலிருந்து வந்ததாகவும், மற்றைய அணி, ஜனவரி 19 தாக்குதலுக்குப் பொறுப்பான பொலிகண்டி கப்டனால் வழிநடத்தப்பட்டது என்பதையும் வெளிப்படுத்தியிருந்தது. இந்திய அமைதி காக்கும் படை 'ஊடுருவலின்' விளைவே 'ஆறு மாதத்திற்கு மேலான அமைதியை குலைத்தது' என்று உள்ளூர் மக்களின் கருத்துகளை மேற்கோள் காட்டி மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது. [26]

யார் ஒப்பந்தத்தை மீறினார்கள் என்பது தொடர்பான உண்மை எப்படியாகவும் இருக்கட்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதி காக்கும் படையினரின் தொலைத் தொடர்பை ஒட்டுக்கேட்டு, அவர்கள் வருவார்கள் என்று முன்னரே அறிந்து, தயாராக காத்திருந்தார்கள். [27] இந்தியப் படைகள் வந்தபோது, தானியங்கி துப்பாக்கிகள் மூலம் திடீர்த் தாக்குதலை நடாத்திவிட்டு, தங்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாமல் அங்கிருந்து தப்பிச் சென்றனர். இந்தளவுக்கு மோசமான பின்விளைவுகளை இத்தாக்குதல் ஏற்படுத்தப் போகின்றது என்பதை அவர்கள் எண்ணியிருக்க மாட்டார்கள். 'இந்தியப் படையினர் பின்வாங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்த கிளர்ச்சியாளர்கள், இந்தியப் படையினர் இவ்வாறாக வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்றும், அவ்வாறு செய்தால் அது அவர்கள் வெளியேற வேண்டும் என்ற அழுத்தத்தை அவர்கள் மீது ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்த்து வேண்டுமென்றே இத்தாக்குதலை புலிகள் நடாத்தியிருக்கக்கூடும் என்று ஆய்வாளர்கள் தெரிவிப்பதாக' த கார்டியன் பத்திரிகை பின்னர் செய்தி வெளியிட்டிருந்தது. [28] தமிழீழ விடுதலைப் புலிகளுடம் இந்திய அமைதி காக்கும் படையும் ஒருவரையொருவர் 'தூண்டப்படுவதாக' உணர்ந்திருந்தனர் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. இருதரப்பும் விரும்பியதும் அதுவாகவே இருந்திருக்கக்கூடும்.

[25] *Ibid.*

[26] *UTHR, Jaffna Report 3.*

[27] *ITJP உடனான நடராஜா ஆனந்தராஜ் அவர்களின் நேர்காணல்.*

[28] *Chris Nuttall, Guardian(12 August 1989). இந்திய அமைதிப்படை மட்டுமே அவர்களிடமிருந்த தொலைபேசி முறைமையைப் பயன்படுத்தியது. விடுதலைப் புலிகள் வோக்கி–ரோக்கிகளையே பயன்படுத்தினர்கள்..*

### இந்திய அமைதி காக்கும் படையின் பழிவாங்கல்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் துப்பாக்கி சூடு நடத்தியபோது, இந்திய அமைதி காக்கும் படையின் ஒரு அணி வல்வெட்டித்துறைச் சந்தியிலும், மற்றைய அணி சந்தைப் பகுதியிலும் காப்பெடுத்துக் கொண்டிருந்தனர். இந்த நேரத்தில் தாக்குதலை நடாத்திய விடுதலைப் புலிகள் மின்னல் வேகத்தில் அங்கிருந்து மறைந்து சென்றனர். இருந்தபோதும் மேலதிக இந்திய அமைதி காக்கும் படைகள் அங்கு வந்ததைத் தொடர்ந்து, இந்திய இராணுவத்தினர், தமது தாக்குதலைத் தொடர்ந்தனர். அரை மணிநேரத்தில் சுற்றியிருந்த முகாம்களில் இருந்து, ஆயிரம் வரையான படையினர் வல்வெட்டித்துறையில் குவிக்கப்பட்டு, வீதித் தடைகள் மூலம் நகரமே மூடப்பட்டது. அங்குள்ள மக்கள் வெளியேற முடியாமல் மாட்டிக்கொண்டனர். முன்னரே இப்படியான சந்தர்ப்பங்களில் நடந்த வன்முறைகளை அனுபவித்திருந்தாலும், இந்த முறை என்ன நடக்கப்போகின்றது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து இரண்டு வருடங்களில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களைக் காட்டிலும், 1989 ஓகஸ்றில் வல்வெட்டித்துறையில் நடத்த சம்பவம் மிகமிக மோசமானது என த பினான்ஸியல் ரைம்ஸ் நிருபர் விபரித்தார்.

பரீட்சையில் நன்றாக எழுதியமைக்காக தின்பண்டங்கள் வாங்க அக்காவின் துவிச்சக்கர வண்டியில் சென்ற கல்யாணியை, அங்கிருந்த கடைக்கார இளைஞர், கடையின் பின்புறத்திற்கு அழைத்துச் சென்று, கொல்லைப்புற மதில் ஊடாக தூக்கி, பக்கத்து வீட்டாரிடம் ஒப்படைக்கிறார். அவர்கள் கல்யாணியை பல வேலிகளையும் படலைகளையும் தாண்டச் செய்து, விரைவாகவே வீட்டை அடைய உதவுகிறார்கள். பக்கத்திலேயே கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் 13 வயதான மோகனும் ஒருவன். [29] எல்லோரும் சிதறி ஓடிய போது, அவனும் அவனது சகோதரனும் உடுப்பிட்டி ஆண்கள் பாடசாலையின் பின்னால் ஒளிந்திருந்த கூட்டத்துடன் இணைந்து கொண்டனர். அந்தப் பருவ வயதினரே இந்திய இராணுவத்தினரால் இலகுவாக தாக்கப்படுவார்கள் என்பது எல்லோருக்குமே தெரிந்திருந்தது. துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து, வல்வெட்டித்துறைச் சந்தியில் உள்ள கடை உரிமையாளர்கள் கடைகளை பூட்ட முயன்றனர். ராஜகுரு புஸ்பராணி தனது வாழைப்பழக் கடையை சாத்தி முறையே 14, 11 வயதுடைய ஜெகன்ராஜ் [30] மற்றும் ஜவன்ராஜ் ஆகிய தனது இரு மகன்களுடன் கடைக்குள்ளேயே ஒளிந்து கொள்கிறார். அருகில் இருந்த கடைக்காரர் 'வழமையாக பிரச்சனை நடந்தால் கடையை மூடி பின் வழியே வெளியே செல்வது வழக்கம் என்றும், ஆனால் இம்முறை படையினர் உள்ளே வந்து தன்னையும் பொருட்கள் வாங்க வந்திருந்த இரண்டு



பெண்களையும் தாக்கியதோடு மட்டுமில்லாமல், கடையிலிருந்த பொருட்களைக் கொள்ளையடித்தது மட்டுமன்றி, அவர்களையும் ஏனையவர்களையும் வல்வெட்டித்துறைச் சந்திக்கு அனுப்பியதுடன், அங்கே அவர்கள் இருத்தப்பட்டு சுற்றிவர இராணுவம் நின்றதாகவும்' பின்னர் கூறினார். [31] புகைப்படக் கடையின் உரிமையாளர் நல்லதம்பி செந்திவேல் [32] கடையின் நிலத்தில் பதுங்கிக் கொண்டார். கடைக்கு வெளியே காயம் அடைந்தவர்களின் முனகல் சத்தம் கேட்டது. அவர் காயமடைந்தவர்களுடன் கதைக்க முயன்றார், ஆனால் இந்தியப் படையினர் அவரையும் வல்வெட்டித்துறைச் சந்திக்குக் கொண்டுசென்று கொழுத்தும் வெய்யிலில் இருக்கும்படி நிர்ப்பந்தித்தார்கள். நகரசபைத் தலைவரான குணலிங்கம் கருணானந்தராஜா[33] பத்திரிகைக் கடையொன்றில் வேலை செய்து கொண்டிருந்து அக்கடையின் உரிமையாளரின் மைத்துனன் முறையான ஒருவருடனும் பிறிதொரு சிறுவனுடனும் கடையில் அடுக்கி வைக்கப்பட்ட பொருட்களுக்கு பின்னால் மறைந்திருந்தார்கள். முதலில் பணத்தை கொள்ளையடிக்க வந்திருந்த படையினரிடமிருந்து தப்பித்திருந்தாலும், பிறகு மிட்டாய்களை திருட வந்த மற்றொரு படையினரிடம் சிக்கி, வெளியே இழுத்து வரப்பட்டார்கள். படையினர் பையனை துரத்தி விடுகிறார்கள். பிறகு மற்றைய இருவரையும் கடுமையாக தாக்கி அவர்கள் மீது துப்பாக்கியால் சுடுகிறார்கள். திரு. கருணானந்தராஜாவின் வலது மார்பைத் துளைத்த குண்டு முதுகுப் பக்கமாக வெளியேறியது. இரத்தப் பெருக்குடன் கீழே விழுந்த அவர் இறந்ததுபோல் தரையில் கிடந்தார். அவருக்கருகே கடை உரிமையாளரின் மைத்துனர் ராசையா ராஜரத்தினம் ரத்த வெள்ளத்தில் கிடந்தார். மக்கள் எல்லாம் பயத்துடன் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்த அதே நேரம், வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்த மூன்றாவது கடைக்காரார் [34] கடையை தனது மகனுடன் சேர்ந்து அவசரமாக சாத்த முனைகிறார், 'இருவராலும் முடியாமற் போகவே' கடையின் பின்புறத்தால் தப்ப முனைந்தார்கள். அந்நேரத்தில் அங்கே வந்த படையினர் அவருடைய மகனை வெளியே இழுத்து வந்து தந்தைக்கு முன்னால் சுட்டுக் கொன்றனர்.



### வல்வெட்டித்துறைச் சந்தியின் கிழக்குப் பக்கத்தில் மின்னல் வேகத்தில் பரவிய வன்முறை

வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களைக் கேட்க, ஏற்கனவே ஒரு மணிநேரத்திற்கு முன்னர் நுள்ளான் வைரவர் கோவில் அருகே தடுத்து வைக்கப் பட்டிருந்த மீனவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற தப்பி ஓடத்



[29] ITJP உடனான மோகனின் நேர்காணல்.
[30] see Jeganrai in India's Mylai (film).
[31] பிரமாணப்பத்திரம் (திகதி காணவில்லை) : கடைஉரிமையாளர், அனைத்துலக மன்னிப்புச்சபை ஆவணம்.
[32] பிரமாணப்பத்திரம் : நல்லதம்பி செந்திவேல் (16 ஓகஸ்ற், 1989)
[33] பிரமாணப்பத்திரம் : குணசிங்கம் கருணாந்தராஜா, மாநகரசபைத் தலைவர் (17 செப்ரெம்பர், 1989). Also India's Mylai (film).
[34] பிரமாணப்பத்திரம் : குட்டிப்பிள்ளை அப்பாத்துரை, (2 செப்ரெம்பர் 1989).

தொடங்கினர். அவர்களை நோக்கிப் படையினர் கண்டமேனிக்குத் துரத்தித் துரத்திச் சுடத்தொடங்கினர். இதில் 18 வயதான ரமேஷ்குமார் சோதிலிங்கம், 20 வயதான விஜயரத்தினம் முரளிதரன் மற்றும் 23 வயதான பொன்னுத்துரை ரசேந்திரம் ஆகியோர் பலியாகினர். [35] ரமேஷ்குமார் சோதிலிங்கத்தின் உழைப்பை தான் அவரின் குடும்பம் நம்பியிருந்தது. முன்னர் நடந்த வன்முறையொன்றில், தனது மீன் பிடி உபகரணங்களை இழந்திருந்தார். கடைசியில் காயமடைந்த அவரை நண்பர்கள் ஊறணியில் உள்ள வல்வெட்டித்துறை அரசாங்க மருத்துவமனையில் சேர்த்தனர். ஆயினும் அவர் அங்கே இறந்தார். விஜயரத்தினம் முரளிதரன் குடும்பமும் அவர் ஒருவரின் உழைப்பைத்தான் நம்பியிருந்தது. அவருடைய தந்தை 'நோய் வாய்பட்டு படுத்த படுக்கையாக' இருந்தார். நடந்த சம்பவத்தைக் கேள்விபட்ட அவரின் தாய் [36] மருத்துவமனைக்கு சென்றபோது, மகனின் மரணச் செய்திதான் அவரின் காதுக்குக் கிடைத்தது. 'நாங்கள் கையறு நிலையில் இருக்கிறோம், உதவிக்கு யாருமில்லை' என்பதே அந்த தாயின் வெளிப்பாடாக இருந்தது. இதில் கொல்லப்பட்ட இன்னொருவர் பொன்னுத்துரை ராசேந்திரம், வயது 23, ஆவர்.

நகரத்தின் கிழக்கு பகுதியில் இன்னும் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஊறணிச் சுற்றாடலில் நடந்த துப்பாக்கிச் சூட்டில், தனது தந்தை வீட்டுக்கு அருகில் வசித்த செல்வரத்தினம் சிவமதி, தனது இரண்டு மகன்களையும் பயத்துடன் அவரின் தந்தை வீட்டுக்கு அனுப்பி, தான் பின்னே ஓடி வருவதாக தன் குழந்தைகளிடம் கூறினார். [37] அவர் ஓடி வந்த போது படையினரால் சுடப்பட்டார். 'அவள் மார்பிலிருந்து இரத்தம் பாய என் காலடியில் விழுந்து அப்போதே இறந்து போனாள்' என்று அவரது தந்தை பின்னர் விபரிக்கிறார். ஏற்கனவே மூன்று வருடத்திற்கு முன்னர் தமிழர்களுக்கு எதிரான வன்முறையில் கணவனை இழந்த சிவமதி, இப்போது இறந்து போனது அவளது தந்தையை 'நிர்க்கதியாக்கியது'. தந்தை பிடிக்கும் மீன்களை விற்று உதவியவள், தனது சிறு மகன்களை தன் தந்தையின் பொறுப்பிலே விட்டுச் சென்றுவிட்டாள்.



ரமேஸ்குமார் சோதிலிங்கம்

**அதே நேரம், 'திடீர்த் தாக்குதல்' நடந்த சிவபுர ஒழுங்கையை சுற்றி உடனடியாக சுறிவைத்து நடந்த இந்திய அமைதி காக்கும் படைகளின் கணிசமான வன்முறைகள்.**

வன்முறை கட்டவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து, தீருவில் ஒழுங்கையில் தனது மனைவி பிள்ளைகளுடன் வசித்த கடற்தொழிலாளியான பொன்னுத்துரை சண்முகலிங்கம் [38] வீட்டிலிருந்து குடும்பத்துடன் வெளியே ஓடினார், அவர் கோவிலை நோக்கி ஓட, மனைவியும் பிள்ளைகளும் அவரது சகோதரரின் வீட்டை நோக்கி ஓடினார்கள். கணவன், மனைவி மற்றும் பிள்ளைகளின் கண் முன்னே சற்றுத் தூரத்தில் இந்திய அமைதி காக்கும் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தடுக்கவோ கேள்வி கேட்கவோ முடியவில்லை. மனைவி தனது குழந்தைகளுடன் தொடர்ந்து ஓடினார். தெனியம்பை வீதியில் தனியாக வீட்டில் சமைத்துக் கொண்டிருந்த பெண்ணுக்கு துப்பாக்கி சத்தங்கள் கேட்டன. [39] அந்தப் பெண் வீட்டுக்குள்ளேயே ஒளிந்திருந்து கொண்டாள். 'கறுப்பு துணியை தலையில் கட்டியிருந்த படையினா்' வீட்டிற்கு எரியூட்டினர், வீடு புகைப்பிடித்து எரியத் தொடங்கியதுடன், வெடிப்புச் சத்தங்களும் கேட்டன. செய்வதறியாது திகைத்து நின்றாள் அப்பெண். அந்த பெண்ணின் 'முக்கியமான ஆவணங்கள்' உட்பட்ட உடமைகள் எல்லாம் 'எரிந்து சாம்பல்' ஆகின. அருகாமையில் தனது குழந்தைகளுடன் வசித்து வந்த இன்னொரு பெண்ணின் [40] வீட்டுக்குச் சென்ற படையினர் 'எக்காளமிட்டுச் சிரித்தபடி' வீட்டைக் கொழுத்தினர். அந்தப் பெண்ணால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவரது வீட்டுப் பொருட்கள் எல்லாம் எரிந்ததோடு, வீட்டின் முன்பகுதி முற்றாக அழிக்கப்பட்டது. பாடசாலை அதிபரும் பிரஜைகள் குழுச் செயலாளருமான திரு. ஆனந்தராஜ் தெனியம்பை வீதியில் உள்ள தனது வீட்டில் இருந்தார். ஏற்கனவே தின்பண்டங்கள் வாங்க அக்காவின் துவிச்சக்கர வண்டியை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்றிருந்த



ஒன்பது வயதான கல்யாணி [41] அவரது மகள் தான். குறுக்கு வீதிகளூடாக ஓடி, தெய்வாதீனமாகப் பாதுகாப்பாக வீட்டை அடைந்திருந்தாள். அவரது குடும்பத்தால் வீட்டை உள்ளே அடைந்துகொண்டு காத்திருப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. காற்றில் எறிகணைகளின் சத்தமும், உயிருக்கு பயந்தோடும் மக்களின் கதறல்களும் கேட்டதுடன் எரிந்த கட்டங்களில் இருந்து எழுந்த புகை எல்லா இடமும் பரவியிருந்தன. இதையெல்லாம் தாண்டி அவர்களுக்கு இராணுவ வாகனங்கள் வந்துகொண்டிருந்த சத்தமும் கேட்டது.

---

*[35] பிரமாணப்பத்திரம் : ராசையா சோதிலிங்கம் (25 ஓகஸ்ற் 1989).*
*[36] பிரமாணப்பத்திரம் : வள்ளிநாயகி, விஜயரட்ணம் முரளிதரனின் தயார், (31 ஓகஸ்ற் 1989)*
*[37] பிரமாணப்பத்திரம் : சங்கரப்பிள்ளை பூபாலு (21 ஓகஸ்ற் 1989), மற்றும் பிரமாணப்பத்திரம் : (19 செப்ரெம்பர் 1989).*
*[38] பிரமாணப்பத்திரம் : திருமதி பத்மாதேவி சண்முகலிங்கம் (14 ஓகஸ்ற் 1989).*
*[39] பிரமாணப்பத்திரம் : ஜெயராணி ரஞ்ஜனாதாஸ், India's Mylai(1989) p22.*
*[40] பிரமாணப்பத்திரம் : தனபாலசிங்கம் சுவர்ணலதா, India's Mylai(1989) p17.*
*[41] ITJP உடனான நடராஜா ஆனந்தராஜ் அவர்களின் மகள் கல்யாணியின் நேர்காணல்.*

செல்லத்துரை செந்திவேல்

1.00

1.00

இல: 14153

AFFIDAVIT

I, Mr Sellathurai Senthivel, aged 62 years, being a hindu, Srilankan Tamil, residing at Kallikovil lane, Valvettiturai, do hereby solomenly sincerely and truely declare and affirm as follows:-

1. I am the affirmant herein, holding National Identity Card No 272090246 V.
2. On 2nd of August 1989, Indian Army entered into my house and arrested my son Mr Senthivel Sakthivel for inquiry. I have begged them to release my son as he has never identified himself in any activities against the state or other organizations. But they have not released him and taken into custody. As the curfew was impossed by the Indian Army I was not allowed to go outside.by the Indian Army. After the curfew was relaxed I heard my son's dead body was in the junction. When I went and see my son was shot and dead. As the body was unable to remove I have burnt his body in the junction.

Declared and affirmed at Valvettiturai this 31st day of August 1989.

செ. செந்திவேல்

Declarant




Before me.

J.P.

J.P.

THANBABANIKATHESIGAR J.P.
CHIEF PRIEST
MUTHUMARI AMBAL DEVASTHANAM
VALVETTITHURAI.

## முதியவர்களையும் பெண்களையும் இலக்கு வைத்து சுற்றி வளைப்பைத் தொடர்ந்த இந்திய அமைதி காக்கும் படை

பக்கத்தில் இருந்த இன்னொரு ஒழுங்கைக்கு வந்த இந்திய அமைதி காக்கும் படையினர், 23 வயதான மீன்பிடித் தொழிலாளியான செந்திவேல் சக்திவேல் என்பவரை வீட்டில் இருந்து 'விசாரணைக்காக' கொண்டு சென்றனர். 'அவர் அரசாங்கத்திற்கு எதிரான எந்தவித நடவடிக்கைகளிலும் ஈடுபடவோ, இயக்கங்களில் இணைந்து செயற்படவோ இல்லை' என்று கூறி, அவரது தந்தை [42] தன் மகனை விட்டுவிடுமாறு எவ்வளவு கெஞ்சியும் படையினர் கேட்கவில்லை. தந்தை கையறு நிலையில் இருந்தார். இரண்டு நாட்கள் கடந்த பின்னரும் மகனைப் பற்றி எந்த தகவலும் கிடைக்கவில்லை. இன்னொரு இடத்தில் ஆதியருணாச்சலம் வீட்டுக்குள் புகுந்த இந்திய அமைதி காக்கும் படையினர் 18 வயதான பரசர் மற்றும் 19 வயதான பரஞ்சோதி, 12 வயதுப் பாலகன் சுந்தரேஷ்வரன் ஆகிய மூன்று சிறுவர்களையும் பிடித்துச் சென்றனர். அதனைத் தடுக்க முற்பட்ட குடும்பப் பெண்களில் ஒருவர் இந்திய இராணுவத்தினர் சுட்டதில் தனது விரலின் ஒரு பகுதியை இழக்க நேர்ந்தது. [43] சில மணி நேரங்களுக்கு பிறகு அண்ணன்கள் இருவரும் 12 வயது பாலகனிடமிருந்து பிரிக்கப்பட்டனர். யாரும் வீடு திரும்பவில்லை. அதே நேரம் கந்தசாமி தங்கராசா, [44] வல்வெட்டித்துறை மத்தியில் உள்ள தனது 76 வயதான சகோதரியை சந்திக்கச் சென்றார். சகோதரியின் வீட்டுக்கு வந்த படையினர் அவர்களை வெளியேறுமாறு பணித்தனர். இருவரும் தாங்கள் மிகவும் 'வயதானவர்கள்' தங்களுக்கு விலக்களிக்குமாறு கேட்டும் படையினர் அவர்களை வல்வெட்டித்துறைச் சந்தி வரைக்கும் நடக்க வைத்து அங்கு ஏற்கனவே 'எல்லா வயதிலும் இருந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுடன்' இருத்தி வைத்திருந்தனர். அங்கு கொண்டு வரப்பட்ட மக்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருந்தது. புகைப்பட கடை வைத்திருக்கும் நல்லதம்பி செந்தில்வேல் அருகாமையில், புத்தகக்கடை வைத்திருந்தவரின் மகன் மதிவர்ணன் அப்பாத்துரை என்ற இளைஞன், அக்கூட்டத்தில் வலுக்கட்டாயமாக கொண்டு வரப்படுவதை அடையாளம் கண்டார். அவ் இளைஞன் அடி வாங்கியவாறே நடந்து சென்று கொண்டிருந்தான். வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்த டயானா மினி சினிமாவில் படம் பார்த்துக் கொண்டிருந்த அல்லது ஒளிந்து கொண்ட எல்லோரையும் இழுத்து வந்து அக்கூட்டத்தில் சேர்த்தனர். 75 வரையான மக்கள் கொழுத்தும் வெய்யிலில் இருத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

[42] பிரமாணப்பத்திரம் : செல்லத்துரை செந்திவேல் (31 ஓகஸ்ற் 1989).
[43] ITJP உடனான வல்வெட்டித்துறைச் சாட்சிகளின் நேர்காணல்.
[44] பிரமாணப்பத்திரம் : திருமதி மாணிக்கரத்தினம் சித்திவிநாயகர் (திகதி காணவில்லை)

## சாப்பாட்டுக் கடைகள் உள்பட்ட வியாபார நிலையங்களை இலக்கு வைத்த இந்திய அமைதி காக்கும் படை

வெவ்வேறு கடைகள் படையினரால் தீ மூட்டப்பட்டு எரிக்கப்பட்ட போது, பல கடைகள் 'வேகமாகப்' பற்றி எரிந்தன, அதில் திரு. சக்திவேலின் கடையும் ஒன்று. இன்னொன்று பல்பொருள் அங்காடி. [45] இரண்டு பக்கமும் நெருப்பு மூட்டப்பட்டு கடை எரிகையில் கண்ணாடிகள் உடைவதையும், பொருட்கள் உருகுவதையும், மின்சார சாதனங்கள் எரிவதையும், சீமெந்து மேற்கூரை வெடிப்பதையும், அதன் உரிமையாளர் நேரடியாக பார்த்துக் கொண்டிருந்தார். இந்த அழிப்பில் நகரத்தின் உணவு விநியோகம் முற்றாக தடைப்பட்டது. நெஞ்சில் சுடப்பட்ட திரு. கருணானந்தராஜா அப்போதும் இறந்து கிடப்பது போலவே பாவனை செய்தார். படையினர் பத்திரிகைக் கடையை கொழுத்த வந்தனர். அவரோடு சுடப்பட்ட ராசையா ராஜரத்தினம் அப்போது உயிருடன் இல்லை. திரு. கருணானந்தராஜா அங்கிருந்தே நெருப்பில் சாவதா அல்லது உயிருக்கு பயந்து எழுந்து ஓடுவதா என்ற பலத்த குழப்பத்தில் இருந்தார். காயத்தை பொருட்படுத்தாமல் 'மிகவும் கஸ்டப்பட்டு எழுந்தேன்' என்று பின்னர் விபரித்தார். அந்த சூழ்நிலையிலும் படையினர் அவரை இழுத்துச் சென்று ஏற்கனவே சுற்றி வளைக்கப்பட்டிருந்த மக்களோடு இருக்க வைத்தனர்.



ராசையா ராஜரத்தினம்

**அந்த நாளின் நடுப்பகுதியில் அமைதி ஒன்று நிலவியது. துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் எதுவும் கேட்கவில்லை. தீருவில் பகுதியில் சுற்றிச்சுற்றி இருக்கும் ஒழுங்கைகளில் வசிப்பவர்கள் சில பேர், குறிப்பாக பிரச்சனை ஆரம்பித்த சிவபுர ஒழுங்கை வீட்டைச் சுற்றியுள்ளவர்கள், சரியான பாதுபாப்பைத் தேடிச் செல்ல துணிந்தனர். ஆனால் எல்லோருக்கும் அந்த துணிவு வரவில்லை.**

[45] பிரமாணப்பத்திரம் : பாலசுந்தரம் ராமச்சந்திரன் (25 செப்ரெம்பர் 1989).



பொன்னையா காளிதாஸ்

'பதுங்கித் தாக்குதல்' நடந்த சிவபுர வீதி, வல்வெட்டித்துறையில் உள்ள மற்ற எந்த ஒழுங்கையையும் விட அதிகமான அழிவுகளைச் சந்திக்க நேர்ந்தது. உடைமைகள் அழிக்கப்பட்டதோடு 23 வீடுகள் எரிக்கப்பட்டன. ஆனந்தசாமி சுபத்திரை அம்மா [46] அவரது மகள், பக்கத்து வீட்டுப் பெண் மற்றும் அப்பெண்ணின் இரண்டு குழந்தைகளும் வீட்டில் இருக்கும் போது, இந்திய அமைதி காக்கும் படையினர் திடீரென உள்ளே நுழைந்தனர். உள்நுழைந்த படையினரில் சிலர் பெண்களை துப்பாக்கி முனையில் வைத்திருக்க, மற்றவர்கள் வீட்டுப் பொருட்களுக்கு தீ வைத்தனர். அரைமணி நேரத்தில் பெரும் இழப்பு ஏற்பட்டது. பக்கத்து வீடுகளும் இதே போல் எரிக்கப்பட்டன. கனகசபை தங்கராசா என்ற முதியவர் வீட்டுக்கு அன்று மதியம் இந்திய அமைதி காக்கும் படையினர் வந்தனர். [47] அவரது மருமகன் 25 வயதான பொற்கொல்லர் பொன்னையா காளிதாஸை சுவருடன் நிறுத்திவைத்து சுட்டுக் கொன்றார்கள். அவரது மகள் மற்றும் பிள்ளைகளையும் சுட்டுக்கொல்லப் போவதாக மிரட்டினார்கள். தொடர்ந்து அடுப்படியில் இருந்த மண்ணெண்ணையை எடுத்து, சுவர்களில் தெளித்து வீட்டிற்குத் தீ மூட்டினர். வீடு 'முற்றாக' எரிந்து போனது. அதற்கு பிறகுதான் குடும்பத்தினர் பொன்னையா இருந்த இடத்திற்குப் போகமுடிந்தது. அவர்கள் அங்கே போனபோது தான் பொன்னையா இறந்து கிடந்ததை அவர்கள் உறுதிப் படுத்தினர்.



கந்தசாமி மகேந்திரராஜா



கந்தசாமி வேலும்மயிலும்

[46] பிரமாணப்பத்திரம் : ஆனந்தசாமி சுபத்திரையம்மா, India's Mylai(1989) p21.

[47] பிரமாணப்பத்திரம் : கனகசபை தங்கராசா (14 ஓகஸ்ற் 1989)

வல்வெட்டித்துறை சந்தியில் தேநீர்க் கடை வைத்திருக்கும் 62 வயதான ராசமாணிக்கம் சிவலிங்கம் [48] காலையில் வேலைக்குச் சென்று, வீடு திரும்பவில்லை. ராசமாணிக்கம் சிவலிங்கத்தின் வீட்டிற்கு எதிர் வீட்டில் அவருடைய மகள் தன் குடும்பத்துடன் வசித்து வந்தார். ராசமாணிக்கம் சிவலிங்கத்தின் சகோதரரான, ஓய்வுபெற்ற தபாலதிபர் ராசமாணிக்கம் நடராஜா தன்னுடைய ஓய்வு பெற்ற ஆசிரிய மனைவியுடன் பருத்தித்துறையில் வசித்தார். நடராஜா வீட்டில் இருந்தபோது, பல தடவைகள் இந்தியப் படைகள் அவரை வீட்டிலிருந்து பிடித்துச் சென்று, அடித்து அவமானப் படுத்தியிருந்தது. ஒரு வாரத்திற்கு முன்னர் பருத்தித்துறையில் ஏற்பட்ட பதட்டநிலை காரணமாக நடராஜாவும் அவரது மனைவியும் வல்வெட்டித்துறையிலிருந்த தனது சகோதரர் வீட்டிற்கு வந்திருந்தனர். [49] சிவலிங்கத்தின் வீட்டில் கணவனை இழந்த அவருடைய சகோதரியும் விநாயகமூர்த்தி அருள்சோதி எனப்படும் 25 வயதான அவருடை மகனும் குடியிருந்தனர். அருள்சோதி இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். [50] வல்வெட்டித்துறையில் பிரச்சனை ஆரம்பித்ததும், எதிர் வீட்டில் இருந்த சிவலிங்கத்தின் மகள் தன் பிள்ளைகளுடன் வேகமாக வீதியைக் கடந்து தந்தையின் வீட்டுக்கு ஓடி வந்தார். இரண்டு மணியளவில் அவர்களுடைய ஒழுங்கை வழியாக வெறித்தனத்தோடு வந்த படையினர் மகளது வீட்டை அடித்து நொருக்கி, கொழுத்தினர். தமது வீட்டுக்கூரை எரிந்து 'துண்டு துண்டாக தரையில் விழுவதை' அவர் தந்தை வீட்டிலிருந்தவாறே ஒளிந்திருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். ராசமாணிக்கம் சிவலிங்கம் [51] மற்றும் விநாயகமூர்த்தி அருள்சோதி ஆகிய இரு ஆண்களையும் குடும்பத்தினர் அங்கிருந்து தப்பிச் செல்லுமாறு அவசரப் படுத்தினர். ஆனால் அவர்கள் இருவரும் 'மதிப்புமிக்க குடி மக்களை' இந்திய இராணுவம் ஒருபோதும் எதுவும் செய்யாது என்று நம்பி அங்கேயே இருந்தனர். அப்போது முன்கதவு வழியே உள்ளே நுழைந்த படையினர் அங்கிருந்த ஆண்கள் இருவரையும் சுட்டுக் கொன்றனர்.

தீருவில் ஒழுங்கையில் இரு சகோதரர்கள் [52] அவர்களது மனைவிகள், மற்றும் தாயோடு வீட்டில் இருந்தனர். ஆறு இந்திய அமைதி காக்கும் படையினர் வீட்டுக் காணிக்குள் வந்து அங்கிருந்த காரைக் கொழுத்தும் போது எல்லோரும் அடுப்படியில் ஒளிந்திருந்தனர். ஆனால் படையினர் வீட்டுக்குள் வந்து அங்கிருந்த பொருட்களை எரிக்கும் போது, சகோதரர்களில் ஒருவரான கந்தசாமி மகேந்திரராஜா அவர்கள் கையில் சிக்கினால் சுட்டு விடுவார்கள் என்று பயந்தார். தொடர்ந்து தான் 'தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் இல்லை' என்று கத்தினார். குடும்பத்தினர் எல்லோரையும் வெளியே இழுத்து வந்த இந்தியப் படையினர், கந்தசாமி வேலாயுதம்

[48] ராசமாணிக்கம் சிவலிங்கம் 'V.V.T. Incident Report' (2 ஓகஸ்ற் 1989).

[49] திருமதி செல்வரத்தினம் 'V.V.T. Incident Report' (2 August 1989).

[50] யோகராணி நடராஜா (12 ஓகஸ்ற் 1989)

[51] திருமதி நிலானி சிவரணம் (12 ஓகஸ்ற் 1989)

[52] பிரமாணப்பத்திரம் : வேலும்மயிலும் மகாலட்சுமி, கந்தசாமி வேலும்மயிலுமின் மனைவி (14 ஓகஸ்ற் 1989).

மற்றும் கந்தசாமி மகேந்திரராஜா இருவரையும் சுட்டனர். சகோதரர்களின் மனைவிகள் இருவரும் அவர்களின் கணவர்களை இறுக்கமாக அணைத்தபடி இருந்தனர். படையினர் அவர்களையும் சுட்டனர். அவர்களுக்கு அதனால் காயம் ஏற்பட்டது. எனினும் இருவரையும் படையினர் காயங்களோடு விட்டுச் சென்றனர். ஆண்கள் இருவரும் கொல்லப்பட்டனர். இருவரது உடலும் அவர்கள் விழுந்த இடத்திலேயே இருந்தன. சரியான தகனக் கிரிகைகள் சாத்தியம் இல்லை. படையினர் அதே ஒழுங்கையில் துப்பாக்கிகளால் 'தொடர்ச்சியாகச் சுட்டபடி' இன்னொரு வீட்டுக்குள் நுழைந்தனர். அந்த வீட்டில் இருந்த பெண்ணின் [53] நான்கு வயதுக் குழந்தை ஒரு குண்டினால் தாக்கப்பட்டது. 'கடவுளின் அருளால்' அந்த குழந்தை உயிர் பிழைத்தாலும் மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல முடியுமா என்ற கேள்விக்கு இடமே இல்லை. அது மட்டுமின்றி எப்போது மருத்துவ உதவி கிடைக்கும் என்று அறிய வழியும் இல்லை.

***இன்னும் பலர் தங்களது வீட்டை விட்டு இன்னும் பாதுகாப்பான, உறுதியான வீடுகளை நோக்கி ஓடிச் சென்றனர். கொங்கிறீற் கூரையுள்ள வீடுகள் இந்திய அமைதி காக்கும் படையின் எறிகணைகளுக்கு பாதுகாப்பானவை. மெல்லிய சுவர்களும் ஓடு அல்லது அஸ்பெஸ்ர் சீற் கூரைகளையும் கொண்ட வீடுகள் எறிகணைகளுக்குப் பாதுகாப்பானவையல்ல. எறிகணைகள் அவற்றைத் துளைத்துக் கொண்டு உள்ளே வந்துவிடும்.***

### திரு. சிவகணேசனின் வீட்டில்:

பாதுகாப்பு தேடி ஏராளமான மக்கள் ஓடிவந்த பெரிய வீடு வெளிநாட்டில் வசித்த திரு. சிவகணேசனுக்குச் சொந்தமானது. 34 வயதான கட்டடப் பொருட்கள் கடை உரிமையாளர் [54] தனது மூத்த குழந்தையுடன் சிவகணேசன் வீட்டுக்கு ஓடிச் சென்றார். 'இப்படியான நேரங்களில் பாதுகாப்புக்காக அவரது வீட்டுக்குத்தான் செல்வோம்" என அவர் கூறினார். அங்கே 'கிட்டத்தட்ட 70 பேர் தஞ்சமைடைந்திருந்தனர்'. பெண்களும் குழந்தைகளும் பெரும்பாலானவர்களாக இருந்தார்கள். ஓய்வு பெற்ற தபாலதிபர் ராமசாமி சிவகுரு [55] தனது மகள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன் அங்கிருந்தார். வல்வெட்டித்துறைச் சந்தியில் துப்பாக்கிச் சத்தம் 'விட்டுவிட்டுக்' கேட்டது. மதியம் மூன்று மணியளவில் வெடிச் சத்தமும் அழு குரல்களும் மிக அருகில் கேட்டன. படையினர் நெருங்கி வருவதை 'உணர' முடிந்தது. இந்திய அமைதி காக்கும் படையினர் பின்பக்க சுவரில் ஏறி வீட்டை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினர். ஒரு குண்டு பெண் ஒருவரின் கழுத்தில் பாய்ந்தது, பிறகு படையினர் எட்டுப் பேர் பின் கதவை உடைத்து உள்ளே நுழைந்தனர். 'மக்கள் எல்லோரும் அழுதபடி கைகளை உயர்த்தினர்'. பல பெண்கள் 'படையினரின் கால்களில் விழுந்து' சுட வேண்டாம் என்று கெஞ்சினர். படையினர் அதை காதில் வாங்காமல் உதைத்தனர். எல்லோரையும் வீட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டனர்.

அங்கிருந்த ஆண்கள் எட்டுப் பேரையும் மதிலுக்குப் பக்கத்திலிருந்து மாட்டுக் கொட்டிலுக்கு அருகே போய் நிற்குமாறு அங்கிருந்த இந்திய அமைதி காக்கும் படையினருக்கு அந்த நேரத்தில் பொறுப்பாக இருந்த இந்தியப் படைவீரர், அவர் அதிகாரியல்ல,[56] கட்டளையிடுகிறார். அறுபது வயதான சிவகுருவையும், இன்னொரு முதியவரையும், அவர்களது முதுமையைக் கண்ட இந்தியப் படையினர் அவர்கள் இருவரையும் பெண்கள் குழந்தைகளுடன் போய் நிற்கும்படி கூறினர். இளம் கட்டடப் பொருள் கடை உரிமையாளர் தனது குழந்தையை 'தெரிந்த பெண்ணிடம்' ஒப்படைத்து விட்டு எட்டு இளைஞர்களில் ஒருவராய் இணைகிறார். 'எட்டுப் பேரும் நான்கு இணைகளாக' கொலை செய்ய அழைத்து செல்லப்பட்டார்கள். அவர் முதல் இணையில் இருந்தார். 'இந்தியப் படைவீரர் சுடத் தொடங்கினார். அவருடன் இருந்தவர் அந்த இடத்திலேயே இறந்த விழுந்தார். அவருக்கு சிறு 'காயம் ஏற்பட்டது.' எனினும் இறந்தது போல் கீழே விழுந்த அவர் எவ்வித அசைவுமின்றிக் கிடந்தார். இரண்டாவது முறை இந்தியப் படை சுட்ட போது, ரவை பட்டு அவரது கை மூட்டு சிதறிப் போனது. இருந்தபோதிலும், எவ்வித வலியையும் வெளிக்காட்டாமல், இறந்து விட்டது போலவே பாவனை செய்தார். சோடி சோடியாக அந்த ஆண்களை முழுங்காலில் இருத்தி, அவர்களுடைய தாய், மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் சுடப்பட்டார்கள் என திரு. சிவகுரு விபரித்தார். இந்தக் கோரக் காட்சி 5 நிமிடங்களில் அரங்கேறி முடிந்தது. இந்திய அமைதி காக்கும் படையினர் 'யாரவாது அழுதால் சுட்டு விடுவோம்' என்று மிரட்டினர். [57] படையினர், வீட்டை எரிக்க முயன்றனர். அவர்களால் முடியவில்லை. பின்னர் வெளியேறினார்கள். சிறிது நேர அமைதிக்கு பிறகு தப்பியவர்கள் கதறி அழுதனர். சோடிகளாக இருத்திச் சுடப்பட்ட எட்டுப் பேரில் நான்கு பேர் இறந்து போயினர். [58] 'தெய்வாதீனமாகத்' தப்பிய நால்வரில் ஒருவர் 'வலது மார்பு, மணிக்கட்டு, இடது கை, தோள் மூட்டு' என குண்டு துளைத்து சிக்கலான காயங்களுக்கு உள்ளாகியிருந்தார். [59] அதே நேரம் கட்டடப் பொருள் விற்பனை உரிமையாளரின் கை பின்னர் அகற்றப்பட்டது.

---

[53] *பிரமாணப்பத்திரம் : சிவபாலச்சந்திரன் நிர்மலா, India's Mylai (1989) p22.*
[54] *பிரமாணப்பத்திரம் : யோககுரு (திகதி காணவில்லை)*
[55] *பிரமாணப்பத்திரம் : ராமசாமி சிவகுரு (12 ஓகஸ்ற் 1989).*

[56] *Ibid.*
[57] *<u>see also</u> பிரமாணப்பத்திரங்கள் : மாணிக்கலட்சுமி சிவநேசராஜா மற்றும் சபாரத்தினம் பொன்னம்பலம் India's Mylai (1989) pp18 and 20. நடராஜா ரவீந்திரன் அவரது ஐந்து சகோதரிகளின் முன்னிலையில் சுட்டுக்கொல்லப்பட்டார். see Rita Sebastian, Indian Express (24 August 1989).*
[58] *கதிர்காமத்தம்பி சிவநேசராசா, வயது 36, கூலி, பொன்னம்பலம் ரஞ்சித்குமார், வயது 25, மெக்கானிக், நடராஜா ரவீந்திரன், வயது 31, வர்த்தகர், ஆறுமுகசாமி ராமச்சந்திரன், வயது 41, மேசன். ஆகியோர்களே அவர்களாவர்.*
[59] *பிரமாணப்பத்திரம் : சிவசுப்பிரமணியம் தவமணிதேவி, (29 செப்ரெம்பர் 1989).*

# திரு. சிவகணேசன் வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டவர்கள்

## கொல்லப்பட்டவர்கள் (04):

**நடராஜா ரவீந்திரன்**
வயது 31, வர்த்தக உரிமையாளர், இவரது ஐந்து சகோதரிகள் எதிரில் வைத்துக் கொல்லப்பட்டார்

**பொன்னம்பலம் ரஞ்சிதகுமார்**
வயது 25, மெக்கானிக்

**ஆறுமுகசாமி ராமச்சந்திரன்**
வயது 41, மேசன்

**கதிர்காமத்தம்பி சிவநேசராசா**
வயது 36, கூலித்தொழிலாளி, அவரது மனைவியின் கண் முன்னே சுட்டுக் கொல்லப்பட்டார்

## காயப்பட்டவர்களில்


**யோககுரு**
வயது 34, சிவசுப்பிரமணியம் அருணேந்திரனுடன் சுடப்பட்டார். இருவரும் கடுமையான காயங்களுடன் உயிர் பிழைத்தனர்.

**சிவசுப்ரமணியம் அருணேந்திரன்**
யோககுருவுடன் சுடப்பட்டார், இருவரும் கடுமையான காயங்களுடன் உயிர் பிழைத்தனர்.

**இவர்களுடன் இன்னும்பல**
ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்

## பாதுகாப்புத்தேடிச் சென்றவர்கள்

X 70+





கதிர்காமத்தம்பி சிவனேசராசா



பொன்னம்பலம் ரஞ்சிதகுமார்



நடராஜா ரவீந்திரன்



ஆறுமுகசாமி ராமச்சந்திரன்

## திரு. சுப்ரமணியம் வீட்டில்:

பல மக்கள் அடைக்கலம் புகுந்த இரண்டாவது பெரிய வீடு திரு. வெங்கடாச்சலம் சுப்ரமணியம் அவர்களுக்குச் சொந்தமானது. இது வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்து 200 அடி தொலைவில் இருந்தது. பின்வழியாக, தீருவில் ஒழுங்கையில் இருந்தும் இந்த வீட்டுக்கு வரலாம். சுப்ரமணியம், தன் மனைவி மற்றும் கடைசி மகனுடன் வீட்டில் இருந்தார். [60] துப்பாக்கிச் சூடும் வீடுகள், உடமைகளுக்கு தீ மூட்டுவதும் தொடங்கிய போது, மக்கள் புகை மூட்டத்தை தாண்டி இங்கு ஓடி வந்து தஞ்சமடைந்தனர். அந்த வீடு வலிமையானது என்பதோடு, நில அளவையியல் அதிகாரியாக வேலை செய்து ஓய்வு பெற்றிருந்த சுப்ரமணியம் ஆங்கிலம் பேசக்கூடியவராகவும் இருந்தார். அதனால், அவர் இந்திய அமைதி காக்கும் படையினரிடம் பேசி, அவர்களது கோபத்தைத் தணிக்க வைக்க முடியும் என்று மக்கள் நம்பினர்.


அங்கிருந்தவர்களில் 24 வயதான தச்சுத் தொழில் செய்பவரும் இருந்தார். [61] தனது குடும்பத்துடன் வல்வெட்டித்துறையில் இருந்து தப்பி பக்கத்து ஊருக்கு செல்ல முயன்றார். ஆனால் துப்பாகிச்சூடு ஆரம்பித்ததால் அவர்களால் வெளியே தப்பிச் செல்ல முடியவில்லை. கடைசியில் அவர்களை சுப்ரமணியம் வீட்டை நோக்கி தஞ்சமடைய வைத்தது. அங்கு வந்த இன்னொரு குடும்பம் ராஜகுரு புஷ்பராணி மற்றும் அவரது இரண்டு மகன்கள், ஜெகன்ராஜ் மற்றும் ஜவன்ராஜ். முன்னர் தங்களது வாழைப்பழக் கடையில் ஒளிந்திருந்தனர். மதிய நேரம் துப்பாக்கிச் சூடு ஓய்ந்த போது மெதுவாக வெளியே வந்து இங்கு அடைக்கலம் புகுந்திருந்தனர்.



சிறிது நேரத்தில் இந்திய அமைதி காக்கும் படையினர் கதவை உதைத்தனர், கதவுக்கு இந்தப் பக்கம் இருந்த 50 பேரும் ஆதரவற்ற நிலையில் இருந்தனர். கதவை திறக்காவிட்டால் படையினர் ஆத்திரமடைந்து விடுவார்கள் என்ற பயத்தில் திருமதி. சுப்ரமணியம் கணவரை கதவை திறக்குமாறு வேண்டினார். சடசடவென்று படையினர் மூர்க்கத்துடன் உள்ளே நுழைந்தவுடன், உள்ளிருந்தவர்கள் எல்லோரும் தங்கள் கைகளை அச்சத்துடன் உயர்த்தினார்கள். படையினர் ஆண்கள் எல்லோரையும் முன்னே வருமாறு பணித்தனர். சுப்ரமணியம் படையினருடன் ஆங்கிலத்தில் பேச எத்தனிக்கையில், முதலாவது வசனம் தொடங்கி முடிவதற்கு முன்னாலேயே, அவரையும் இன்னும் இருவரையும் படையினர் சுட்டனர். அவர்கள் மூவரும் தரையில் துடிதுடித்து விழுந்தனர். மூவரில் தச்சரும் ஒருவர். அவரும் தன்னைச் சுட வேண்டாம் என்று கெஞ்சிக் கொண்டிருந்தார். அவரது மார்பிலும் கையிலும் குண்டுகள் பாய்ந்திருந்தன. இருந்தாலும் வலியை பொறுத்துக் கொண்டு இறந்தது போல் கிடந்தார். படையினர் அவரது சட்டைப் பையில் இருந்து பணத்தை எடுத்த போதும் அசைவின்றிக் கிடந்தார்.

படையினர் இப்பொழுது பெண்களையும் குழந்தைகளையும் நோக்கி சுட ஆரம்பித்தார்கள். பலர் கீழே விழுந்து இறந்தது போல் கிடக்க மற்றவர்கள் பயத்தில் வீட்டின் கோடியை நோக்கி ஓடினார்கள். ஒரு குழு பின் அறைக்குள் சென்றார்கள், அங்கே சீக்கியப் படை வீரர் ஒருவர் வந்தார், அங்கே இருந்தவர்கள் சுட வேண்டாம் என்று கெஞ்சிய போதும், 'தரையை நோக்கி கடுமையாகச் சுட்டார்' [62] பின்னர் துப்பாக்கியை தூக்கி அவர்களை நோக்கிச் சுட்டார். அவர் வெறியும் ஆத்திரமும் கூடி, அவர்களது கைகளிலும், நெஞ்சிலும் சுட்டார். அம்மக்களது உடல்களிலிருந்து வடிந்த இரத்தம், ஆறாக வடிந்து, அவர்களது கால்களை நனைத்தது. அவர் மேலும் தனது துப்பாக்கியின் ரவைக் கூட்டை மாற்றி மீண்டும் சுடுவதற்கு தயாராகிய போது, இன்னொரு படைவீரர் வந்து அவரைத் தடுத்து நிறுத்தினார். ஒருவர் தனது நான்கு வயது குழந்தையின் கால்களில் உள்ள காயத்தில் இரத்தப் போக்கை தடுக்க, துணியால் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் இன்னொரு பெண் அவளது மடியிலே செத்துப் போனார்.

இந்தக் கண்மூடித்தனமான தாக்குதல்களில் சிக்கியவர்களுள் 14 வயதான வாழைப்பழக் கடை ஜெகன்ராஜ்•ம் ஒருவன். அவன் தனது அம்மாவின் கையொன்று துப்பாக்கி ரவை பட்டுச் சிதைந்திருந்ததைக் கண்டான். அதே வேளையில் தாயின் நெஞ்சின் வலது புறத்தில் இரு துளைகள் தென்பட்டன. சட்டையை இழுத்து தூக்கும் போது 'எலும்புகள் வெளியே தெரிந்தன'. அவன் தாயை ஆறுதல் படுத்து முயன்றான். தாயோ அந்த வேளையிலும் 'தன் இரத்தத்தை அவனின் உடம்பில் பூசிக்கொண்டு அப்படியே படுக்கும்படி' அவனிடம் கெஞ்சிக் கேட்டார். அவன் தாய் சொன்னபடி இரத்தத்தை உடம்பில் பூசி அசைவற்றுக் கிடந்தான். 'தன்னைச் சுற்றி தேங்கியிருந்த இரத்தம் வெள்ளமாகி தான் அதில் மிதப்பது போலவும், இறந்த உடல்கள் தன்னை கடந்து செல்வது போலவும் உணர்ந்தாக' ஜெகன்ராஜ் பின்னர் விபரித்திருந்தான்.



சிறிது நேரத்தில் படையினர் திரும்பவும் அங்கே வந்தனர். அவர்கள் பார்த்த போது சிலர் இன்னமும் உயிருடன் இருப்பதை கண்டனர். 'படையினரில் ஒருவர் உயிரோடு இருப்பவர்களை எல்லாம் சுட்டுக் கொல்லுமாறு இன்னெருவரைக் கேட்டுக் கொண்டார். அவரோ எல்லோரும் இரத்தப் போக்கில் விரைவில் இறந்து விடுவார்கள் என்று கூறியபடி மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு வெளியில் சென்றார். போகும்போது வானத்தை நோக்கி தங்கள் கடைசி வேட்டுக்களை படையினர் சுட்டுத் தீர்த்தனர்'. இவ்வாறு அச்சம்பவத்தில் உயிர் தப்பியவர்களில் ஒருவரான திருமதி. நாகேஸ்வரராசா ஜெயந்தினி [63] தன்னுடைய வாக்குமூலத்தில் கூறியுள்ளார். எல்லாம் ஓய்ந்து ஒருசில மணி நேரத்திற்கு பிறகு திருமதி. சுப்பரமணியம் மேசையின் கீழ் இருந்து மெல்ல மெல்ல தவழ்ந்து சென்று தன் கணவர் விழுந்து கிடந்த இடத்திற்குச் சென்றார். கணவரின் நாடி, தோள் மற்றும் வயிற்றுப் பகுதியில் குண்டு துளைத்த காயங்கள் இருந்தன.

---

*[60] பிரமாணப்பத்திரங்கள் : ராஜேஸ்வரி எனப்படும் சின்னப்பிள்ளை (12 ஓகஸ்ற் 1989 மற்றும் 11 ஒக்ரோபர் 1989).*

*[61] பிரமாணப்பத்திரம் : சுப்பிரமணியம் முத்துவேல் (19 ஓகஸ்ற் 1989).*

*[62] வசந்ததேவி in India's Mylai (film).*

*[63] பிரமாணப்பத்திரம் : திருமதி நாகேஸ்வரராசா ஜெயந்தினி (15 ஓகஸ்ற் 1989).*

# திரு. சுப்ரமணியம் வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டவர்கள்

## கொல்லப்பட்டவர்கள் (09):

**வெங்கடாச்சலம் சுப்ரமணியம்**
ஓய்வுபெற்ற நிலஅளவையியல் மேலாளர் மனைவியின் கண்முன்னே சுட்டுக்கொல்லப்பட்டார்

**ராஜலக்ஸ்மி ஈஸ்வரமூர்த்தி**
வயது 25, கணவரின் தாயின் கண்முன்னே சுட்டுக்கொல்லப்பட்டார்.

**அருணாசலம் இளையபெருமாள்**
ஓய்வுபெற்ற தபாலக ஊழியர். இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**அமிர்தலிங்கம் உமாதேவி**
அருணாசலம் இளையபெருமாளுடன் கொல்லப்பட்டார்.

**சின்னத்தம்பி கணேசலிங்கம்**
வயது 25, கடல்தொழில், இவரது மகள் சசிகலாவும் இதில் கொல்லப்பட்டார்.

**சசிகலா**
வயது 1, இவரது தந்தை, சின்னத்தம்பியும் கொலைசெய்யப்பட்டார்.

**அதியருணாச்சலம் சுந்தரரேஸ்வரன்**
வயது 11, மூன்று சகோதரர்களில் கடைசிப்பையன்

**ராஜகுரு புஸ்பராணி**
வாழைப்பழக்கடை உரிமையாளரும், ஜவனராஜ் மற்றும் ஜகன்ராஜ் ஆகியோரது தாயாராரும்.

**யவன்ராஜ்**
வயது 11, ஜகன்ராஜ்ஜின் தம்பி

## காயப்பட்டவர்களில்:

**சுப்ரமணியம் முத்துவேல்**
வயது 24, தச்சுத்தொழிலாளி, சுடப்பட்டபோது இறந்தவர்போல் நடித்து உயிர்பிழைத்தார்

**இவர்களுடன் இன்னும்பல**
ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்

## பாதுகாப்புத்தேடிச் சென்றவர்கள்

X 50+





திரு. சுப்ரமணியம்



ராஜகுரு புஸ்பராணி



அருணாசலம் இளையபெருமாள்



திருமதி அமிர்தலிங்கம் உமாதேவி



ராஜலஷ்மி ஈஸ்வரமூர்த்தி



சின்னத்தம்பி கணேஷலிங்கம்

கணவர் 'இரத்த வெள்ளத்தில்' கடைசி மூச்சை விட்டபடி கிடந்தார். 'அவர் கணவருக்குத் தண்ணீர் கொடுத்தார். சிறிது நேரத்தில் கணவர் மூச்சை நிறுத்தினார்'. இறந்தது போல் நடித்து தப்பித்துக் கொண்ட ஜெயந்திக்கு 76 வயதான ஓய்வு பெற்ற தபாலக ஊழியரான மாமனார் அருணாச்சலம் இளையபெருமாள் மற்றும் 26 வயதான மைத்துனி திருமதி. அமிர்தலிங்கம் உமாதேவி ஆகிய இருவரும் கொல்லப்பட்டது பின்னர் தெரிந்தது. ஏற்கனவே மகன் ஈஸ்வரமூர்த்தி இந்திய அமைதி காக்கும் படையினரின் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில், 25 வயதான மருமகள் ராஜலக்ஷ்மி ஈஸ்வரமூர்த்தி கொல்லப்பட்டது,[64] அந்தத் தாயை 'பெரும் துன்பத்தில் ஆழ்த்தியது'. 25 வயதான மீனவர் சின்னத்தம்பி கணேசலிங்கம் தனது ஒரு வயது மகள் சகிலாவுடன் கொல்லப்பட்டார். அவரது மனைவி சசிகலாவும், ஐந்து வயது மகனும் உயிர் பிழைத்தனர்.[65] 14 வயதான ஜெகன்ராஜ் எழுந்து பார்த்த போது அவனது தாயின் உடல் இரத்த வெள்ளத்தில் குளிர்ந்து போய் கிடந்தது. 11 வயதான அவனது சகோதரன் ஜவன்ராஜ் சுவாசத்தை நிறுத்தியிருந்தான். திரு. சுப்ரமணியம் வீட்டில் இறந்து போன ஒன்பதாவது நபர் இளம் பள்ளி மாணவனான ஆதிஅருணாச்சலம் சுந்தரேஷ்வரன் ஆவான். ஏற்கனவே சுற்றி வளைக்கப்பட்டு, தனது இரண்டு தமையன்களுடன் கூட்டிச் செல்லப்பட்டவன். எப்படியோ இங்கு வந்து சேர்ந்திருந்தான்.

மாலை முற்பகுதியில் அங்கு ஓடிவந்த அயலவர், பக்கத்து வீடுகள் எல்லாம் எரியூட்டப்படுவதாக எச்சரிக்கை செய்தார். தப்பித்தவர்களுள் பலர் மோசமாக காயமடைந்திருந்தாலும் பயத்தில், இறந்தவர்களை கைவிட்டு அங்கிருந்து வெளியேறினார்கள். ஜெகன்ராஜ் இறந்துபோன தனது தாய், சகோதரன் உடல்களை விட்டுவிட்டு, தனது மற்ற சகோதரர்களை தேடிச் சென்றான்.

**இந்திய இராணுத்தினர் வீதிகளில் இறங்கி, கண்டபடி துப்பாக்கிச் சூடுகளை நடாத்தி, மக்களைச் சுட்டுக் கொலை செய்தவாறு சென்று கொண்டிருந்த அதே நேரத்தில், பல ஜீப் வண்டிகளில் மேலும் பல படையினர் வந்திறங்கினர். அவர்களும் முன்னர் இருந்த படையினருடன் இணைந்து தங்களது வன்முறையினை கட்டவிழ்க்கத் தொடங்கினர்.**

வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்து படையினரால் சிதைக்கப்பட்ட கடைகளின் சொந்தக்காரர்களில் ஒருவர் தான் நேரில் கண்டதை தன்னுடைய பிரமாணப் பத்திரத்தில் பின்வருமாறு விபரித்துள்ளார்: 'படையினர் தம்மைக் கடந்து சென்றார்கள் என்றும், சில அடி தூரம் கடந்து சென்றதும், அவர்களில் ஒருவர் திடீரெனத் திரும்பி, தன்னுடைய ரவைக் கூட்டிலிருந்த ரவைகள் தீரும் வரை தம்மை நோக்கிச் சுட்டுத் தீர்த்தார் என்றும் கூறினார். இதன் போது அவரது கையிலும், முதுகின் பக்கவாட்டிலும் காயம் ஏற்பட்டது. வல்வெட்டித்துறைச் சந்தியில் படப்பிடிப்புக் கடை வைத்திருந்த நல்லதம்பி செந்திவேல் தன்னுடைய வாக்குமூலத்தில் 'மக்கள் தரையில் படுத்துக்கொண்டார்கள் என்றும், ஆனால் அப்படைவீரரோ இரண்டு ரவைக் கூட்டினை மாற்றி, மக்கள் மீது தொடர்ச்சியாகச் சுட்டுத் தீர்த்தார் என்றும் கூறினார்.[66] இவரது படப்பிடிப்புக் கடையும் அழிக்கப்பட்டது. துப்பாக்கிச் சூடு ஓய்ந்த போது, தலையை நிமிர்த்திப் பார்த்தவருக்கு பத்துப் பேருக்கு மேல் காயப்பட்டிருந்ததும், இருவர் இறந்திருந்ததும் தெரிந்தது. இவர்களில் ஒருவர் தனது வயது முதிர்ந்த சகோதரியுடன் அங்கு வந்திருந்து கந்தசாமி தங்கராசா ஆவர். "திடீரென்று எங்கள் மேல் குண்டுகள் பாய்ந்தன. என்னை ஆறுதல்ப்படுத்திக் கொண்டிருந்த எனது சகோதரன் கொல்லப்பட்டிருந்தான். நானும் படுகாயம் அடைந்து மற்றவர்களுடன் 'நகர முடியாத நிலையில்' தரையில் கிடந்தேன்" என்று கந்தசாமி தங்கராசா அவர்களுடைய சகோதரி பின்னர் கூறினார். அங்கே எழுந்து நடமாட முடிந்தவர்கள் சிலரை, காயமடைந்தவர்களை

*64 பிரமாணப்பத்திரம் : சுந்தரமூர்த்தி சூரியமூர்த்தி (30 ஓகஸ்ற் 1989).*
*65 பிரமாணப்பத்திரம் : ஜெயகாந்தி, சின்னத்தம்பி கணேசலிங்கத்தின் மனைவி) (7 செப்ரெம்பர் 1989).*

*66 31 ஆவது அடிக்குறிப்பைப் பார்க்கவும்.*

நிழலுக்கு கொண்டு செல்ல படையினர் அனுமதித்தனர். இறந்த உடல்களை வல்வெட்டித்துறைச் சந்திக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் போடுமாறு இன்னும் சிலர் பணிக்கப்பட்டனர். மேலும் சேர்க்கப்பட்ட இரண்டு இறந்த உடல்களில் ஒன்று 20 வயதான கார் ஓட்டுநர் பாலக்கிருஷ்ணன் பிரேம்ராஜ் என்றும்,[67] இன்னொருவர் சலவைத் தொழிலாளி திருமதி. கந்தசாமி சிவபாக்கியம் என்றும் அடையாளம் காணப்பட்டன.[68]

ஓடும் போது சுடப்பட்ட பெண் திருமதி. கந்தசாமி சிவபாக்கியம் மட்டுமல்ல, இன்னொருவர் 33 வயதான இல்லத்தரசி பீற்றர் விஜயராஜன் கிருஷ்ணவதனா ஆவார். பொலிகண்டி இராணுவ முகாமில் இருந்து வல்வெட்டித்துறையை நோக்கி புதிதாக இராணுவத்தினர் வந்து கொண்டிருந்தனர். அவர்களை கண்டு பயத்தில் ஓடிய 33 வயதான விஜயராஜன் கிருஷ்ணவதனாவைச் சுட்டுக் கொன்றனர். பகலில் பாதுகாப்பாக வீட்டுக்குள் இருந்தவர் மாலை நேரம் மேலும் பாதுகாப்பைத் தேடி வேர்வில் பிள்ளையார் கோவிலுக்கு சென்ற போது, சுட்டுக் கொல்லப்பட்டார். [69] அவரது உடல் அவரது நண்பரால் பாதுகாக்கப்பட்டாலும் ஊரடங்குச் சட்டம் காரணமாக அதை தகனம் செய்யமுடியவில்லை.

### பாலியல் வன்முறைகள்

வல்வெட்டித்துறை வன்முறைகளில் குறைவாக பதிவு செய்யப்பட்ட குற்றங்களில் ஒன்று பாலியல் வன்புணர்வு ஆகும். குறைந்தது 20 வன்புணர்வுகள் நடந்ததாக அதிகாரப் பூர்வமாக அடையாளம் காணப்பட்டன. அவ்வாறாயின், பாதிக்கப்பட்ட இன்னும் பலர் இதைப்பற்றி வெளிப்படையாக ஒருபோதுமே பேசவில்லை என்பதை ஊகிப்பதில் தவறொன்றுமில்லை.

சம்பவம் நடந்து ஒன்பது நாட்களுக்கு பிறகு பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் [70] தனது மோசமான அனுபவத்தை தன்னுடைய வாக்குமூலத்தில் வழங்கினார். ஓகஸ்ற் 2ம் திகதி, உடுப்பிட்டி இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள தனது வீட்டில் இந்தப் பெண் குழந்தையுடன் தனியாக இருந்தார். வெளியே எறிகணைச் சத்தங்கள் கேட்டதால் வீட்டுக்குள்ளேயே பாதுகாப்பாக இருந்தார். மாலை நான்கு மணியளவில் வீட்டுக்கு வந்த படையினர் வீட்டை சோதனை செய்ய வேண்டும் என்று கூறினர். அவர் வெளியே வர முயன்ற போது துப்பாக்கி முனையில் வீட்டுக்குள் ஓர் அறைக்கு கொண்டு செல்லப்பட்டார். குழந்தை பயத்தில் கத்திக்கொண்டு ஓடிய போது படையினரில் ஒருவர் குழந்தையை அறையின் ஒரு மூலையில் பிடித்து வைத்திருந்தார். இரண்டு சீக்கியப் படையினர் அப்பெண்ணை நிர்வாணப்படுத்தி, மாறிமாறி பாலியல் வன்புணர்வு செய்ய, இன்னொருவர் அவரது வாயை கைகளால் பொத்தியிருந்தார். கிட்டத்தட்ட அப்பெண் மயக்கம் அடையும் நிலையில் இருக்கும் போது இதைப்பற்றி வெளியே சொல்லக்கூடாது. சொன்னால் குடும்பத்தையே அழித்து விடுவோம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டார். அவருக்கு மருத்துவ உதவி தேவைப்பட்டது. மருத்துவமனைக்கு செல்லத் துணிந்திருந்தாலும் ஊரடங்கு உத்தரவு காரணமாக செல்ல முடியவில்லை.

### வல்வெட்டித்துறைச் சந்தியில் வன்முறைத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் உடுப்பிட்டிக்கு அழைத்து வரப்படுகிறார்கள்.

மதியவேளை கடந்த பின்னர், வல்வெட்டித்துறைச் சந்திக்கு வந்த உடுப்பிட்டி முகாமைச் சேர்ந்த படையினர் மேலும் பல மக்களை அங்கே கொண்டு வந்தார்கள். அவர்களுள் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. ஆனந்தராஜ்ம் ஒருவர். [71] மாலை 4.30 மணியளவில் அருகே பிரதான வீதியில் வசிக்கும் சகோதரியின் வீட்டைப் பார்த்து வரலாம் என வெளியே செல்லத் துணிந்தார். சகோதரியின் வீடு பொருட்களுடன் சேர்ந்து எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். நெருப்பை அணைக்க முற்படும் போது அந்த வழியாகச் சென்ற, ஜனவரியில் நடந்த தாக்குதல்களுக்கு பொறுப்பாக இருந்து 'முழுமையாக தன்நிலை மறந்து' செயற்பட்டிருந்த பொலிகண்டி இராணுவ முகாம் கப்டன் அவரை பார்த்து விடுகிறார். ஆனந்தராஜை தனியாகக் கூட்டிச் சென்று அங்கிருந்த படையினரைக் கொண்டு அவரது முகத்தில் அறைய விட்டார். பிறகு அவரை வல்வெட்டித்துறைச் சந்திக்கு இழுத்துச் சென்றனர்.

அங்கே பத்து இளைஞர்கள் கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் முழங்காலில் இருத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். ஆனந்தராஜிற்கு முன்னர் அவர்கள் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஆனந்தராஜிடம் விஞ்ஞானம் கற்ற மாணவர்களே என்பதை அவர் அடையாளம் கண்டார். சிலர் பழைய மாணவர்கள் மற்றவர்கள் இப்போதும் படித்துக் கொண்டிருந்தார்கள். இளைஞர்கள் படுகாயம் அடைந்திருந்தார்கள் என மற்றைய சாட்சிகளும் தங்கள் வாக்குமூலத்தில் கூறியுள்ளனர். [72] படையினர் அவர்களை தங்கள் ட்ரக் வண்டிக்குள் இழுத்துச் சென்றார்கள். புத்தகக் கடை உரிமையாளரின் மகன் அப்பாத்துரை மதிவர்ணன் மற்றும் காலையில் சுற்றி வளைக்கப்பட்டு கூட்டிவரப்பட்ட மூன்று சகோதரர்களில் ஒருவரான ஆதிஅருணாச்சலம் பரஞ்சோதி ஆகிய இருவரையும், புகைப்படக் கடைக்காரர் நல்லதம்பி செந்திவேல் அடையாளம் கண்டு கொண்டார். இருவரும் பலத்த காயமடைந்திருந்தனர். காயமடைந்த இளைஞர்களை வாகனத்தில் தூக்கிப்போடுமாறு சுற்றி வளைக்கப்பட்ட மக்களை படையினர் பணித்தனர். வாகனத்திற்குள் ஏற்கனவே வயதான ஒருவரின் பிணம் கிடந்தது. அவர்கள் ஏற்றப்பட்டதும் வாகனம் உடுப்பிட்டியை நோக்கிச் செலுத்தப்பட்டது.

---

*67 பிரமாணப்பத்திரம் : நல்லதம்பி செந்திவேல் (16 ஓகஸ்ற் 1989).*
*68 see eg நல்லதம்பி செந்திவேல்.*
*69 பிரமாணப்பத்திரம் : தம்பிஜயா ஆனந்தராஜா, India's Mylai (1989) p18.*
*70 பிரமாணப்பத்திரம் : (11 ஓகஸ்ற் 1989).*

*71 திரு. ஆனந்தராஜின் நேர்காணல்களும், பிரமாணப்பத்திரமும், இதர பதிப்புக்களும்.*
*72 பிரமாணப்பத்திரம் : குணசிங்கம் கருணானந்தராஜா (17 செப்ரெம்பர் 1989), also India's Mylai (film).*

14116

## AFFIDAVIT

I, Nadarajah Balakrishnan, Aged 52 Years, being a Hindu, Sri--Lankan Tamil residing at Vaikundam Lane, Theeruvil, Valvettiturai do hereby solemnly, sincerely and truly declare and affirm as follows

1. I am the affirmant abovenamed, holding National Identity Card No. 38 076 183I V.
2. On 02.8.1989, at about II.30 a.m., the Indian Army-Personnel (I.P.K.F) went on a rampage in and around Valvettiturai--Proper. My son Balakrishnan Premathas, Aged 20 Years was as usual, at the Valvettiturai Junction with his hiring-car bearing No. EY 5872. It is indeed a calamity that the Indian Army shot my said son to death on the spot.
3. I have become sickly and have been exclusively depending on the said son's earnings. I am therefore in a state of bewilder-ment as to my future, apart from the mental agony I am sufferings.
4. I should therefore deem it gracious on the part of the Authorities, if adequate compensation be paid.

Readover and explained to the abovenamed affirmant, who ad-mitted to the correctness hereof, set his signature be-fore me at Valvettiturai, On this 26th day of August, 1989.

N. Balakrishnan
Affirmant.

Before me.
[signature]
Justice of the Peace.

S. THANDABANIKATHESIGAR J.P.
CHIEF PRIEST
...AMBAL DEVASTHANA
VALVETTITHURAI




14116

**மாலை நேரம், வல்வெட்டித்துறைச் சந்தியில் எஞ்சியிருந்தவர்கள் வெவ்வேறு திசையில் அனுப்பப் பட்டார்கள். காயமடைந்த சிலரையும், வயதானவர்களையும் மருத்துவமனைக்கோ அல்லது வீட்டுக்கோ கூட செல்ல அனுமதித்தனர். மற்றவர்கள் என்ன நடக்குமோ என்ற பதைபதைப்பில் உடுப்பிட்டியை நோக்கி நடத்தி கூட்டிச் செல்லப்பட்டனர். எஞ்சியிருந்தவர்களை வீதியில் வைத்தே சித்திரவதை செய்தனர்.**

மாலை 6.30 மணியளவில் வல்வெட்டித்துறைச் சந்தியில் எஞ்சியிருந்த கிட்டத்தட்ட 50 பேர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் அமைந்திருந்த உடுப்பிட்டி முகாமுக்கு கால் நடையாக நடத்திக் கொண்டு செல்லப்பட்டார்கள். இவர்களுள் திரு. ஆனந்தராஜ•ம், காலையில் பிடிபட்டு 'கடுமையாக தாக்கப்பட்ட தேனீர் கடை உரிமையாளரும் அடங்கியிருந்தனர்.

காயமடைந்த சிலருக்கு நீங்கள் வீட்டுக்குப் போகலாம், எது நடந்தாலும் நாங்கள் பொறுப்பல்ல எனப் படையினரால் சொல்லப்பட்டது. திரு. கருணானந்தராஜா மார்பில் குண்டு துளைத்த நிலையில் கிழவனே அப்படிப் போ' எனப் படையினர் ஒருவரால் மிரட்டப்பட்டார். அவர் எப்படியோ சமாளித்து ஒரு மைல் தூரம் கடற்கரையோரமாக நடந்து ஊறணி மருத்துவமனையை அடைந்தார். மாலை நேரம் வரை 'இரத்தப் போக்குடன்' இருந்த நிலையில் நண்பர்கள் உதவியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாதாக வல்வெட்டித்துறைச் சந்திக் கடை உரிமையாளர்களில் ஒருவர் பின்னர் கூறினார்.[73] தனது அருகிலேயே தனது சகோதரனை பறி கொடுத்து தானும், காயமடைந்த நிலையில் இருந்து திருமதி. சித்திவிநாயகம் மாலை நேரம் வரை அங்கே 'அப்படியே இருந்த நிலையில்', ஒரு இளைஞரால் மிதிவண்டியில் வைத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக தன்னுடைய வாக்குமூலத்தில் கூறினார். பலர் தங்கள் வீட்டுக்குப் போகாமல் நகரிலிருந்த கோவில்களில் அடைக்கலம் புகுந்தனர்.

கடைசியாக சிலரை வல்வெட்டித்துறைச் சந்தியிலே தனிமைப் படுத்தி வைத்திருந்தார்கள். அவர்கள் கரடு முரடான, சூடான தார் வீதியில் தவழ்ந்தோ அல்லது முழங்காலில் நடந்தோ ஊறணி மருத்துவமனையை நோக்கி செல்லுமாறு பணிக்கப்பட்டனர். அவர்கள் மருத்துவமனையை அடைந்தவுடன் படையினர் துப்பாக்கியாலும் குண்டாந் தடிகளாலும் அடித்ததோடு, எல்லோரையும் வெளியே உள்ள வீதியில் உருளவைத்து மேலும் அடித்தார்கள் என்று காலையில் கைது செய்யப்பட்ட மீனவரும் ஐந்து பிள்ளைகளின் தந்தையுமான செல்லத்துரை கோபாலசாமி [74] தனது வாக்குமூலத்தில் விபரித்துள்ளர்.

**ஒரேயொரு அவசரசிகிச்சை வாகனம் மட்டுமே பருத்தித்துறைக்கு செல்ல அனுமதிக்கப் பட்டது.**

தீவிரமான காயங்களுக்கு உள்ளாகியிருந்த எட்டு பேர் 7 மணியளவில் ஊரடங்கில் பயணிக்கும் அனுமதி பத்திரத்துடன், ஊறணி மருத்துவமனையில் இருந்து மந்திகையிலுள்ள, பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டனர். பருத்தித்துறை மருத்துவமனையில் வேலை செய்த தமிழ் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியதால், [75] அவர்களுக்கு பதிலாக 'எல்லைகளற்ற மருத்துவர் குழுவைச் சேர்ந்த மருத்துவர்கள் [76] கடமையாற்றினார்கள். MSF மருத்துவக் குழு கை, கால்களை அகற்றுதல் உட்பட்ட முக்கியமான அறுவைச் சிகிச்சைகளை செய்து வந்தது. ஊறணியில் பாதிக்கப்பட்ட இன்னும் பலருக்கு அவசர சிகிச்சை தேவைப்பட்டது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து வரும் ஆபத்திலிருந்து MSF ஊழியர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற போலியான காரணத்தைக் கொண்டு, அம்புலன்ஸ் திரும்பி வருவதற்கு தடை விதித்தனர்.[77] ஊரடங்கு அமுலில் இருக்கும் வரை அத்தடையும் நீடிக்கும் என்று சொல்லப்பட்டது.

**நாள் முழுவதும் பாதுகாப்புத்தேடி அலைந்து விட்டு, இரவாகியதும் வீட்டிற்குப் போன கிரிக்கெட் விளையாடிய சிறுவர்கள்**

கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த பதின்வயது மோகன், இரவு கவியும் போது அன்று காலை தனது இருபது நண்பர்களுடன் எப்படியோ நண்பனின் வீட்டை அடைந்தார்கள். நண்பனின் குடும்பத்தினர் ஆபத்தை உணர்ந்திருந்தாலும் அவர்களை அங்கே தங்குவதற்கு அனுமதித்தனர். அன்று முன்னதாக ஊர்மக்களில் சிலர், வல்வெட்டித்துறை மேற்கு, ஊரிக்காட்டிலிருந்த இலங்கை இராணுவ முகாமிற்கும் பாதுகாப்புத் தேடிச் சென்றார்கள். அவர்களுடன் இருந்த இளமைத் துடிப்புள்ள கிரிக்கெட் வீரர்களை இலங்கைப் படையினர் உள்ளே நுழைய அனுமதிக்கவில்லை. பசிக்கொடுமையிலிருந்த இளைஞர்கள் சிலர் கூட்டுறவு கடையை உடைத்து பிஸ்கற் எடுத்துச் சாப்பிட்டார்கள். பதின்மவயது இளைஞர்கள் இந்திய அமைதி காக்கும் படையினரின் கைகளில் சிக்கினால் அது பெரும் ஆபத்தானது என்பது அவர்களுக்குத் தெரியும். ஊரடங்கு உத்தரவு நீடித்திருக்கும் வரை, தங்கள் குடும்பங்களுடன் தொடர்பு இல்லாமல் இந்திய அமைதி காக்கும் படையினரின் கண்களுக்குச் சிக்காமல் மறைந்திருப்பது இளைஞர்களின் தேவையாக இருந்தது.



[73] 31ஆவது அடிக்குறிப்பைப் பார்க்கவும்.
[74] பிரமாணப்பத்திரம் : செல்லத்துரை கோபாலசாமி, (1 செப்ரெம்பர் 1989)

[75] https://uthr.org/Reports/Report3/chapter3.htm.
[76] Johanna Lurusdottir, MSF telex (10 August 1989).
[77] UTHR, Jaffna Report 3.

## உடுப்பிட்டி இராணுவ முகாமில் அன்றிரவு அரங்கேற்றப்பட்ட சித்திரவதைகள்:

நடந்து வந்த மக்கள் குழு உடுப்பிட்டி முகாமை அடைந்தபோது, அதிகாரிகளிடம் ஏற்கனவே அவருக்கு இருந்த 'நல்லுறவினைக்' கொண்டிருந்த திரு. ஆனந்தராஜ் அவர்களுடன் பேச முனைந்தார். ஆனால் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதோடு மற்றவர்களுடன் மரத்தின் கீழ் இருத்தி வைக்கப்பட்டார். அந்த நேரத்தில் அவ்விடத்திற்கு வந்த பொலிகண்டி முகாம் கப்டன் அங்கிருந்தவர்களை 'அடித்து உதைத்தார்'. தொடர்ந்து இரண்டு சீக்கிய படையினரால் அவர்கள் உள்ளே தள்ளப்பட்டு 'குண்டாந்தடிகளால் அடித்து நொருக்கப்பட்டனர்'. அன்று காலை தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட படையினரின் உடல்கள், வகுப்பறை ஒன்றில் வாங்குகள் மற்றும் கதிரைகளை உடைத்து, அவற்றை விறகாகப் பாவித்து எரியூட்டப்–பட்டிருந்ததை ஆனந்தராஜ் கண்டார். தேநீர் கடை உரிமையாளர் ராசமாணிக்கம் சிவலிங்கம் 'அடித்துச் சித்திரவதை' செய்யப்பட்டதாக தன் வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்து, அங்கு கொண்டுவரப்பட்டு, சித்தரவதை செய்யப்பட்டு, 'இரத்தம் வடிந்து கொண்டிருந்த நிலையில் அழுது கொண்டிருந்தனர்'. பொலிகண்டி முகாம் கப்டன் ஆனந்தராஜை தனியாக கொண்டுவந்து சித்திரவதை செய்ய ஆரம்பித்தார். அவரை 'சித்திரவதை செய்த முதல் ஆள்' அவனே என்று ஆனந்தராஜ் குறிப்பிட்டார். ஜனவரி 19 இந்திய அமைதி காக்கும் படையினரின் நடவடிக்கைகளுக்கு பிரஜைகள் குழுவால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு தான் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டதை கப்டன் நினைவு படுத்தினார். கப்டன் 'வல்வெட்டித்துறைக்கும் அதன் மக்களுக்கும், உனக்கும் என்ன நடக்கப்போகிறது என்று பொறுத்திருந்து பார்' என்று மிரட்டி ஆனந்தராஜ•ன் கழுத்தை நெருக்கியபடி 'சில முக்கியமான நபர்களை கொல்லுவதற்கு கட்டளை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது' என்று சொல்லி முடிக்கிறார்'. அவரை ஒரு அறைக்குள் தள்ளிக் கொண்டு போனார். அங்கே நான்கு சீக்கியப் படைவீரர்கள் 'பெரிய கொட்டன்கள், மற்றும் தங்களது கை முஸ்டிகளால்' என்னை அடிப்பதற்குத் தயாராக இருந்தார்கள் என ஆனந்தராஜ் நினைவு கூர்ந்தார். ஆனந்தராஜின் தலையை படைவீரன் ஒருவன் சுவருடன் மோதுகின்றார். தடுமாறி அவர் கீழே விழுந்தபோது, அவருடைய கழுத்தின் மீது, கொட்டன் ஒன்றை வைத்து அதன் மேல் ஏறி நின்று அவரது குரல் வளையை நொருக்க முயன்றான். அப்போது 'அவனைக் கொல் அவனைக் கொல்' என்று யாரோ கத்தியது ஆனந்தராஜிற்குக் கேட்டது.

தான் மயக்கம் அடையப் போவதை அவர் உணர்ந்த நிலையிலும், அந்த சீக்கியப் படைவீரரை ஒருவாறு தட்டி விட்டார் ஆனந்தராஜ். இதனால் படைவீரர் நிலை குலைந்தார். இதனைப் பார்த்த மற்றைய படைவீரர்கள் அவர் மீது பாய்ந்து 'பாம்பை அடிப்பது போல்' அடித்தார்கள். அப்போது அவர் உண்மையிலேயே மயங்கிப் போனார். சில வேளைகளில் அவர் இறந்து விட்டார் என்று படையினர் எண்ணி, அவரை விட்டுவிட்டுச் சென்றிருக்க வேண்டும். அன்று மாலையில் ஒரு இராணுவ மருத்துவர் பக்கத்துக் கட்டடத்தில் உள்ள சிறிய இராணுவ மருத்துவ நிலையத்திற்கு அவரைக் கொண்டு சென்றார். அதனால்தான் தன் உயிர் காப்பாற்றப்பட்டதாக ஆனந்தராஜ் நினைவு கூர்ந்தார்.

அன்று இரவு இராணுவ மருத்துவ நிலையத்தில் படுக்கையிலிருந்த திரு. ஆனந்தராஜ•க்கு சித்திரவதை செய்யப்படும் அவரது மாணவர்களின் அலறல் கேட்டுக் கொண்டிருந்தது. 'நாங்கள் மாணவர்கள் எங்களை அடிக்காதீர்கள்' என்று மாணவர்கள் கெஞ்சுவதையும், 'சித்திரவதையை நிறுத்தச்' சொல்லி அழுவதையும், அடி தாங்காமல் கதறுவதையும், ஆனந்தராஜ் கேட்டுக்கொண்ட படியே கையறுநிலையில் முழு இரவையும் கழித்தார். 'அவர்கள் இரவு முழுவதும் சித்திரவதை செய்யப்பட்டனர்' என ஆனந்தராஜ் கூறினார்.

AFFIDAVIT.

I, Sambasiva Iyer Thangavelautham, aged 45 years, Sri Lankan Tamil, residing at Sannithy Kovilady, Thondaimanaru, being a Hindu, do hereby, solemnly, sincerely and truely declare and affirm as follows:

1. I am the declarant herein holding National Identity Card No. 44 245 1116 V.

2. On 2-8-89, my son named Sambasivam, aged 18 years, went to attend the Mini Cinema at Valvettiturai. My other two sons who too went with the former to the show came and informed me that son Sambasivam was being taken to the camp by Indian Army personnel.

3. I went to the Udupiddy camp as well as the Kankesan thurai camp on three occasions, where I was informed that my said son was not there.

4. I as well as the mother and other members of the family are in great mental agony. It is therefore earnestly requested that the authorities be good enough to ascertain his where abouts and advise us for which act of kindness I will ever pray.

Declared and affirmed at Valvettiturai this 1st day of September 1989.

..........................
Declarant.
Before Me,

Justice of the Peace.

# இரண்டாம் நாள். 03-08-1989:


**உடுப்பிட்டி இராணுவ முகாமில், அடங்கிப்போன அந்தப் பையன்களது குரல்கள்:**

அடுத்தநாள் காலையில் 'எல்லாமே அமைதியாக இருந்தது'. எந்த விதமான சத்தமும் கேட்கவில்லை. மாணவர்கள் தப்பியோடி விட்டதாக படையினர் கூறினர். ஆனந்தராஜை சந்தித்த படை அதிகாரிகள், அவர்கள் 'தப்பியோடியதை உறுதிப்படுத்தி கையெழுத்திடுமாறு அவருக்கு கட்டளை இட்டனர். அவர் படையினரால் 'கையெழுத்திடுமாறு மிரட்டப்பட்டதோடு, கையெழுத்திடாவிட்டால் இங்கிருந்து போகமுடியாது' என்று எச்சரிக்கப்பட்டார். ஆனந்தராஜ் ஒத்துழைக்கவில்லை. இளைஞர்கள் எல்லாம் கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் பாடசாலை மைதானத்தில் புதைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நம்பினார். [78] அந்த இளைஞர்களில் இரண்டு சோடி சகோதரர்கள் இருந்தார்கள், அச்சோடிகளில் ஒன்று பரஞ்சோதி மற்றும் பரசார். இவர்கள் இருவரதும் இளைய சகோதரன் சுந்தரேஸ்வரன் ஏற்கனவே சுப்ரமணியம் வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டிருந்தான்.


தயாளசிங்கம் சாம்பசிவம்


தயாளசிங்கம் சிவகுமார்


தயாளசிங்கம் ஜெயமோகன்


ஆதியருணாச்சலம் பரஞ்சோதி


ஆதியருணாச்சலம் பரசார்


சுப்ரமணியம் பேரின்பம்


அப்பாத்துரை மதிவர்ணன்


நாகராஜா சிவகுமார்

**அதிகாலையிலேயே தங்கள் நடவடிக்கைகளை மீளவும் தொடங்கிய இந்திய அமைதி காக்கும் படையினர்.**

18 வயது மாணவனான அருள்பிராகஷம் சுவர்ணதாஸ் 19 வயதான சக மாணவ நண்பன் குமாரவேல் செல்வனந்தவேலுடன் வல்வெட்டித்துறை கிழக்குப் பகுதியில் உள்ள பாட்டி வீட்டில் இருந்தான். அங்கு வேறு சில உறவினர்களும் இருந்தார்கள். அதி காலையில், இந்திய அமைதி காக்கும் படையினர் 6 பேர் துப்பாக்கிகளை ஏந்தியபடி வந்தனர், திருமதி. ராஜேஸ்வரியும் [79] அவரின் மகள் ஒருவரும் படையினர் ஒருவரால் முகத்தில் தாக்கப்பட்டனர். அங்கிருந்த இரண்டு இளைஞர்களையும் அவர்களது கால்களில் கயிறால் கட்டி வீட்டில் இருந்து வெளியே இழுத்துச் சென்றனர். அவர்களை விடுவிக்குமாறு பின்னால் கத்திச் சென்ற பாட்டியை மீண்டும் எழுந்து நிற்க முடியாத வகையில் கடுமையாக தாக்கினர்.

---

*[78] தயாசிங்கம் சிவகுமார், வயது 19, கூலித்தொழிலாளி; தயாளசிங்கம் ஜெயமோகன், வயது 16, கூலித்தொழிலாளி; ஆதியருணாச்சலம் பரஞ்சோதி, வயது 18, வியாபாரம்; ஆதியருணாச்சலம் பரசார், வயது 18, மாணவன்; தங்கவேலாயுதம் சாம்பசிவம், வயது 18, கடற்தொழில்; சுப்பிரமணியம் பேரின்பம், வயது 18, கடற்தொழில்; அப்பாத்துரை மதிவர்ணன், வயது 17, மாணவன்; நாகராஜா சிவகுமார், வயது 18, கூலித்தொழில்; செல்லையா யோகராஜா, வயது 18, விவசாயி; பொன்னுச்சாமி சத்தியரூபன், வயது 23, கொன்ஸ்ரபிள்; ஆகியோர் இதில் உள்ளடங்குவதாக நம்பப்படுகின்றது. சின்னத்தம்பி சிவலிங்கம், வயது 49, கூலித்தொழிலாளி என்பவரும் உடுப்பிட்டி முகாமில் கொல்லப்பட்டதாக நம்பப்படுகின்றது.*

*[79] பிரமாணப்பத்திரம் : சோமசுந்தரம் ராஜேஸ்வரி,* India's Mylai (1989) p17.

***மருத்துவமனைக்கு வெளியே உள்ள வீதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஊர் மக்களில் ஒரு குழு இரவு முழுவதும் அங்கேயே இருந்தனர். இப்போது மேலும் பலர் அவர்களோடு சேர்க்கப்பட்டு, அவர்களது எண்ணிக்கை மொத்தமாக அறுபது அல்லது எழுபது பேராக மாறியது. இந்திய அமைதி காக்கும் படையினரின் சித்திரவதை தொடர்ந்தும் அரங்கேறிக்கொண்டிருந்தது.***

முந்தைய நாள் தனது இரண்டு சிறிய மகன்களுக்கு பின்னால் ஓடிச்சென்றபோது சுட்டுக்கொல்லப்பட்ட செல்வரத்தினம் சிவமதியின் உடலை கூலித் தொழிலாளியாக 55 வயதான அவளது தந்தை வைத்தி சின்னத்துரை [80] தனது நண்பர் உதவியுடன் துணிந்து மீட்டார். இருவரும் சிவமதியின் உடலை பாதுகாப்பாக, மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். தற்போது அமைதியாக வீடு திரும்பும்போது இந்திய அமைதி காக்கும் படையினரால் பிடிக்கப்பட்டு 'கடுமையாக' தாக்கப்பட்டனர். பின்னர் மருத்துவமனைக்கு முன்னால் ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டிருந்த 'அறுபது பேருடன்' சேர்க்கப்பட்டனர். மருத்துவமனைக்கு வெளியே தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுள், 30 வயது இளைஞனும் ஒருவன்[81] முதல் நாள் வேர்வில் பிள்ளையார் கோவிலுக்குப் பாதுகாப்புக்காக சென்று அங்கே இருந்த 'மற்றைய இளைஞர்களோடு' இணைந்தபோது இவ்இளைஞனும் மற்றையவர்களும் இந்திய இராணுவத்தினரால் 'அங்கேயே இருக்க வேண்டும், தப்ப முயன்றால் சுடப்படுவார்கள்' என்று எச்சரிக்கப்பட்டனர். விடிந்த போது வேர்வில் பிள்ளையார் கோவிலில் இருந்தவர்களும் மருத்துவமனைக்கு வெளியே உள்ள வீதிக்கு கொண்டுவரப்பட்டனர். எல்லோரும் ஏறத்தாள 100 மீட்டர் தூரமுள்ள 'தார் வீதியில் உருண்டு போய் உருண்டு வரவேண்டும்' என்று பணிக்கப்பட்டனர். உருளும்போது எல்லோரும் 'இரும்புக் கம்பியாலும், குண்டாந்தடியாலும் தாக்கப்பட்டனர்'. படுகாயம் அடைந்து மிதிவண்டி மூலம் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்ட திருமதி. சித்திவிநாயகம் மற்றைய நோயாளிகளுடன் இந்த கொடுமைகளை யன்னல் ஊடாகப் பார்த்து அதற்கு சாட்சியமாய் இருந்தது பற்றி மகளிடம் கூறியிருந்தார். அவர்களால் 'அதற்கு மேல் அந்தக் காட்சியைப் பார்க்க முடியவில்லை'. மருத்துவமனையில் இருந்தவர்கள் 'தங்கள் தலையை சுவரில் மோதிக் கதறி அழுதனர்'.

***மோசமான தாக்குதலை நடாத்திக்கொண்டே, தடுத்து வைக்கப்பட்டவர்கள் திரும்பவும் வல்வெட்டித்துறைச் சந்திக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கு சென்றதும் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்டும், காலை 10 மணிக்கு வல்வெட்டித்துறைச் சந்தியை அடைந்தவர்கள் அங்கு ஏற்கனவே 200 வரையான படையினரால் சுற்றி வளைக்கப்பட்டிருந்த 60 அல்லது 70 பேருடன் அங்கே மீண்டும் தடுத்து வைக்கப்பட்டார்கள். பிற்பகல் 2 மணியளவில் படையினர் எல்லோரையும் வரிசையில் நிற்கவைத்தனர்.***

மருத்துவமனைக்கு அருகிலிருந்து கொண்டுவரப்பட்ட மக்கள் வல்வெட்டித்துறைச் சந்தியை வந்தடைந்ததும், முதல் நாள் கடையில் பொருட்கள் வாங்கிக்கொண்டிருக்கும் போது பிடிக்கப்பட்ட 36 வயதான மீனவர், கடுமையான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார். [82] அவரது முன் கைகளில் எலும்பு முறிவு ஏற்பட்டது. கூட்டத்தில் இருந்த இன்னொரு இளைஞன் சூரியனைப் பார்த்தபடி படுத்திருக்கும்படி பணிக்கப்பட்டான். [83] மற்றவர்கள் வல்வெட்டித்துறைச் சந்தியில் உள்ள பேருந்து தரிப்பிடத்திற்குப் பக்கத்திலுள்ள காத்திருப்பு அறைக்குள் தள்ளப்பட்டு, எல்லோரும் தாக்கப்பட்டார்கள். [84] 55 வயதான ஓய்வுபெற்ற மருத்துவமனை ஊழியரைத் தாக்கி, நெருக்கமாக துப்பாக்கியால் குறி வைத்து, படையினர் கொன்றனர். இதெல்லாம் அவரது 20 வயது மகன் [85] கண்முன்னே நடந்தது. அவன் தனது தந்தை 'இரத்த வெள்ளத்தில்' கிடந்ததையும், 'இரத்தம் தலை மற்றும் மார்பிலிருந்து கொட்டுவதையும்' பார்த்தான். மகன் காலையில் மருத்துவமனையில் வைத்து கைது செய்யப்பட்டு இங்கு தடுத்து வைக்கபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மதியம் 2 மணியளவில் வல்வெட்டித்துறைச் சந்திக்குக் கொண்டுவரப்பட்ட 'ஆறு இளைஞர்களும் நான்கு பதின்ம வயதுப் பையன்களும்' [86] படையினருக்கு மிகவும் பிடித்த 'தார் வீதியில் உருளும் போதே பலமாக தாக்கப்படும்' தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். கொழுத்தும் வெய்யிலால் தார் உருகியிருந்த நிலையில் எல்லோருமே 'வலியில் கதறினர்'. பின்னர் ஆறு இளைஞர்களும் தனியாக வரிசையில் நிற்க வைக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். 16 வயது மகனான பாலசுப்பிரமணியம் மகேந்திரதாஸ் [87] (மாணவன்) மற்றும் 28 வயது மருமகன் துரைராஜா நாகதாஸ் (மின் பணியாளன்) இருவரும் 'எல்லா இளைஞர்களுடனும் வரிசையில் நிற்க வைத்துச்' சுட்டுக் கொல்லப்படுவதைப் பார்க்கும் துர்ப்பாக்கிய நிலைமை சதாசிவம் பாலசுப்பிரமணியத்திற்கு ஏற்பட்டது. இந்த அசம்பாவிதத்தில் கொல்லப்பட்டவர்களில் இரண்டு இளம் கடைக்காரர்களும் அடங்கியிருந்தனர். 22 வயதான சுந்திரமூர்த்தி உமாசங்கர் அதில் ஒருவர். அவரது தந்தை இரண்டு வருடங்களுக்கு முன்பு இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்ட பின்பு இவரே 'குடும்பப் பொறுப்பை ஏற்றிருந்தார்'. வீட்டில் இருந்து இந்திய அமைதி காக்கும் படையினரால் அவர் அழைத்துச்செல்லப்படும் போது

*[80] பிரமாணப்பத்திரம் : வைத்தி சின்னத்துரை, India's Mylai(1989) p20.*
*[81] பிரமாணப்பத்திரம் : நடனசிகாமணி ரவீன்ராசா (2 செப்ரெம்பர் 1989)*
*[82] பிரமாணப்பத்திரம் : செல்லத்துரை கோபாலசாமி (01.09.1989).*
*[83] பிரமாணப்பத்திரம் : நடனசிகாமணி ரவீன்ராசா (2 செப்ரெம்பர் 1989)*
*[84] பிரமாணப்பத்திரம் : வைத்தி சின்னத்துரை.*
*[85] பிரமாணப்பத்திரம் : மயில்வாகனம் கோணேஸ்வரன் (12 ஓகஸ்ற் 1989)*
*[86] பிரமாணப்பத்திரம் : நடனசிகாமணி ரவீன்ராசா (2 செப்ரெம்பர் 1989)*
*[87] பிரமாணப்பத்திரம் : சதாசிவம் பாலசுப்பிரமணியம், (12 ஓகஸ்ற் 1989), மற்றும் பிரமாணப்பத்திரம் : திருமதி நாகதாஸ் சுமதி (14 ஓகஸ்ற் 1989).*

அவருடைய சகோதரியும் மச்சாளும் [88] மிரட்டல்களை பொருட்படுத்தாமல் பின் தொடர்ந்தனர். அவர் மற்றவர்களோடு வரிசையில் நிற்க வைக்கப்பட்டு' சுடப்பட்ட போது அவரது சகோதரி 'அம்மா' என்று சத்தமாக அலறினார்.



பாலசுப்ரமணியன்
மகேந்திரராஸ்



துரைராஜா
நாகதாஸ்



தணிகாசலம்
ரவிச்சந்திரன்



சுந்தரமூர்த்தி
உமாசங்கர்

பின்னர் அவர்களைப் படையினர் அடித்துக் கலைத்தனர். இரண்டாவது கடைக்காரர் தணிகாசலம் ரவிச்சந்திரன் ஆவார். அவரை இந்திய அமைதி காக்கும் படையினர் அழைத்துச் சென்ற போதும், அவரது அம்மா 'அழுது கொண்டே பின்னால் சென்றார்'.[89] ஆனால் அதனால் எந்த பயனும் கிடைக்கவில்லை. இந்திய இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டபோது, ஐந்து இளைஞர்கள் அவ்விடத்திலேயே இறந்தபோனார்கள் என்றும், ஒருவர் உடனயாக மரணமடையவில்லை என்றும், தனக்கு உதவி செய்யுமாறு அவர் கதறிக் கொண்டிருக்கையிலேயே படையினர் அவர் மீது மறுபடியும் துப்பாக்கிச் சூடு நடாத்தினார்கள் என்றும் அறிக்கைகள் சுட்டிக்காட்டின.[90]

***நகரத்தின் இன்னொரு பகுதியில் வீடுகளுக்குத் தீ மூட்டுவது தொடர்ந்தது. இந்திய அமைதி காக்கும் படையினர் மிகுந்த ஆர்வத்துடன் அதில் ஈடுபட்டதாக நேரில்க் கண்டவர்கள் கூறினர்:***

முந்தைய நாள் வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து விடுவிக்கப்பட்ட ஒருவர், தனது குடும்பத்தை தேடி அலைந்தும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்போது வீட்டுக்கு போக முனைந்தபோது படையினர் 'சாம்பலாக்கு சாம்பலாக்கு'[91] என உற்சாகமாக கத்தியபடி அவரது வீட்டைக் கொழுத்துவதைப் பார்த்தார். வீடு எரிந்து, சாம்பலாகியது. அவர் வாழ்வாதாரமாக இருந்த மாடு உட்பட்ட கால் நடைகள் எல்லாவற்றையும் இந்தியப் படையினர் கொன்றிருந்தார்கள்.

## உடுப்பிட்டியில் நடந்த மேலும் பல வன்முறைகள்.

உடுப்பிட்டியில் வசித்த நாகலிங்கம் பவப்பிருந்தாவின் குடும்பம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் நெருங்கி வருவதை கேட்டது. பாதுகாப்பான வீடுகளுக்குச் செல்வதே தங்களது 'உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள' ஒரே வழி என்று நினைத்த அவர்கள் தங்களது வீட்டைவிடப் பாதுகாப்பானது என்று அவர்கள் எண்ணிய வீட்டை நோக்கி ஓடியதாக அவரது சகோதரர் தன்னுடைய வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.[92] இந்திய அமைதி காக்கும் படையினரால் நடத்தப்பட்ட பலத்த துப்பாக்கிச் சூட்டில் பாய்ந்த குண்டொன்று பவப்பிருந்தாவின் தொண்டையில் பாய்ந்தது. சகோதரன் 'அவளது தலையை தூக்கிய போது அவள் இறந்திருந்தாள்'. அப்போது பவப்பிருந்தாவுக்கு 14 வயதே ஆகியிருந்தது. இன்னுமொரு உடுப்பிட்டி வாசியான, 70 வயதான திருமதி. நடராசா நல்லமுத்து (எட்டாம் பக்கத்திலுள்ள படம்) மகனுடன் வீட்டில் இருந்தார் [93] . மாலை நான்கு மணியளவில் 'அந்த வழியாக வந்த' இந்திய அமைதி காக்கும் படையினர் மகன் கண்முன்னே தாயைச் சுட்டனர். தாய் 'உடனடியாக இறந்தார்'. இது உடுப்பிட்டியில் இருக்கும் மகனின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*[88] பிரமாணப்பத்திரம் : சுந்தரமூர்த்தி இந்திராணி. Affidavit,India's Mylai (1989) p14, மற்றும் பிரமாணப்பத்திரம் : செல்வி சந்தரமூர்த்தி தீபமலர் (12 ஓகஸ்ற் 1989)*

*[89] பிரமாணப்பத்திரம் : தணிகாசலம் மெய்ஞானமலை (12 ஓகஸ்ற் 1989)*

*[90] eg UTHR, Jaffna Report 3. (இதில் பட்டியலிடப்பட்டுள்ள இருவரது அடையாளங்கள் தெளிவில்லாமலுள்ளன.)*

*[91] பிரமாணப்பத்திரம் : முருகுப்பிள்ளை லட்சுமணப்பெருமாள் India's Myla (1989) p14.*

*[92] பிரமாணப்பத்திரம் : நாகலிங்கம் நடேசன் (12 ஓகஸ்ற் 1989).*

*[93] பிரமாணப்பத்திரம் : நடராஜா சரவணபவன் India's Mylai(1989) p15.*


திருமதி நடராசா நல்லமுத்து

**மாலையில் வல்வெட்டித்துறைச் சந்தியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பலர் வீதியூடாக ஊறணி மருத்துவமனைக்குப் போகுமாறு பணிக்கப்பட்டனர்.**

மாலை 5.30 மணியளவில் வல்வெட்டித்துறைச் சந்தியில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டவர்கள், கடற்கரை வீதியூடாக மீண்டும் கிழக்கு நோக்கிச்செல்ல வற்புறுத்தப்–பட்டனர். செல்வக்கதிரமலை மயில்வாகனம் கடற்கரை வீதியில் 'தலையில் பெரும் சூட்டுக் காயத்துடன்' இறந்து கிடந்தார். இதை செல்லும் வழியில் அவரது மகனே காண நேர்ந்தது. படையினர் 'எல்லோரையும் சுட்டு, கடலில் தூக்கி வீசப் போவதாக' மிரட்டினர். எல்லோரும் நாள் முழுவதும் 'தண்ணீர் உணவு எதுவும் இல்லாமல் கொழுத்தும் வெய்யிலில்' தடுத்து வைக்கப் பட்டிருந்ததோடு, இரவாகியும் விடுவிக்கப்படாமல் வீதியிலேயே படுத்திருந்தனர். என்று வைத்தி சின்னத்துரை தெரிவித்திருந்–தார். இவர் மகள் செல்வரத்தினம் சிவமதியின் உடலை மீட்டு, மருத்துவமனைக்குக் கொண்டுவந்து திரும்பும் போது, வாசலில் மறிக்கப்பட்டு படையினரின் 'வீதியில் அடிவாங்கும் தண்டனைக்கு' உள்ளானவர் என்பது குறிப்பிடத்தக்கது.


# மூன்றாம் நாள். 04-08-1989:

## மூன்றாவது நாள் காலையில் இந்திய அமைதி காக்கும் படை மேற்கொண்ட அழிவுகள்

வீட்டிலேயே பாதுகாப்பாக இருந்த கனகசுந்திரம் நடேசனும் [94] அவரது குடும்பமும் இதுவரை நடந்த வன்முறைகளில் இருந்து தப்பித்துக் கொண்டனர். அப்போது இந்திய அமைதி காக்கும் படையினர் அவரது வீட்டுக்குள் நுழைந்தனர். படையினர் பெறுமதியான சில பொருட்களை எடுத்துவிட்டு எஞ்சிய சொத்துக்களை எரித்தனர். குடும்பத்தினர் இந்திய அமைதி காக்கும் படையின் துப்பாக்கிச் சூட்டில் இருந்து 'மயிரிழையில் உயிர் தப்பினர். இந்த மோசமான சம்பவத்திற்கு பின் கையறு நிலையில் இருந்த அந்தக் குடும்பம் மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தது. அதே போலவே, இந்திய அமைதி காக்கும் படையினர் முத்துச்சாமி கந்தசாமித்துரையின் [95] வீட்டுக்கும் இப்போதுதான் முதன் முதலில் வருகிறார்கள். படையினர் 'படலையை உடைத்து எல்லோரையும் தாக்கி வீட்டில் இருந்து வெளியே துரத்தி', 'மண்ணெண்ணையை ஊற்றி, வீட்டைக் கொழுத்தினார்கள்'. குடும்பத்தினர் அடைக்கலம் தேடிப் பக்கத்தில் உள்ள கோயிலில் தஞ்சமடைந்து பின்னர் மதிய வேளை திரும்பி வந்து பார்த்தனர். வீடு, சொத்துக்கள் எல்லாம் அழிக்கப்பட்டு பாதி எரிந்து இடிந்து போய் இருந்தது. அதே போல் ஓய்வுபெற்ற வைத்தியரான கனகசுந்திரம் அழகானந்தசுந்தரத்தின்[96] வீடும் தனியார் சிகிச்சை நிலையமும் மூன்றாம் நாள் கொழுத்தப்பட்டன. அவரும் அவரது மனைவி மற்றும் மூன்று மகள்களும் 'அங்கிருந்து தப்பியோடி தங்கள் உயிரைக் காத்துக்கொண்டார்கள்'. எல்லாமே 'முற்றாக எரிக்கப் பட்டன'. இந்த மன உளைச்சலால் பாதிக்கப்பட்ட குறிப்பாக நோய்வாய்ப்பட்ட மனைவியும், மூன்று மகள்களும் எதிர் காலத்தில் என்ன பாதிப்புக்களுக்கு ஆளாவார்கள் என்பது கவலையளிப்பதாக அந்த வைத்தியர் தெரிவித்திருந்தார்.

## குறைந்தது எழுந்தமானமாக நடந்ததாகத் தென்பட்ட ஒரு கொலையும் மூன்றாம் நாள் நடந்தது.

மூன்றாம் நாள் காலை பத்து மணியளவில் 30 வயதான கூலித்தொழிலாளி சின்னவன் காந்தன் வல்வெட்டித்துறை மேற்கே உள்ள தனது வீட்டிலிருந்து 100 அடி தொலைவில் உள்ள மரக்கறித் தோட்டத்திற்கு சென்றார். உள்ளே இருந்த 25 வயதான அவரது மனைவிக்கு[97] துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. படையினர் சென்று கொண்டிருந்ததால் அவர் வெளியே போவதற்குத் துணிவு ஏற்படவில்லை. பின்னர் மரக்கறிகளுக்கிடையே அவரது கணவனின் உடலைத்தான் பார்க்க முடிந்தது. தான் 'அதிர்ச்சிக்கு உள்ளானதாகவும்' அழுது குழறிய போது மற்றையவர்கள் உதவிக்கு வந்தாதகவும் ஆனால் 'அவர்களால் எதுவும் செய்ய இயலவில்லை' என்றும் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். 'சொல்ல முடியாத துயரங்களுடன்' தனது இரண்டு குழந்தைகளுடன் அவர் இப்போது தனித்து விடப்பட்டிருந்தார்.



சின்னவன் காந்தன்

## மருத்துவமனைக்கு வெளியே தடுத்து வைக்கப் பட்டிருந்தவர்கள் மதிய வேளை வரை அங்கேயே இருந்தார்கள்

ஊறணி மருத்துவமனைக்கு வெளியே தடுத்து வைக்கப்–பட்டிருந்தவர்கள் இரண்டு நாட்கள் சித்திரவதைக்குப் பிறகும் தரையிலே கிடந்தனர். இறுதியாக இரண்டு மணியளவில் பெரும்பாலானவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஏறத்தாள 20 பேர் பொலிகண்டி இராணுவ முகாமை நோக்கிக் கூட்டிச் செல்லப்பட்டனர். அவர்களுக்கு என்ன நடந்தது என யாருக்கும் தெரியவில்லை. சிலர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் சென்றனர். 'தன்னுடைய உடல் முழுவதும் அடிகாயத் தழும்புகளும் காயங்களும்' இருந்ததாக ஒருவர் தன்னுடைய வாக்குமூலத்தில் கூறியிருந்தார். [98] தான் காயங்களுடன் 'தப்பியது' ஏழு பேர் கொண்ட தன் குடும்பத்தை காப்பாற்றவே என்று மீனவரான செல்லத்துரை கோபாலசாமி [99] தெரிவித்திருந்தார்.

---

*[94] பிரமாணப்பத்திரம் : கனகசுந்தரம் நடேசன் (18 செப்ரெம்பர் 1989)*
*[95] பிரமாணப்பத்திரம் : முத்துசாமி கந்தசாமித்துரை India's Mylai (1989) p21.*
*[96] பிரமாணப்பத்திரம் : கனகசுந்தரம் அழகானந்தசுந்தரம் (10 ஒகஸ்ற் 1989)*
*[97] பிரமாணப்பத்திரம் : ராசமலர், காலச்சென்ற சின்னவன் காந்தனின் மனைவி (29 செப்ரெம்பர் 1989)*
*[98] பிரமாணப்பத்திரம் : நடனசிகாமணி ரவீன்ராசா (02 செப்ரெம்பர் 1989)*
*[99] பிரமாணப்பத்திரம் : செல்லத்துரை கோபாலசாமி (01 செப்ரெம்பர் 1989)*

**ஓகஸ்ற் 4 வெள்ளிக்கிழமை இந்திய அமைதி காக்கும் படையின் ஊரடங்கு உத்தரவு கடைசியாக நீக்கப்பட்டது. மக்கள் உணவு, தண்ணீர் அல்லது மருத்துவ உதவி இல்லாமல் மூன்று நாட்கள் தவித்திருந்தார்கள். காயங்களோடு சிகிச்சை பெறுவதற்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள். தமது காயங்கள் உடனடியாக குணமாகும் என்று எதிர்பார்க்கவில்லை அல்லது குணமே ஆகாது என்று கூட எதிர்பார்த்தார்கள்.**

இந்திய அமைதி காக்கும் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த MSF மருத்துவப் பணியார்களால் தற்போது வல்வெட்டித்துறை ஊறணி மருத்துவமனைக்கு வர முடிந்தது, அவர்கள் மக்களின் வீடுகளுக்கு சென்றதோடு அங்கே படுகாயமடைந்திருந்த, பத்து நோயாளிகளை பெரிய சத்திர சிகிச்சைகளுக்குத் தேர்ந்தெடுத்தனர். MSF நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் [100] 'அந்த நேரம் வல்வெட்டித்துறை மருத்துவமனையில் உள்நோயாளியாக இருப்பது மிகவும் ஆபத்தானது' என்று குறிப்பிட்டிருந்தார்.

திரு. சுப்ரமணியம் வீட்டில் நடந்த படுகொலையில் கையில் பலத்த காயத்துடன் தப்பிய தச்சுத் தொழிலாளியின் கை மீண்டும் இயங்குவது சாத்தியமில்லை என்று தெரிவிக்கப் பட்டது. அதே வேளை படையினரின் வாகனம் போய்க் கொண்டிருக்கும் போது வீட்டுக்கு வெளியே நின்று கொண்டிருந்த 28 வயதான இந்திராணிதேவி [101] நடராசா, இரண்டு கால்களிலும் சுடப்பட்டார். அவரது கால்களில் ஒன்று செயலிழந்து போனது. அதேபோல மகாலிங்கம் சங்கரகாந்திலிங்கம் [102] அவர்களின் 21 வயது மகன் A.G.A. ஒழுங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினரைப் பார்த்து ஓடிய போது கால்களில் இலக்கு வைத்து சுடப்பட்டார். பருத்தித்துறையில் சிகிச்சை பெற்றிருந்தும் கூட, ஒரு வாரம் கழித்தும் அவரால் நடக்க முடியவில்லை. தனது 'வீட்டை ஒட்டி சிறிய கடை ஒன்றை' நடத்தி, அதன் மூலம் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்ட 81 வயதான திருமதி. தங்கப்பொண்ணு செல்லத்துரை [103] படுகாயம் அடைந்த இன்னொருவர் ஆவார். வன்முறை நடைபெற்ற போது அவர் வீட்டைப் பூட்டிக் கொண்டு உள்ளே இருந்தார். படையினர் வீட்டை உடைத்து அவரை தாக்கினார்கள், ஒரு வாரம் கழித்து தனியாக வாழ முடியாது என்பது தெளிவாகத் தெரிந்தது.

**ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னர், குடும்பங்கள் திரும்ப இணைந்ததும் காணாமல்ப் போனவர்களை கண்டு பிடித்ததும் பலருக்கும் ஆறுதலைத் தந்தது. ஆனால் வீடுகளுக்கும் உடமைகளுக்கும், தொழில் உபகரணங்களுக்கும் ஏற்பட்ட இழப்பைக் கண்டு, வல்வெட்டித்துறை மக்கள் திகைத்துப் போயினர், என்ன செய்யப் போகின்றோம் என்ற ஏக்கம் அவர்களிடம் காணப்பட்டது.**

வன்முறை வெடித்த போது கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த பதின்ம வயதுச் சிறுவர்களில், மோகனும் அவனது சகோதரனும் இறுதியில், வெளியே சென்று, திரும்பி வரமுடியாமல் இருந்த அவர்களது தந்தையுடன் திரும்பவும் இணைந்து கொண்டனர். இராணுவ சிகிச்சை நிலையத்திற்கு வந்த இந்திய அமைதி காக்கும் படையின் பிரிகேடியர் ஒருவர் அங்கே திரு. ஆனந்தராஜ் இருப்பதைக் கண்டார். நெருங்கிய விசாரணைக்கு பிறகு 'தவறுதலாக மோசமாக நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததுடன், உடனடியாக அவரை விடுவிக்குமாறு பணித்தார். திரு. ஆனந்தராஜ் பலத்த காயங்களுடன் இன்னும் 40 பேருடன் வீட்டை நோக்கிச் சென்றார்.



அவரது மகள் கல்யாணி உட்பட குடும்பத்தினர் யாருக்கும் கடந்த 48 மணி நேரமாக அவர் உயிரோடு இருக்கிறாரா இல்லை இறந்து விட்டாரா என்பது தெரிந்திருக்கவில்லை.



திரு. சிவகணேசன் வீட்டில் தஞ்சமடைந்தவர்களுள் ஆறு பிள்ளைகளின் தாயான விதவையின் குடும்பமும் ஒன்று. [104] அங்கு ஆட்கள் கொல்லப்பட்ட பிறகு பாடசாலைக் கட்டடங்களிலும் பிறகு இன்னொரு வீட்டிலும் ஒளிந்திருந்து கொண்டார்கள். ஓகஸ்ற் நான்காம் திகதி தங்கள் வீடு 'முற்றாக எரிக்கப்பட்டு' உடமைகள் அழிக்கப்பட்டதை அறிந்து கொண்டார்கள். இரண்டு சுவர்க் கடிகாரங்கள், இரண்டு வானொலிப் பெட்டிகள், கோழிகள் அவர்கள் இழந்தவைகளில் சில. 'தனது குழந்தைகளின் வாழ்க்கையை எப்படிச் சரி செய்யப் போகிறேன் என்பதுதான் அவருடைய அப்போதைய பெரும் கவலையாக' இருந்தது என இருவாரங்களுக்குப் பின்னர் வழங்கிய வாக்குமூலத்தில் அத்தாய் தெரிவித்திருந்தார். படையினர் வந்தபோது வீட்டின் பின்பக்கமாக தப்பிச் சென்ற இன்னொரு பெண் [105] மீண்டும் வீடு திரும்புகையில் பட்டுச் சேலைகள், முதல் சிறுவர்களின் புத்தகங்கள், மூக்குக் கண்ணாடி, நொருங்கிய சன்னல்கள், எரிந்த கதவுகள் வரை எல்லாமே சிதைந்திருந்தன. அவர் 'தாங்க முடியாத இழப்பைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்'. கடற்கரை ஓரமாக வசித்து வந்த மீனவர் [106] ஒருவரின் வீட்டுப் பொருட்கள், சுவர்க் கடிகாரம், சன்னல்கள் வீட்டின் கதவுகள் எல்லாமே அழிக்கப் பட்டிருந்ததோடு அவரது வாழ்வதாரத்திற்கான மீன்பிடி வலைகளும் எரிக்கப்பட்டிருந்தன.

---

[100] *Johanna Lurusdottir, MSF telex(10 August 1989).*

[101] *பிரமாணப்பத்திரம் : இந்திராணிதேவி நடராஜா (திகதி இடப்படவில்லை)*

[102] *பிரமாணப்பத்திரம் : மகாலிங்கம் சங்கரகாந்தலிங்கம் (05 செப்ரெம்பர் 1989)*

[103] *பிரமாணப்பத்திரம் : தங்கப்பொண்ணு செல்லத்துரை (22 ஒக்ரோபர் 1989).*

[104] *பிரமாணப்பத்திரம் : பசுபதி வேலுச்சாமி (திகதி இடப்படவில்லை)*

[105] *பிரமாணப்பத்திரம் : திருமதி சிவப்பிரகாசம் சுதாதேவி (07 செப்ரெம்பர் 1989)*

[106] *பிரமாணப்பத்திரம் : கந்தசாமி நாகேஸ்வரன் India's Mylai (1989) p22.*



கந்தசாமி தங்கராசா



பாலகிருஸ்ணன் பிறேம்ராஜ்



செல்வகதிரமலை மயில்வாகனம்



சின்னத்துரை தம்பித்துரை

### இறுதிச் சடங்குகள்

**வல்வெட்டித்துறையில் உள்ள பலருக்கு நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், கணவன்மார்கள், மனைவிமார்கள் மற்றும் பிள்ளைகளின் இறப்பைப் பற்றி இப்போதுதான் தெரிய வருகிறது. இறந்த உடல்களை அகற்றுவதே அன்று வேதனை அளிக்கக் கூடிய உடனடித் தேவையாக இருந்தது. வீதியில் போட்டிருந்த தாரை உருக்கக் கூடியளவுக்கான வெய்யிலும் பிணங்களை வேகமாக அழுகச் செய்தன. உறவினர்கள் இந்து முறைப்படியான மரணச் சடங்குகளை கைவிட வேண்டியிருந்தது. அகற்ற முடியாத சடலங்கள் அவை இருந்த இடங்களிலேயே தகனம் செய்யப்படுவதைத் தவிர வேறு வழியேதும் இருக்கவில்லை. பல சடலங்கள் சில ஒழுங்கைகளில் ஆங்காங்கே சிதறியிருந்தன. உடைந்த தளபாடங்கள், கார் ரயர்கள் அல்லது கையில் கிடைத்தவற்றைப் பயன்படுத்தி உடலங்களை எரிப்பதற்கான தற்காலிகச் சிதைகள் உருவாக்கப்பட்டன.**

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதும் வல்வெட்டித்துறைக்கு வந்த MSF மருத்துவப் பணியாளர்களில் ஒருவர் 'எவ்வாறு எல்லா இடங்களிலும் இறந்த உடல்கள் பரவிக் கிடந்தன' என்பதை விபரித்தார். சில உடல்களின் பகுதிகள் தெரு நாய்களால் உண்ணப்பட்டிருந்தன. அதே நேரம் அந்த வாரம் வந்திருந்த சண்டே ரெலிக்கிராப் [107] (Sunday Telegraph) கட்டுரையில் மரத்தில் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒரு சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக குறிப்பிடப் பட்டிருந்தது.

முதல் நாள் இந்திய அமைதி காக்கும் படையால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட 23 வயதான செந்திவேல் சக்திவேலின் இறந்த உடல் வல்வெட்டித்துறைச் சந்தியில் கிடப்பதாக அவரது தந்தைக்கு தெரியவந்தது. 'தான் அங்கு சென்ற போது சுடப்பட்டு இறந்த தன் மகனின் உடலை அகற்ற முடியாமல் இருந்ததால் வல்வெட்டித்துறைச் சந்தியிலேயே எரித்ததாக' தந்தை கூறியிருந்தார். கந்தசாமி தங்கராசா கொல்லப்பட்ட செய்தியை கேள்விப்படும் வரை அவரது மனைவி [108] 'கவலையும் பதட்டமும் சேர' வீட்டிலேயே இருக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருந்தார். கணவரின் உடல் 'அழுகிய நிலையில்' அன்று மாலை வல்வெட்டித்துறைச் சந்தியில் வைத்தே மருமகனால் [109] தகனம் செய்யப்பட்டதை இப்போது கேள்விப்பட்டார். கடைக்கு வெளியே முதல் நாள் கொல்லப்பட்ட இளைஞரை, அவரது தந்தை அவ்விடத்தில் வைத்தே தகனம் செய்தார். அதேபோல் 'சந்தி ஒழுங்கையில்' இறந்து கிடந்த வாடகை வண்டி ஓட்டுனரான பாலக்கிருஷ்ணா பிறேம்ராஜ் உடலை அவரது தந்தை அங்கேயே தகனம் செய்தார். தனது மகனின் மரணம் 'பெருந்துயர்' என்றும்

[107] *Jeremy Gavron, Sunday Telegraph (13 August 1989).*
[108] *பிரமாணப்பத்திரம் : தங்கபூரணம், காலஞ்சென்ற கந்தசாமி தங்கராஜாவின் மனைவி (30 செப்ரெம்பர் 1989)*
[109] *பிரமாணப்பத்திரம் : வைரமுத்து கருணாநிதி, India's Mylai (1989) p15.*

எதிர்காலத்தில் இந்த மன வேதனையை [110] எப்படி கடக்கப் போகிறேன் என்று திகைத்துப்போய் நிற்பதாக கூறியிருந்தார். இளம் மரக்கறிக்கடை உரிமையாளர் ராமச்சந்திரம் நவரத்தினம் [111] என்பவரது உடலம் குடும்ப உறுப்பினர்கள் யாருமே இல்லாமல் வல்வெட்டித்துறைச் சந்தியில் வைத்தே தகனம் செய்யப்பட்டது.

அறுபது வயதான சின்னத்துரை தம்பித்துரை 'அவரைப் பார்த்துக் கொள்ள யாரும் இல்லாமல்' உறவினர்களுடன் வாழ்ந்து வந்தார். [112] முதல் நாள் காலை ஒன்பது மணிக்கு வெளியே சென்றவர் பிறகு வீடு திரும்பவே இல்லை. அவருடைய உறவினர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அவரது அழுகிய உடலை ஆலடி ஒழுங்கைக்குப் பக்கத்தில் கண்டுபிடித்தனர். 'அவர் அங்கேயே தகனம் செய்யப்பட்டார். வன்முறை ஆரம்பித்த போது சலவைத் தொழிலாளியான திருமதி. கந்தசாமி வல்வெட்டித்துறைச் சந்தியில் தனது கணவனுடன் [113] பேருந்துக்காக காத்திருந்தார். துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்புவதற்காக கணவனும் மனைவியும் கடற்கரைக்குச் செல்லும் ஒழுங்கை ஊடாக ஓடினார்கள். துப்பாக்கிச் சூடுபட்டு மனைவி கீழே விழுந்தார். மனைவி விழுவதைப் பார்த்த போது மனைவியின் முதுகில் இருந்து இரத்தம் கொட்டியதைக் கணவர் கண்டார். தொடர்ந்தும் துப்பாக்கிச் சூடுகள் அவரை நோக்கி வந்ததால் 'உயிருக்குப் பயந்து' அங்கிருந்து தப்பியோடியதாக கணவர் பின்னர் கூறினார். ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் மனைவியின் அழுகிய சடலத்தை அதே இடத்தில் கண்டுபிடித்த கணவர் அங்கேயே தகனம் செய்தார்.



திரு. சிவகணேசன் வீட்டில் கொல்லப்பட்ட நான்கு பேரும் பக்கத்தில் உள்ள நெல் வயலில் எரியூட்டப் பட்டனர். அவர்களுள் ஒருவரான நடராசா ரவீந்திரனின் விதவை மனைவியும் [114] நான்கு சிறு குழந்தைகளும் ஊரடங்குச் சட்டம் நீடித்த வரை வீட்டிலியே சிக்கியிருந்தனர். தகனம் செய்வதற்கு முன்பு 'துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனான' கணவனின் உடலை பார்த்துத்தான் கணவன் இறந்து விட்டதைத் தெரிந்து கொண்டார். திரு. சுப்பிரமணியம் வீட்டுக்குள் கொல்லப் பட்டவர்கள் ஒன்றாக எரியூட்டப்பட்டனர். தாயும் சகோதரனும் கண்முன்னே கொல்லப்பட்டதைப் பார்த்த ஜெகன்ராஜ் அப்போது 'மோசமாக அழுகிய நிலையில்' இருந்த ஒன்பது பிணங்களில் இருந்து தனது குடும்பத்தினரை அவர்களது ஆடைகளை வைத்து அடையாளம் கண்டார். உறவினர்கள் மற்றும் அயலவர்கள் உதவியுடன் ஒன்பது உடல்களும் 'பக்கத்துக் காணியில் இருந்த கிடங்கில் வைத்து' தகனம் செய்யப்பட்டன. திரு. சுப்ரமணியத்தின் விதவை மனைவியும் அங்கேயிருந்தார். அப்பொழுதுதான் 28 வயதான அவரது மூத்த மகன் சுப்பிரமணியம் அமுதன் வீட்டில் இருந்து 75 அடி தூரத்தில் உள்ள அவரது கடையில் வைத்து எரித்துக் கொல்லப்பட்டது தெரிய வந்தது. இவர்தான் மூன்று நாட்களுக்கு முன்பு திரு. ஆனந்தராஜின் இளைய மகள் பரீட்சையில் சித்தி பெற்றமைக்காக தின்பண்டங்கள் வாங்க மிதி வண்டியில் கடைக்கு வந்த போது, பின் மதில் வழியாகக் தூக்கி அனுப்பி காப்பாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த திடீர் மரணத்தால் தானும், எஞ்சியிருக்கும் தனது இரண்டு மகன்களும் 'மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும்' 'தாங்களே கொல்லப்பட்டதாக உணர்வதாகவும்' தாய் பின்னர் தெரிவித்திருந்தார்.

**வீட்டுக்கு வெளியே இழுத்து வரப்பட்டு அவர்களது காணி மதில்களுக்கு முன்னால் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டவர்களது சடலங்கள் அவர்களது காணிகளுக்குள்ளேயே ஒன்றில் தகனம் செய்யப் பட்டன அல்லது புதைக்கப்பட்டன.**

உடுப்பிட்டி முகாமில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வீடு திரும்பிய தேநீர்க் கடை உரிமையாளர் ராமகிருஷ்ணன் சிவலிங்கத்திற்கு அப்போது தான் தனது வீடு 'முற்றாக எரிக்கப் பட்டிருப்பதும்', சகோதரரும் சகோதரியின் மகனும் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதும் தெரிய வந்தது. தனது மகளின் கணவருடன் சேர்ந்து, 'மிகவும் அழுகிய' நிலையில் இருந்த இரண்டு உடல்களுக்கும் வீட்டின் கோடியில் இறுதிக்கிரியை நடத்தினார். 'அயலவர்களின் உதவியுடன் இரண்டு உடல்களும் வீட்டுக் காணியிலேயே தகனம் செய்யப்பட்டன' என்று, கந்தசாமியின் இரு சகோதரர்களின் இளம் மனைவிகள் இருவரும் தங்கள் வாக்குமூலத்தில் தெரிவித்தனர். அதே வேளை உடுப்பிட்டியில் 14 வயதான பவப்பிருந்தாவின் உடலை உள்ளூர் சுடுகாட்டில் தகனம் செய்வதற்கு இந்திய அமைதி காக்கும் படையினர் மறுப்புத் தெரிவித்தனர். 'கடைசியில் இறுதிக் கிரியை தங்கள் காணியிலேயே நடத்தப்பட்டதாக' அவரது சகோதரர் தெரிவித்துள்ளார். இறந்தவரின் சடலம் ஒன்றைத் தகனம் செய்ய முயன்ற வேளையில், இந்திய அமைதி காக்கும் படையினரின் தலையீடு இருந்தது. மருமகனின் பத்திரிக்கைக் கடைக்கு முன்பாக கொல்லப்பட்ட ராசையா ராஜரத்தினம் அவர்களின் உடலை முதலில் எடுக்க முயன்ற குடும்பத்தினரை இந்திய அமைதி காக்கும் படையினரில் ஒருவர், 'அது புலி உறுப்பினருடைய சடலம்' கூறி அவர்களைத் தடுத்தார். கடைசியில் குடும்பத்தினர் அங்கேயே உடலை தகனம் செய்ய முயன்றபோது, இந்திய அமைதி காக்கும் படையினர் அங்கு சுற்றியிருந்த எல்லோரையும் பார்த்து 'யார் இந்த தமிழீழ விடுதலைப் புலி நபரின் உடலை

---

*[110] பிரமாணப்பத்திரம் : நடராஜா பாலகிருஸ்ணன் (26 ஓகஸ்ற் 1989) திருமதி பத்மாதேசி சண்முகலிங்கமும் தனது கணவருடைய சடலத்திலிருந்து துர்நாற்றம் வீசியதாகவும், அயலவர்களின் உதவியுடன் ஏனைய சடலங்களுடன் சேர்த்து, அவரது சடலத்தையும் உடனடியாகத் தகனம் செய்ததாகவும் தன்னுடைய பிரமாணப்பத்திரத்தில் கூறியுள்ளார். (14.08. 1989).*

*[111] பிரமாணப்பத்திரம் : நவரட்ணம் ராஜினி (22 ஓகஸ்ற் 1989).*

*[112] பிரமாணப்பத்திரம் : சுந்தரம் அருமைச்சந்திரலிங்கம் (29 ஓகஸ்ற் 1989).*

*[113] பிரமாணப்பத்திரம் : செல்லன் கந்தசாமி India's Mylai (1989) p22.*

*[114] பிரமாணப்பத்திரம் : நடராஜா ரவீந்திரன் (17 செப்ரெம்பர் 1989).*

எரித்தது' [115] என்று கேள்வி எழுப்பியதோடு, அவர்களை 'மோசமாக நடத்தி துன்புறுத்தினர்'. அங்கு துக்கம் விசாரிக்க வந்த சிலரை தங்களுடைய முகாம்களில் ஒன்றுக்கும் கொண்டு சென்று விசாரித்தார்கள்.



செல்வரட்ணம் சிவமதி



பீற்றர் விஜயராஜன்
கிருஷ்ணவதனா





அருள்பிரகாசம் சுவர்ணதாஜ்
குமாரவேல் செல்வானந்தவேல்

**சில தகனங்கள் பொது மயானங்களில் நடந்தன. குறிப்பாக இரண்டாம் நாளோ அல்லது மூன்றாம் நாளோ கொல்லப் பட்டவர்களின் உடல்கள் அல்லது ஊறணி மருத்துவமனையில் பாதுகாக்கப்பட்ட உடல்கள் அவ்வளவாக அழுகியிருக்கவில்லை என்பதால் உடலை எடுத்துச்செல்லக் கூடியதாக இருந்தது. இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியில் இந்து மரபு வழியில் ஆண்களே கொள்ளி வைக்கும் வழக்கம் இருந்தாலும், பெருந் தொயைான ஆண்கள் கொல்லப்பட்டதாலும் அல்லது காணாமல் போயிருந்ததாலும், சடலங்களுக்கு பெண்களே கொள்ளி வைக்கும் நிலை ஏற்பட்டது. பாரம்பரியமாக இந்துப் பெண்கள் கொள்ளி வைப்பது கிடையாது'. [116] என்று இந்தியன் எக்ஸ்பிறஸ் குறிப்பிட்டிருந்தது.**

தனது பேரனான அருள்பிரகாசம் சுவர்ணதாஸ்'ம் அவனுடைய நண்பர் குமாரவேல் செல்வானந்தவேலும் படையினரால் இழுத்துச் செல்லபட்ட போது, மோசமாக தாக்கப்பட்ட பாட்டி சோமசுந்திரம் ராஜேஸ்வரி ஊரடங்கு தளர்த்தப்பட்ட கையோடு, இருவரையும் தேடிச் சென்றார். இருவரது உடல்களும் 'மருத்துவமனைக்கு பின்னால்' இரத்த வெள்ளத்தில் வீதியோரத்தில் கிடப்பதைக் கண்டார். [117] துப்பாக்கி குண்டுகளாலும், கத்திக் குத்துக்களாலும் அவ்வுடல்கள் சல்லடையிடப்பட்டிருந்தன'. [118] அவர்களுடைய குடும்பத்தினரால் உடல்களை மயானத்தில் அடக்கம் செய்ய முடிந்தது. 21 வயது மீனவர் சுந்தரலிங்கம் ஞானவேல் 'கலவரத்தில்' சுடப்பட்டு இறந்தது தந்தையால் உறுதி செய்யப்பட்டாலும் அவரால் சரியாக எப்போது நடந்தது என்பதை உறுதிசெய்ய முடியவில்லை. [119] உடல் மோசமாக அழுகவில்லை என்பதால் இரண்டாவதோ அல்லது மூன்றாவது நாளோ சுடப்பட்டதாக அனுமானிக்கலாம். இவரும் மகனின் உடலை மயானத்தில் தகனம் செய்தார். இரண்டாவது நாள் வரிசையாக நிற்க வைத்து சுடப்பட்ட ஆறு இளைஞர்களின் இறந்த உடல்களும் பொது மக்களால், குறிப்பாக பெண்களால் காவிச் செல்லப்பட்டு, ஊறணி மயானத்தில் வைத்து தகனம் செய்யப்பட்டன என அவர்களது உறவுப் பெண்கள் தெரிவித்திருந்தனர். [120] பெண்கள் இவ்வாறான பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது பல வாக்குமூலங்களில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. [121]

**உடுப்பிட்டி முகாமில் காணாமல் போன பையன்களது குடும்பங்களுக்கு இந்த ஆறுதல்கூடக் கிடைக்கவில்லை. பெற்றோர்கள் இருவர் 'எவ்வளவு தேடியும் தங்களது பிள்ளைகள் பற்றிய தகவல்கள் எதனையும் அறிந்து கொள்ள முடியவில்லை என்று' தங்கள் வாக்குமூலங்களில் கூறியுள்ளனர்.**

---

[115] *பிரமாணப்பத்திரம் : முருகுப்பிள்ளை பிறேம்குமார், India's Mylai (1989) p17.*

[116] *Rita Sebastian: Indian Express, (24 August 1989).*
[117] *பிரமாணப்பத்திரம் : குமாரவேல் சூரியமூர்த்தி, India's Mylai (1989) p20.*
[118] *பிரமாணப்பத்திரம் : சோமசுந்தரம் ராஜேஸ்வரி, India's Mylai (1989) p17.*
[119] *பிரமாணப்பத்திரம் : அருளம்பலம் சுந்தரலிங்கம் (30 ஓகஸ்ற் 1989)*
[120] *பிரமாணப்பத்திரம் : சுந்தரமூர்த்தி இந்திரன் India's Mylai (1989)p14.*
[121] *பிரமாணப்பத்திரம் : சதாசிவம் பாலசுப்பிரமணியம் (12 ஓகஸ்ற் 1989), பிரமாணப்பத்திரம் : தணிகாசலம் மெய்ஞானமாலை (12 ஓகஸ்ற் 1989).*

'வன்முறை' நடக்கும்போது வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்த டயானா மினி சினிமாவிலிருந்து 'தனது மகன் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டது, தனக்குத் தெரியும்' என்றும் ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் மகனைக் கண்டு பிடிக்க பல முயற்சிகள் எடுத்தும் 'எந்த பயனும் இல்லை'. பக்கத்தில் உள்ள மூன்று இந்திய அமைதி காக்கும் படையினரின் முகாம்களுக்கு ஏதாவது செய்தி கிடைக்குமா என்று தேடிச்சென்றபோது தான் துரத்தியடிக்கப்பட்டதாகவும், படுகொலைகள் நடந்து இப்போது இரண்டு வாரங்கள் ஆகியும் 'இந்திய அமைதி காக்கும் படையினரிடமிருந்தோ அல்லது வேறு யார் மூலமோ எந்த தகவலும் கிடைக்கவில்லை' என்றும் உடுப்பிட்டி முகாமிலிருந்து காணாமல் போன இளைஞர் செல்லையா யோகராஜாவின் விதவைத் தாய், ஓகஸ்ற் 23ஆம் திகதி வழங்கியிருந்த தன்னுடைய வாக்குமூலத்தில் கூறினார். [122] 'எல்லோரும் பெற்றோல் ஊற்றி கொழுத்தப்–பட்டிருப்பார்கள்' என்று தான் நம்புவதாக காணாமல் போன இளைஞர்களில் சகோதரர்களான தயாளசிங்கம் சிவகுமார் மற்றும் தயாளசிங்கம் ஜெயமோகன் ஆகியோரின் தாய் மூன்று வாரங்களுக்குப் பின் கூறினார். [123] திரையரங்கில் தனது இரு சகோதரர்களுடன் இருந்த தங்கவேலாயுதம் சாம்பசிவத்தைப் படையினர் பிடித்துக் கொண்டு, தங்கள் முகாமிற்குக் கொண்டு போனார்கள். அவரது தந்தை தனது மகனைத் தேடி [124] உடுப்பிட்டி முகாம் உட்பட பல முகாம்களுக்குச் சென்ற போது திரும்பத்திரும்ப 'மகன் அங்கே இல்லை' என்று சொல்லப்–பட்டது. ஒரு மாதத்திற்கு பிறகு 'நானும் எனது மனைவியும் மற்றும் குடும்ப உறுப்பினர்களும் பெரும் மனச்சுமையுடன் இருக்கின்றோம். அதனால் நான் அதிகாரிகளை கேட்டுக் கொள்வதெல்லாம் அவன் எங்கு இருக்கிறான், அதை கண்டு பிடிக்க வழிதான் என்ன என்று சொல்லுங்கள், அந்த கருணைக்காக நான் பிரார்த்திப்பேன்' என்று தெரிவித்தார்.

அவருடைய பிரார்த்தனைகளுக்கு இந்த நாள் வரை பதில் கிடைக்கவில்லை. அந்த உடல்கள் ஒருபோதுமே கண்டுபிடிக்கப் படவே இல்லை.

---

*[122] பிரமாணப்பத்திரம் : வள்ளியம்மை, செல்லையா ஜோகராஜா (23 ஓகஸ்ற் 1989).*


*[123] Rita Sebastian, Indian Express (24 August 1989) உடனான சிவமணிதேவி தயாளசிங்கத்தின் நேர்காணல்*

*[124] பிரமாணப்பத்திரம் : சாம்பசிவஜயர் தங்கவேலாயுதம், (01 செப்ரெம்பர் 1989). பிரமாணப்பத்திரம் : சிவலிங்கம் மகேஸ்வரி (31 ஓகஸ்ற் 1989). இவரது கணவர் சின்னத்தம்பி சிவலிங்கம் பின்னர் உடுப்பிட்டி முகாமிலிருந்து காணாமல் போனதாக பட்டியலிடப்பட்டுள்ளது.*

**45** எரிக்கப்பட்ட கடைகள்

**123** எரிக்கப்பட்ட வீடுகள்

**176** எரிக்கப்பட்ட படகுகள், மீன்பிடி வலைகள்



# 4. உடனடியாக ஏற்பட்ட பாதிப்புக்கள்

**வல்வெட்டித்துறை மீது இந்திய அமைதிப்படை நடாத்திய தாக்குதல்களால் மக்களுக்கு மிகப்பெரிய பாதிப்புக்கள் ஏற்பட்டன. மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள் வறுமை நிலைக்குள்தள்ளப்பட்டார்கள், வாழிடங்களை இழந்தார்கள், சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள், பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டார்கள், பெருந் தொகையில் கொலை செய்யப்பட்டார்கள். இந்தக் கொடுஞ்செயல் வல்வெட்டித்துறை நகரத்தின் பொருளாதாரத்தையும் சீர் குலைத்தது. ஊரடங்கு அமுலில் இருந்தபோது, வீட்டுக்குள்ளேயே முடக்கப்பட்ட பொதுமக்கள் பலர், பட்டினியையும் எதிர் கொண்டார்கள்.**

ஓகஸ்ற் 12ஆம் திகதி வெளிவந்த த கார்டியன் பத்திரிகையில் இதுபற்றி எழுதிய கிரிஷ் நட்டால் (Chris Nuttall) 'படுகொலைகள் நடந்து கொண்டிருந்த நேரத்தில் செய்தியாளர்கள் வீதித் தடுப்புக்களை தாண்டிச்செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏன் வைத்தியர்கள் கூட அந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அது மட்டுமின்றி, அன்றாடம் கொள்வனவு செய்து, சமைத்து உண்ணும் வழக்கத்தைக் கொண்டவர்களே அந்த மக்கள் என்பதைத் தெரிந்திருந்தும், படையினர் அநேகமாக எல்லா உணவு இருப்புக்களையும் எரித்தனர்' என [125] தெரிவித் திருந்தார். MSF பணியாளர்களும் [126] இதனையே தங்கள் அறிக்கையிலும் பிரதி பலித்தனர். 'மக்கள் மிகவும் பயந்து போயிருந்தனர். தங்கள் வீடுகள் தப்பித்திருந்தாலும் பல மக்கள் அங்கு செல்லத் தயாராக இருக்கவில்லை. உள்ளூர்க் கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் கல்வி நிறுவனக் கட்டடங்கள் ஆகியவற்றில் கிட்டத்தட்ட 3,000 பேர் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்தார்கள். ஆயிரம் பேர் அளவில், ஏற்கனவே இந்தியாவிற்குச் சென்றிருந்தார்கள். ஒவ்வொரு இரவும் பலர் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அங்கே எஞ்சியிருந்தவர்களுக்கு வெறும் இரண்டு பலசரக்குக் கடைகள் மட்டும்தான் இயங்கிக் கொண்டிருந்தன. இது ஒரு அவசரகால நிலைமை. இந்தியாவிற்கு பெருமளவில் மக்கள் வெளியேறுவதை தடுக்க ஏதாவது செய்தாக வேண்டும்.' இவ்வாறு அது தெரிவித்திருந்தது. தொண்டு நிறுவனங்கள் நிவாரணம் வழங்கும் தங்கள் வேலையைச் செய்வதை இந்திய இராணுவத்தினர் மேலும் 'கடினமாக்கினர்' என இன்னொரு அறிக்கை தெரிவித்தது. [127]

### திரு. ஆனந்தராஜ் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிய வாக்குமூலங்களை சேகரிக்க ஆரம்பித்தார்.

படுகொலைகள் நடந்து ஒரு வாரத்திற்குப் பிறகு, திரு. ஆனந்தராஜ் 'சாவின் விளிம்பு வரை' கொண்டுசென்ற சித்திரவதை தொடர்பாக சமாதான நீதவான் முன்னிலையில் எழுத்து மூலமான சாட்சிய வாக்குமூலத்தை வழங்கினார். அக்காலப் பகுதியில், தாம் அனுபவித்த கொடுமைகளை வெளிப்படுத்தவும், சாத்தியமான இழப்பீட்டைப் பெற ஒரு அடிப்படை ஆவணத்தை உருவாக்கவும் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்வது என்பது தமிழ் மக்களிடையே ஒரு வழக்கமான நடைமுறையாக இருந்தது. திரு. ஆனந்தராஜ் தன்னுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட சிலர் மற்றும் உறவினர்கள் அவர் வீட்டுக்கு வந்து வாக்குமூலங்களை வழங்கினர். இன்னும் பலரது வீட்டுக்கு தானே சென்று வாக்குமூலங்களைச் சேகரித்தார். தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்து, தன்னுடைய தட்டச்சு இயந்திரத்தின் மூலம் அவற்றைத் தட்டச்சுச் செய்தார். கார்பன் தாள்களைப் பயன்படுத்தி பிரதியெடுத்ததுடன், ஒரு பிரதியை உரியவர்களிடம் கொடுத்து மற்றையதைத் தனக்கென்று வைத்துக் கொண்டார். தனியொருவராக அவர் 200 இற்கும் அதிகமான வாக்குமூலங்களைச் சேகரித்திருந்தார். [128] மூன்று நாட்களுக்கு மேலாக நடந்த படுகொலை பற்றி, தனி ஒருவரால் இவ்வளவும் சேகரிக்கப்பட்டன. சில வருடங்களுக்குப் பிறகு, திரு. ஆனந்தராஜ் வீடு சிறிலங்கா இராணுவத்தால் தீ வைத்துக் கொழுத்தப்பட்டது. அரை வாசிக்கும் மேற்பட்ட ஆவணங்கள் எரிந்து போயின. ஏற்கனவே இலங்கையை விட்டு வெளியே பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டிருந்த எஞ்சிய வாக்குமூலங்களே வல்வைப் படுகொலையின் ஒட்டுமொத்த

[125] *Chris Nuttall, Guardian(12 August 1989).*
[126] *as above MSF telex.*
[127] *Jeremy Gavron, Sunday Telegraph(13 August 1989).*
[128] *ITJP உடனான நடராஜா ஆனந்தராஜின் நேர்காணல்*

சாட்சியங்களாக மாறின. அவரது பெரும் முயற்சியால் இந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்குமூலங்கள் இறந்த அல்லது காணாமல்போன 56 வல்வெட்டித்துறை மக்களுக்கான சாட்சியமாக உள்ளன. திரு. ஆனந்தராஜால் தயாரிக்கப்பட்ட இறந்தவர்களின் பட்டியலில் மேலும் எட்டுப் பேருடைய பெயர் விபரங்கள் உள்ளன. [129] வடக்கு–கிழக்குக்கு மனித உரிமை செயலகத்தால் (NESoHR) இப்படுகொலை தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் இன்னும் சிலரது விபரங்கள் உள்ளன. [130] பலர் அடையாளம் காண முடியாத வகையில் எரிக்கப் பட்டிருந்ததாலும் பல குடும்பத்தினர் வல்வெட்டித்துறையை விட்டு வெளியேறிச் சென்று விட்டதனாலும் துல்லியமான எண்ணிக்கையை கூற முடியாது. இருந்தாலும் கிடைத்த ஆதாரங்கள் இறந்தவர்களின் எண்ணிக்கை அறுபதிற்கும் அதிகமானது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

### அரசியல் மற்றும் ஊடக எதிர்வினைகள்.

ஓகஸ்ற் 12ஆம் திகதி கிரிஷ் நட்டால் த கார்டியன் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில், முதல் நாளே அப் படுகொலை தொடர்பாக முதலாவது சுயாதீனச் செய்திகள் தலைநகரை வந்தடைந்தாக குறிப்பிட்டார். மேலும் அதற்கு முன்னதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் வெளியிட்ட அறிக்கையில் 'ஒரு அதிகாரியும், ஆறு இந்தியப் படையினரும் ஐந்து கிளர்ச்சியாளர்களும் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒன்பது படையினர் காயம் அடைந்ததாகவும்' தெரிவித்திருந்தது. ஆனால் நேற்றைய தினம் முதன் முறையாக அது பொது மக்களுக்கும் இழப்பு ஏற்பட்டதை ஏற்றுக் கொண்டது, ஆனால் வெறுமனே 24 மக்கள் மோதலில் சிக்கிக் கொல்லப்பட்டார்கள் என்றே கூறியது.

ஓகஸ்ற் 2 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் இந்திய அமைதி காக்கும் படையின் நடவடிக்கை பொதுமக்கள் படுகொலைக்கு வழிவகுத்தது என்ற கூற்றுக்களை டெல்லியில் உள்ள அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் மறுத்ததாக இந்திய செய்தித்தாள் தி இந்துவில் அதே நாளில் எழுதிய கே. கே. கட்டியல் (K.K. Katyal) தெரிவித்தார். [131] பொதுமக்களது உயிர்களை அலட்சியம் செய்து அவர்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தி இந்திய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடாத்தப்பட்டது என்றும், இதன் விளைவாக குறைந்த மற்றும் தற்செயலான பொது மக்கள் உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் கூறி, நிகழ்வுகளின் உத்தியோகபூர்வ பதிப்பை அவர் வழங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு புரட்சிகர மாணவரை வெகுஜனக் கொலைகள் குறித்து 'வினோதமான' பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்த கட்டாயப்படுத்தியது என்றும், அதை அவரால் நிரூபிக்க முடியவில்லை என்றும் கட்டியல் எழுதினார். தொடர்ந்து '1987ல் நடந்த படுகொலையின் காணொளிகளை இப்போது நடந்தது போல் ஆதாரமாக காட்டி இந்திய அமைதி காக்கும் படையினர் மீது பழி சுமத்துகின்றனர்' என்று மேலும் தெரிவித்திருந்தார்.

வல்வெட்டித்துறையில் படுகொலை நடந்தது தொடர்பாக செய்திகளை 'இந்திய அதிகாரிகள் முற்றாக மறுத்ததுடன், இந்தியாவிலிருந்து பத்திரிகையாளர்களை யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்து, இராணுவத் தரப்பு வாதங்களைச் செவிமடுக்க வைத்ததாக' டெல்லியிலிருந்து வெளிவரும் சண்டே ரெலிகிராஃப் செய்தியாளர் எழுதியிருந்தார். [132] ஆயினும் பத்திரிக்கையாளர்கள் யாருமே சம்பவங்கள் நடந்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்படவில்லை. 'பாதுகாப்பு படையினரின் அட்டூழியங்கள் அத்துமீறல்களை மறுப்பதோ அல்லது மூடி மறைப்பதோ இப்படியான சம்பவங்கள் மேலும் நிகழ்வதை அனுமதிப்பதற்கு அல்லது மன்னிப்பதற்கு சமம்'. [133] என தமிழ் ரைம்ஸ் கருத்துத் தெரிவித்திருந்தது.

ஓகஸ்ற் 14ஆம் திகதியன்று பிரித்தானிய வெளியுறவு அமைச்சகத்திலிருந்து கொழும்பிலுள்ள தங்களது தூதரக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட வகைப்படுத்தப்பட்ட தொலை நகல் செய்தி அவர்களது எச்சரிக்கையான இராஜதந்திர நிலைப்பாட்டைக் காட்டியது. அதில் இந்தியப் படைகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச் சாட்டுக்களை எச்சரிக்கையுடன் கையாழுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டிருந்து. [134] 'சம்பவம் தொடர்பாக யாராவது தொடர்பு கொண்டால், மழுப்பலான பதிலை வழங்குமாறும், இந்தியப் படையினரைக் கண்டிப்பதைத் தவிர்க்குமாறும் அவர்களுக்குப் பணிக்கப்பட்டிருந்தது. இதற்கு பக்கச் சார்பில்லாத ஆதாரங்கள் எதுவும் இல்லை என்பதோடு இந்திய அமைதி காக்கும் படையின் 'தவறான நடவடிக்கைகளுக்கு' அதிகார பூர்வமான எதிர்வினையை சிறிலங்கா அரசாங்கம் மட்டுமே ஆற்ற முடியும் எனவே அப்படி வருபவர்களை சிறிலங்கா அரசாங்கத்தை நோக்கிக் கை காட்டி விடுங்கள்' என்று அதிகாரிகள் அறிவுறுத்த பட்டிருந்தார்கள்.

படுகொலை நடந்து இரண்டு வாரங்களின் பின்னர், ஃபைனான்சியல் ரைம்ஸ்[135] (Finanacial Times) பத்திரிகையாளர்

---

[129] *பெயரிடப்பட்டுள்ளவர்கள்: இளையபெருமாள் உமாராணி, வயது 29, வீட்டுப்பணி (சில பதிவுகளில் இவர் சுப்பிரமணியம் வீட்டில் இறந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது; நாகலிங்கம் பிருந்தா, வயது 14, மாணவி; அருள்சோதி ரவீந்திரன், வயது 17, கடற்றொழில்; திரு கட்டிப்பவுண், வயது 30, விவசாயி; என். பானுகோபால், வயது 23, பொற்கொல்லர்; கே. ராஜேஸ்வரன், வயது 20, கடற்றொழில்; எஸ். துரைராஜா, வயது 59, வர்த்தகர்; எஸ். பாலசுந்தரமூர்த்தி, வயது 31, கடற்றொழில்.*

[130] *பெயரிடப்பட்டுள்ளவர்கள்: ராஜலிங்கம் சதீஸ்குமார், வயது 18, மாணவன்; ராசா ஜெயமயில், வயது 20, வர்த்தகர்; நாகராசா ஞானகுணசிங்கம், வயது 22, கடற்றொழில்; குழந்தைவடிவேல் சண்முகவடிவேல், வயது 37, கூலி; குணரட்ணம் ராசசேகரம், வயது 18, கடற்றொழில்; முருகேசு செல்லத்துரை, வயது 32, சாரதி; அருளப்பு இலங்கைநாதன், வயது 22, கடற்றொழில்; வேலும்மயிலும் செல்வச்சந்திரன், வயது 26, மாலுமி; சிவலிங்கம் ராமநாதன், வயது 35, சாரதி; வடிவேலு குமாரசாமி, வயது 89, கூலித்தாழில்; செல்வசுந்தர் தவசீலன், வயது 7, மாணவன்.*

[131] *K K Katyal, The Hindu(12 August 1989).*

[132] *Jeremy Gavron, Sunday Telegraph (13 August 1989).*

[133] *Tamil Times (August 1989).*

[134] *FCO Telno 240 to Colombo (16 August 1989) and ff correspondence.*

[135] *David Housego, Financial Times (17 August 1989).*

டேவிட் கவுஸ்கோ அவர்களே (David Housego) வல்வெட்டித்துறைக்குச் சென்று, அங்கிருந்து நேரடிச் செய்திகளை வெளியிட்ட முதல் மேற்கத்தைய பத்திரிக்கையாளர் ஆவார். 'இப்பொழுதும் கருகிய நாற்றம் வல்வெட்டித்துறையை சூழ்ந்திருக்கிறது' என்று அவர் விபரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. திரு. ஆனந்தராஜ் சேகரித்திருந்த பிரமாணப் பத்திரங்களிலிருந்த உணர்ச்சி பூர்வமான பகுதிகளை அவர் மேற்கோள் காட்டினார். ஆனந்தராஜின் முகத்தில் அப்போதும் தழும்பு இருந்ததாகவும் அவர் எழுதினார். 'வல்வெட்டித்துறையில் வாழ்ந்த 15,000 பேரில் அரைவாசி மக்கள் பயத்தாலும் விரக்தியாலும் இந்தியாவுக்குத் தப்பிச்சென்றுவிட்ட அதேவேளை அங்கேயே தொடர்ந்து வாழ்பவர்கள் இழந்த உறவுகளின், உடமைகளின் நினைவில் கலங்கி, எப்படி, எங்கிருந்து தொடங்குவது என்ற கலக்கத்துடன் இருக்கிறார்கள்' என்பதை கவுஸ்கோ தனது செய்தியில் குறிப்பிடுகிறார். 'இந்தியப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையிலான துப்பாக்கிச் சூட்டில் இடையில் சிக்கி, பொதுமக்கள் ஒரு சிலர் உயிரிழந்திருக்கலாம், ஆனால் இவ்வளவு உயிரிழப்புகளுக்கு இதைக் காரணமாகச் சொல்வது நம்பக் கூடியாதாக இல்லை' என்று கேள்வி எழுப்பியிருந்தார். 'கொலைகளும் வெறிச்செயல்களும் படையினரால் தான் தோன்றித்தனமாக அரங்கேற்றப்பட்டதா அல்லது அவர்களுக்கு மேலதிகாரிகள் அனுமதி கொடுத்திருந்தனரா என்றும் கேள்வி எழுப்பினர். மேலும் 'வன்முறை நடக்கும் போது நகரத்தில் சில மேலதிகாரிகளும் இருந்தார்கள். ஊரிலிருந்த பெரியவர்கள் சிலர், மேலதிகாரிகளின் நேரடியாக ஆதரவளிக்கா விட்டாலும், அதனைக் கண்டும் காணாமலும் விட்டார்கள் என நம்புகிறார்கள் எனவும் அவர் செய்தியில் தெரிவித்திருந்தார். இந்தியப் அமைதி காக்கும் படையினர் 'இதையெல்லாம் மக்கள் விரைவிலேயே மறந்து விடுவார்கள்' என்ற நம்பிக்கையில் இருக்கின்றார்கள். 'புலிகள் சாட்சிகளை மிரட்டி தங்களுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்துகிறார்கள். இதன் அடிப்படையில் இந்திய படைகளிடம் புலனாய்வோ விசாரணையோ தேவையற்றது', என்று தங்களை நியாயப்படுத்திக் கூறியதாக கவுஸ்கோ எழுதியிருந்தார்.

இரண்டு நாட்களுக்கு பிறகு சுயாதீன அமைப்பான ஆசிய கண்காணிப்பகத்தின் (Asia Watch) தலைவர் சிட்னி ஜோன்ஷ் 'சம்பவம் தொடர்பாக இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய தனது கவலையை வெளிப்படுத்தி வெளியிட்ட அறிக்கையை மேற்கோள்காட்டி றொய்ற்றர்ஸ் வெளியிட்டது.[136] 'கொலைகளுக்கான விசாரணையை மேற் கொள்வதை விடுத்து அதை மூடி மறைப்பதிலேயே இந்திய அரசு அதிக அக்கறை எடுத்துக் கொள்வது மிகவும் வேதனை யளிக்கிறது' என்று குறிப்பிட்ட அவர், 'சட்ட விரோதமான கொலைகள், காணாமல் போதல் மற்றும் சித்திரவதைகளுக்கு பொறுப்பானவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்' என்று அவர் அவ்வறிக்கையில் கோரிக்கை வைத்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## தொடர்ந்து நடந்த மூடிமறைப்பு

ஓகஸ்ற் 21 சிறிலங்கா வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா, கொழும்பிலிருந்து உண்மை கண்டறியும் நடவடிக்கைக்காக இந்திய இராணுவத்தினரால் வான்வழியாக அழைத்து வரப்பட்டிருந்தார். அவர் ஊரிக்காடு இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டதோடு பொதுமக்களுடன் பேசுவது 'இந்திய அமைதி காக்கும் படை மேலிடத்தால்' தடுக்கப்பட்டது என வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழு தெரிவித்தது. இருந்த போதிலும், திரு. செல்வேந்திரனும் திரு. ஆனந்தராஜ•ம், இந்திய அமைதி காக்கும் படைகள் சூழ்ந்திருந்த போதிலும், ஒருவாறாக அவரைச் சந்தித்து சிறிது நேரம் உரையாடினார்கள். ஆனால் அதனால் எந்த மாறுதல்களும் ஏற்படவில்லை. பாதுகாப்பு அமைச்சர் திரும்பிச் சென்றதும், அவருக்கு தனிப்பட்ட பதுகாப்பை அளித்த இந்திய அமைதி காக்கும் படை உறுப்பினர் மீது தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரால் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தப்பட்டதாகச் சொல்லப் பட்டது. இதற்கு பதிலடியாக பருத்தித்துறை முகாமிற்கு திரும்பிக் கொண்டிருந்த படையினர் போகும் வழியிலே மேலும் 13 மக்களைக் கொன்றனர்.[137]

அதே நாள் திரு. ஆனந்தராஜ் தனது அதிருப்தியை வெளிப்படுத்தி கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகருக்கு எழுதினார்:[138] 'இந்திய அமைதி காக்கும் படையின் கட்டளைத் தளபதியான ஜெனரல் கல்கற்கூட, தங்களது குமுறல்களை வெறும் வதந்திகள் என்று நிராகரித்து, தமது முயற்சிகளைத் தடுத்து வருவது தமக்குக் கவலையளிப்பதாக' தனது கடிதத்தில் குறிப்பிட்டார். அதே நேரத்தில் சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கும் கடிதம் அனுப்பி இருந்தார். 'படுகொலை நடந்தது தொடர்பில் முன்னரே அவர் கடிதம் எழுதியிருந்த போதிலும், இம்முறை அவர் புள்ளி விபரங்களுடன் விளக்கமான கடிதம் ஒன்றை எழுதினார். மேலும் எதிர் காலத்தில் இப்படியொரு சம்பவம் திரும்பவும் நடக்காத வகையிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வை ஏற்படுத்தும் வகையிலும் பாரபட்சமற்ற விசாரணையை நடத்துமாறு' கோரியிருந்தார்.

## ஓகஸ்ற் 24 அன்று வல்வெட்டித்துறையிலிருந்து வந்த புதிய நேரடிச் செய்தி

படுகொலைகள் நடந்து மூன்று வாரங்களுக்குப் பின்னர் அதாவது, ஓகஸ்ற் 24ஆம் திகதி பத்திரிகையாளர் ரிட்டா செபஸ்ரியன் வல்வெட்டித்துறைக்கு வந்திருந்தார். இந்தியன்

[136] *Reuters report quoted in New Straits Times(19 August 1989).*

[137] *see Rita Sebastian, Indian Express (24 August 1989), partly quoting Mr Selvendra.*

[138] *India's Mylai (1989) இல் மீள்பிரசுரிக்கப்பட்ட திரு. ஆனந்தராஜின் கடிதம்.*

எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் பின்வருமாறு அவர் விபரித்திருந்தார்.[139] அந்த நகரம் அப்போதும் 'பயங்கர அமைதியுடன் வெறிச்சோடி போய்க் கிடந்தது' பெரும்பாலான கட்டடங்கள் இடிபாடுகளாகவும் உருக்குலைந்த நிலையிலும் முறுகிப்போன கம்பிகளாகவும் காட்சியளித்தன. 'அகற்றப்பட முடியாதளவுக்கு அழுகிய நிலையிலிருந்த சடலங்கள் அவை இருந்த இடத்திலேயே எரிக்கப்பட்டிருந்த இடங்களில் எரிந்த அடையாளங்களை அப்போதும் காணமுடிந்தது' என மேலும் தெரிவித்தார். 'எஞ்சியிருந்த மக்கள் மத்தியில் காணப்பட்ட அதிர்ச்சியும் துக்கமும், கோபக்கனலும்' அப்பட்டமாகத் தென்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார். சாட்சிகளின் பிரமாணப் பத்திரங்களை மேற்கோள் காட்டியதுடன், பிரஜைகள் குழுவால் சேகரிக்கப்பட்ட இழப்புக்கள், சேதங்களையும் வெளியிட்டார் : 52 சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. மற்றையவை அடையாளம் காணப்படவில்லை. காணாமல் போய் இறந்திருப்பார்கள் என்று அனுமானிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 12. இவ்வாறாக 60 இற்கும் மேற்பட்டவர்கள் இறந்திருப்பார்கள் என்று அனுமானிக்கப்பட்டது. மேலும் 122 வீடுகளும் 45 கடைகளும் எரிக்கப்பட்டதாகவும் கடைகள் பெருந்தொகையில் எரிக்கப்பட்டமை வல்வெட்டித்துறையின் வர்த்தகத்திற்குப் பெரும் வீழ்ச்சியாக மாறியது. மேலும் இரண்டு திரையரங்கு நிலையங்களும், ட்ரக் வண்டிகள் உட்பட 69 வாகனங்களும், 12 மீன்பிடிக் கலங்களும், பெருமெண்ணிக்கையிலான எரிபொருட்களும், 129 மீன்பிடி வலைகளும் எரிக்கப் பட்டதாகவும் திரு. ஆனந்தராஜ் பின்னர் பட்டியலிட்டிருந்தார்.[140]

***இந்திய அமைதிப் படையை இலங்கையில் இருந்து வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைக்கு வல்வெட்டித்துறை படுகொலை பெரும் உத்வேகத்தை அளித்தது.***

'வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கு போதுமான அதிகாரங்களைச் சரியான முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும்' என்ற இந்திய அரசாங்கம் வலியுறுத்தி வந்தது. இது சிறிலங்கா அரசியல்வாதிகள் பலருக்கு அரசியல் முட்டுக் கட்டையாக இருந்தது.[141] ஆனால் இதில் நகைமுரண் என்ன வெனில், 'தமிழ் மக்களது பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்' என்பதையும் இந்தியா வலியுறுத்தியிருந்தது. 1989 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, முன்னைய ஆட்சியாளரைப் போன்று இந்திய அமைதிப் படையின் பிரசன்னத்தை ஆதரிக்கவில்லை. வல்வெட்டித்துறை படுகொலையை தொடர்ந்து, ஜனாதிபதி பிரேமதாச எஞ்சியிருந்த 43,000 இந்தியப் படையினரையும் இலங்கையிலிருந்து உடனடியாக வெளியேறும் படி கோரியதாக [142] றொய்ற்றர்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது. தமிழர்களுக்கு உரிய பாதுகாப்புக் கொடுக்கப்பட்டால் பெப்ரவரி (1990) மாதத்தில் இந்தியப் படையைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு இந்திய அரசு சம்மதித்தது.

***பெரும் சவால் நிறைந்ததாக மாறிய வெளிநாட்டு ஆதரவைப் பெற்றுக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட திரு. ஆனந்தராஜின் முயற்சி, இலங்கை இந்திய அரசியல்வாதிகளுக்கு இடையிலான நெருக்கமானதும் சிக்கலானதுமான உறவு இந்திய அமைதிப்படையின் நடவடிக்கைகளை முறையாக ஆராய்வதை இரு நாடுகளுக்கும் கடினமாக்கின:***

திரு. ஆனந்தராஜ் தன்னுடைய வேலையைக் கைவிட்டு, இலங்கையை விட்டு வெளியேறி, தனது தாயகத்திலிருந்து இந்தியப் படைகளை வெறியேற்றுவதற்காக பிரச்சாரம் செய்வதற்கு, தான் சேகரித்த வாக்குமூலங்களை எடுத்துக் கொண்டு செல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை உணர்ந்தார். அதுவரை தலைமறைவு வாழ்க்கை வாழவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார்: 'இந்தியப் படைகளுடன் இணைந்து செயற்பட்ட துணை இராணுவக் குழுக்கள் அவரைக் கொல்வதற்குப் பலமுறை முயற்சித்தார்கள்'. நட்சத்திரங்களின் வழிகாட்டல்களைப் பயன்படுத்தி, கடத்தல்காரர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த அதே முறைமையைப் பயன்படுத்தியே வல்வெட்டித்துறையிலிருந்து இந்தியாவுக்குப் பயணங்களை மேற்கொண்டு வந்திருந்த விடுதலைப் புலிகள் ஆனந்தராஜை இந்தியாவுக்குப் பத்திரமாகக் கொண்டு வந்தார்கள். இந்தியாவுக்கு வந்தவுடன் அவர் உடனடியாக செய்தது 'இந்தியாவின் மைலாய்' என்ற புத்தகத்தைத் தொகுத்து மும்பாயில் வெளியிட்டதுதான். இப்புத்தகத்தில் நேரடியான வாக்குமூலங்கள், எழுத்து மூலம் விபரிக்கப்பட்ட வெறியாட்டங்கள் அழித்தொழிப்புக்குச் சான்றான புகைப் படங்கள் ஆகியனவும் அடங்கியிருந்தன. அப்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சர் மு. கருணாநிதியையும் ஆனந்தராஜ் சந்தித்தார். 'உண்மையில் அவரிடம் எதிர்பார்த்திருந்த சாதகமான ஒத்துழைப்பு எதுவும் கிடைக்கவில்லை' [143] சிறிலங்காப் பாதுகாப்புப் படையினரால் தங்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூழியங்களுக்கு நீதி கோரி இந்தியாவின் ஆதரவை தமிழ்த் தலைவர்கள் நாடினர். இந்தியாவின் ஆதரவை நம்பியிருப்பதால், இந்தியாவின் அமைதிப் படையினரின் செயல்களுக்காக அவர்களை விமர்சிக்கவோ அல்லது நடவடிக்கை எடுக்கவோ அவர்கள் தயங்கினர். திரு. ஆனந்தராஜ் குடும்பமும் பின்னர் அவருடன் இணைந்து கொண்டது. அவர்கள் 1990 டிசம்பரில் தான், அதாவது இந்திய அமைதிப் படையினர் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு சற்று முன்னர்தான், வல்வெட்டித்துறை வீட்டுக்கு திரும்பி வந்தனர். தாங்கள் வந்த நோக்கம் நிறைவேறாமலேயே, இலங்கையை விட்டு வெளியேறியதால், அவர்களது வெளியேற்றம் யாருக்கும் வருத்தத்தைத் தரவில்லை.

*139 Rita Sebastian, Indian Express (24 August 1989).*
*140 நடராஜா ஆனந்தராஜ், India's Mylai (1989).*
*141 Tamil Times (August 1989).*
*142 Dalton de Silva for Reuters, cited in the Independent (திகதி காணவில்லை).*
*143 ITJP உடனான நடராஜா ஆனந்தராஜின் நேர்காணல்*

21 மே மாதம் 1991, இலங்கைக்கு இந்திய அமைதிப் படையை அனுப்ப முதல் காரணமாக இருந்த ராஜீவ் காந்தி, அப்போது முன்னாள் பிரதமர், விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி என்று சொல்லப்பட்டவரால் படுகொலை செய்யப்பட்டார். மே 1, 1993 சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியால் படுகொலை செய்யப்பட்டார்.



1989 வல்வெட்டித்துறையில் கிட்டத்தட்ட 5000 குடும்பத்தினர் பின்னிப் பிணைந்து, நெருக்கமாக வசித்து வந்தனர். வல்வைப் படுகொலைக்குப் பின்னர், 3000 குடும்பதினரே எஞ்சியிருந்தனர். [144] 35 வருடங்களுக்கு பிறகு இப்போதும் அங்கு வசிப்பவர்களைக் கேட்டால், 'பழைய நிலைமை திரும்பவே' இல்லை என்பார்கள். [145] வல்வெட்டித்துறை படுகொலை நடந்த காலை நேரம், இனிப்பு பண்டங்கள் வாங்க மிதி வண்டியில் கடைக்கு சென்ற கல்யாணி, வெளியே கிரிக்கெற் விளையாடிக் கொண்டிருந்த மோகன், வல்வெட்டித்துறைச் சந்தியில் அமைந்துள்ள குடும்பத்துக்கு சொந்தமான வாழைப் பழக்கடைக்குள் ஒளிந்து கொண்ட சில மணி நேரத்துக்குள் தனது தாயையும் தம்பியையும் இழந்த ஜெகன்ராஜ் எல்லோருமே இலங்கைக்கு வெளியேதான் தற்போது வாழ்கின்றனர்.





'இக்கொடுமையான சம்பவங்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு இந்தியா இதுவரை எந்தவொரு இழப்பீட்டையும் வழங்கவில்லை. இந்திய அரசாங்கம் ஈழமக்களிடம் மன்னிப்பு கோரி, அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு கணிசமான இழப்பீட்டை வழங்குவதோடு, நிர்மூலமாக்கப்பட்ட உட் கட்டமைப்பினையும் மீளமைத்து தரவேண்டும். அதேநேரம், ஈழத்தமிழர்களின் உரிமைகளை நிலைநிறுத்தக்கூடியதும், அவர்களது சொந்தத் தாயகத்தில் கௌரவத்துடனும் சுதந்திரத்துடனும் வாழக்கூடிய, நிரந்தரமான அரசியல் தீர்வினைப் பெற்றுத்தருவதற்கான முயற்சிகளையும் இந்தியா மேற்கொள்ள வேண்டும்' இவ்வாறு தனது நேர்காணலில் ஆனந்தராஜ் கூறுகின்றார்.

---

*[144] ITJP உடனான நடராஜா ஆனந்தராஜின் நேர்காணல்*
*[145] ITJP உடனான வல்வெட்டித்துறை மக்களின் நேர்காணல்*

43

cnr sec

SP 15/8

RESTRICTED

026154
MDHOAN 1729

FSC 014/3

RESTRICTED
FM FCO
TO DESKBY 150330Z COLOMBO
TELNO 240
OF 141720Z AUGUST 89
AND TO DESKBY 150330Z NEW DELHI

FROM SAD
YOUR TELNO 467: ALLEGED INDIAN 'MASSACRE' IN JAFFNA PENINSULA
1. THERE HAS BEEN CONSIDERABLE (AND VARIED) PRESS REPORTING OVER THE WEEKEND OF THE ALLEGED MASSACRE OF TAMIL CIVILIANS BY THE IPKF.
2. IN RESPONSE TO QUESTIONS (NONE SO FAR) NEWS DEPARTMENT WILL TAKE THE FOLLOWING, DEFENSIVE LINE:
- DO NOT HAVE FULL INFORMATION.
- DEEPLY REGRET REPORTED DEATHS
- ESPECIALLY TRAGIC IF INNOCENT CIVILIANS SUFFER
- UNDERLINES THE NEED FOR ALL PARTIES TO WORK FOR A PEACEFUL AND LASTING SETTLEMENT IN SRI LANKA.

(IF ASKED TO CONDEMN INDIAN TROOPS)
- NO INDEPENDENT EVIDENCE OF WHAT TOOK PLACE.

3. HOWEVER, WE MAY COME UNDER PRESSURE TO CONDEMN THE INDIANS IF A MASSACRE IS CONFIRMED.
WE RECOGNISE THE DIFFICULTIES IN SIFTING FACT FROM RUMOUR BUT WOULD BE GRATEFUL FOR ANY FURTHER INFORMATION YOU CAN GLEAN AND FOR COMMENTS/SUGGESTIONS ON THE PRESS LINE.

MAJOR

YYYY

DISTRIBUTION 85

MAIN 85

LIMITED
SAD
NEWS
INFO
UND
PUSD
DEFENCE

LEGAL ADVS
PS
PS/LORD BRABAZON
PS/MR SAINSBURY
MR GILLMORE
MR MCLAREN

NNNN

PAGE 1
RESTRICTED

# AFFIDAVIT.

I, Thanigasalam Meignanamaalai, age 50 years, of Kadduvalavu, Valvettiturai, holding National Identity Card No.396360314 V, being a Hindu, do hereby, solemnly, sincerely and truely declare and affirm as follows:-

1. I am the affirmant above named.

2. On Thursday the 3rd August 1989, at about 11-00 a.m. the I.P.K.F. came along the sea beach side and entered my house and tobk my son Thanigasalam Ravichchandran away. I also went behing him crying along with Inthiranee. Then the I.P.K.F. lined my son and some others and shot them. Out of fear I ran away. On the following day at about 4-30 p.m. with the help of some women, we carried the body of my son and cremated at the urany cemetry. My son is the only bread winner and the shop also burnt by the I.P.K.F. to ashes.

த. மெய்ஞானமாலை
..................
Declarant

Declared and Affirmed at Valvettiturai this 12th day of August 1989 and the declarant seeming to understand a translation of the foregoing in Tamil, her own language, set her signature.

Before Me

Justice of the Peace.

Dr. S. RAMASAMY
JUSTICE OF THE PEACE
SAM - RABAHU
UDUPPIDDY



# 5.சட்டப் பகுப்பாய்வு

## சட்டக் கட்டமைப்பு

### சர்வதேச மனித உரிமைகள் சட்டம் (IHRL)

வாழ்வதற்கும், சுதந்திரமாகச் செயற்படுவதற்கும், பாதுகாப்பாக இருப்பதற்குமான உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளது என மனித உரிமைகளுக்கான அனைத்துலகப் பிரகடனத்தின் (UDHR) 3ஆவது சரத்து கூறுகின்றது.

குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டத்தில் (ICCPR) இந்தியாவும் சிறிலங்காவும் கையொப்பம் இட்டுள்ளன. (வல்வெட்டித்துறைச் சம்பவம் நிகழ்ந்த நேரத்திற்கு முன்னரே இவ்விரு நாடுகளும் கையொப்பமிட்டிருந்தன.) இச்சட்டத்தின் 6ஆவது சரத்தில், ஒவ்வொரு மனிதருக்கும் உயிர் வாழ்வதற்குரிய உரிமையானது சட்டத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அவர்களது உயிர் யாராலும் பறிக்கப்படக் கூடாது என்றும் கூறுகின்றது. மேலும் பொது அவசரகால நிலைமைகளில் கூட இச்சரத்து முழுமையாகக் கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்று இச்சட்டத்தின் 4ஆவது சரத்து வலியுறுத்துகின்றது. குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டத்தின் 9ஆவது சரத்தில் மனித உரிமைகளுக்கான அனைத்துலகப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள நபர் வாழ்வதற்கான சுதந்திரத்தையும் பாதுகாப்பினையும் கொண்டிருப்பதற்கான உரிமையினை மீளவும் வலியுறுத்திச் சொல்வதுடன், எழுந்தமானமாகக் கைது செய்யப்படுவதையும் அல்லது தடுத்து வைப்பதையும் தடை செய்கின்றது. மேலும், இச்சட்டத்தின் 10ஆவது சரத்தில் இந்த உரிமை பறிக்கப்படும் நபர்கள் மனிதானிமானத்துடன் நடத்தப்பட வேண்டும் என்றும், அவர்களது மரியாதை மதிப்பளிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றது.

குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டத்தின் 7ஆவது சரத்தும் மனித உரிமைகளுக்கான அனைத்துலகப் பிரகடனத்தில் 5ஆவது சரத்தும் சித்திரவதை தொடர்பில் குறிப்பிடும் போது, கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது மரியாதைக் குறைவான நடத்துதலுக்கு அல்லது தண்டனைக்கு யாரையும் உட்படுத்தக் கூடாது எனக் கூறுகின்றது. உயிர் வாழ்வதற்கான உரிமை பற்றி வலியுறுத்துவது போலவே, பொது அவசரகால நிலைமைகளில் கூட, சித்திரவதை, கொடுமையான, மனிதாபிமானமற்ற, அவமரியாதையான நடத்தைகளுக்கு அல்லது தண்டனைக்கு உள்ளடக்கப்படக் கூடாது என்பதையும் குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டத்தின் 4ஆவது சரத்து வலியுறுத்துகின்றது.

குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசச் சட்டத்தின் 16 ஆவது சரத்தில், ஒருவருடைய தனிப்பட்ட விடயங்களுக்குள், குடும்பத்திற்குள், வீட்டுக்குள் எழுந்தமானமாக அல்லது சட்ட விரோதமாக நுழையக் கூடாது என்பதுடன், அவருடைய மரியாதை அல்லது புகழ் மீது சட்டத்திற்கு முரணான கருத்துப் பதிவுகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்தியப் படைகள் செயற்பட்ட காலத்தில், அதாவது வல்வெட்டித்துறைச் சம்பவம் நடந்த 1989இல், இந்தியாவோ இலங்கையோ சித்திரவதைக்கு எதிரான சட்டத்தில் கையொப்பம் இட்டிருக்கவில்லை. Convention Against Torture (CAT). [146] வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்–பதற்கான சர்வதேசச் சட்டம் 2006 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு, 2010 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதாவது இது நிகழ்ந்த போது, இந்திய அமைதி காக்கும் படைகள் இலங்கையை விட்டு ஏற்கனவே வெளியேறியிருந்தன. [147] மேலும், பெண்களுக்கு எதிரான

---

[146] *Sri Lanka ratified CAT in 1994. India signed CAT in 1997. See United Nations, Treaty Series, vol 1465, p85, https://treaties.un.org/pages/ViewDetails.aspx?src=TREATY&mtdsg_no=IV-9&chapter=4&clang=_en.*

[147] *UN General Assembly, International Convention for the Protection of All Persons from Enforced Disappearance (20 December 2006) https://www.ohchr.org/en/instruments-mechanisms/instruments/international-convention-protection-all-persons-enforced*

அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான சட்டத்தில் (Convention on the Elimination of All Forms of Discrimination against Women-CEDAW) 1981 இல் சிறிலங்கா கையொப்பம் இடுவதற்கு முன்னதாக, அதாவது இந்தியப் படைகள் இலங்கைக்கு அனுப்பப்படுவதற்கு முன்னதாக, [148] பாலியல் வன்புணர்வானது பாகுபாட்டின் ஒரு வடிவம் என்று மட்டுமே என பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தது. மேலும், 1992 இல் வெளியிடப்பட்ட பொதுவான பரிந்துரைகளில் 19 ஆவது பரிந்துரையில் அதனை பால்நிலைசார் வன்முறை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. [149] மேலும், 1993இல் தான், அதாவது இந்திய அமைதி காக்கும் படையினரின் காலத்திற்குப் பின்னரே, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான சட்டத்தில் இந்தியா கையொப்பமிட்டது. [150] பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாது செய்வதற்கான பிரகடனத்தில் 1993இல் கையொப்பமிட்டது. [151] எனவே இந்த மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் தொடர்பாக இச்சட்டப் பகுப்பாய்வு ஆராயவில்லை, எனினும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினைக் குறிப்பிடுகையில் இவற்றை முக்கிய விடயங்களாகக் கருதுகின்றது.

பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் தொடர்பில் (Economic, Social, and Cultural Rights-ESCRs) அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் 17ஆவது சரத்தானது, ஒருவருடைய உடமைகளை வலுக்கட்டாயமாகப் பறித்தெடுக்கப்படுவதைத் தடை செய்கின்றது. அப்பிரகடனத்தில் 22ஆவது சரத்தில் ஒவ்வொரு நபருக்கும் சமூக, பொருளாதார, கலாச்சார உரிமைகள் உண்டு என்றும், இவை அந்தந்த நாடுகளின் வளங்களுக்கு ஏற்ப, தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்களுடன் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறுகின்றது. பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தில் (The International Covenant on Economic, Social and Cultural Rights-ICESCR), இலங்கையும் இந்தியாவும் வல்வெட்டித்துறை சம்பவம் நிகழ்ந்த நேரத்திற்கு முன்னரே கையொப்பமிட்டன. பொருளாதார, சமூக கலாச்சார உரிமைகள் (ESCRs) இல் கூறப்பட்டுள்ள உரிமைகளுக்கு மேலதிகமான உரிமைகளை இச்சட்டம் பாதுகாக்கின்றது. அதாவது போதுமான வாழ்க்கைத் தரத்திற்கான உரிமை (போதுமான உணவு, உடை, வீடு உள்ளிட்ட) (சரத்து 11), அதியுச்ச உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை (சரத்து 12), மற்றும் கலாச்சார வாழ்வில் பங்குபற்றுவதற்கான உரிமை (கலாச்சாரம் சார்ந்த கலந்துரையாடல்களில் பங்குபற்றுவது உட்பட) (சரத்து 15) ஆகியவற்றை இச்சர்வதேச ஒப்பந்தம் வழங்குகின்றது.

இச்சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் தங்களது உரிமைகளும் சுதந்திரங்களும் மீறப்படும்போது அவர்களுக்கான பரிகாரங்கள் பெற்றுக் கொள்வதற்கான உரிமை ஒவ்வொரு மனிதருக்கும் உண்டு என்பதை UDHR இன் 6ஆவது சரத்தும் ICCPRஇன் 8ஆவது சரத்தும் வலியுறுத்துகின்றது.

2005 இல் நடைமுறைக்கு வந்த, 'சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினதும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினதும் பாரதூரமான மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரத்திற்கும் இழப்பீடுகளுக்குமான உரிமை தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகளும் வழிகாட்டிகளும்' என்னும் ஆவணம், 1989 இல் நடைமுறையில் இல்லாதிருந்தாலும்கூட, உதவிகரமான ஆவணமாக உள்ளது. அரசுகள் தமது உள்ளூர்ச் சட்டங்கள் சர்வதேச சட்டக் கடப்பாடுகளுடன் ஒத்திசைவானதாக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என அது கூறுகின்றது.[152] மேலும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினதும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினதும் பாரதூரமான மீறல்கள் நடைபெறும்போது, அவற்றை விசாரணை செய்து, போதுமான ஆதாரங்கள் இருக்கும் பட்சத்தில், வன்முறைகளுக்குப் பொறுப்பாக ஈர்ப்பவர்கள் மீது வழக்கு விசாரணைகளை மேற்கொண்டு, குற்றம் புரிந்தது கண்டுபிடிக்கப்பட்டால், தண்டிக்க வேண்டியது அரசுகளின் கடமை என இது கூறுகின்றது.[153] மேலும் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெற்றுக் கொள்வதற்குரிய உரிமைகளைக் கொண்டிருக்கின்றார்கள். இதில், நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு சமமானதும் செயற்திறன் மிக்கதுமான வழிகள், ஏற்பட்ட பாதிப்புக்களுக்குப் போதுமான, செயற்திறன் மிக்க, உடனடியான நிவாரணங்கள், வன்முறைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகள், மற்றும் இழப்பீட்டுக் கட்டமைப்பு என்பன உள்ளடங்கும்.[154]

## **சர்வதேச மனிதாபிமானச் சட்டம்** (International Humanitarian Law (IHL)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆயுதப் போர் தொடர்பில்,

*[148] See United Nations, Treaty Series, vol 1249, p13 https://treaties.un.org/pages/viewdetails.aspx?src=treaty&mtdsg_no=iv-8&chapter=4&clang=_en.*

*[149] UN Committee on the Elimination of Discrimination Against Women (CEDAW), CEDAW General Recommendation No 19: Violence against women, 1992, https://www.refworld.org/legal/resolution/cedaw/1992/en/96542.*

*[150] See United Nations, Treaty Series, vol 1249, p13, https://treaties.un.org/pages/viewdetails.aspx?src=treaty&mtdsg_no=iv-8&chapter=4&clang=_en.*

*[151] UN General Assembly, Declaration on the Elimination of Violence against Women, A/RES/48/104, UN General Assembly (20 December 1993) https://www.refworld.org/legal/resolution/unga/1993/en/10685.*

*[152] UN General Assembly, Basic Principles and Guidelines on the Right to a Remedy and Reparation for Victims of Gross Violations of International Human Rights Law and Serious Violations of International Humanitarian Law: resolution / adopted by the General Assembly, A/RES/60/147 (21 March 2006) Section I, para 2, https://www.refworld.org/legal/resolution/unga/2006/en/12095.*

*[153] Id. Section III, para 4.*

*[154] Id. Section VII.*

சர்வதேச மனிதாபிமானச் சட்டமும் பொருத்தமானதாகும். எனினும், இந்திய அமைதி காக்கும் படை என்பது அமைதி காப்பதற்கானது என்றிருந்த போதிலும், காலப்போக்கில் அது உள்ளூர் மோதலில் ஈடுபட்டது. இவர்களது தலையீடு, மோதலின் தன்மையினை மாற்றியதா என்பது விவாதிக்கப்பட வேண்டியது எனினும், இவ்வறிக்கையின் நோக்கம் அதுவல்ல. அதனால், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கும், சர்வதேச குற்றவியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மனித குலத்திற்கு எதிரான சட்டங்கள் தொடர்பிலுமே சட்டப் பகுப்பாய்வுகளை மட்டுப்படுத்திக் கொள்கின்றது. இருப்பினும், இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினர் மேற்கொண்ட கொடுமைகளின் தீவிரத்தைப் பார்க்கும்போது, அவை சர்வதேச மனிதானிமாச் சட்டத்தின் மீறல்களுக்கும் சர்வதேசக் குற்றவியல் சட்டத்தின் கீழ், போர்க் குற்றங்களுக்கும்கூட ஈடுபட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது.

### சர்வதேச குற்றவியல் சட்டம் (International Criminal Law -ICL)

இந்தியாவோ சிறிலங்காவோ சர்வதே குற்றவியல் நீதிமன்றத்தின் ரோமச் சட்டத்தின் அரச அங்கத்துவ நாடுகளாக இல்லா விட்டாலும் கூட, மோதலின் போது இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பாக தனது நீதி அதிகார வரம்பினைப் பயன்படுத்தலாம். சிறிலங்கா அதிகார வரம்பினை ஏற்றுக் கொள்வதாகப் பிரகடனம் செய்வதன் மூலமாக அல்லது ஐ.நா. பாதுகாப்புச் சபைப் பரிந்துரையின் ஊடாக இது நிகழமுடியும். மேலும், இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தங்களது தேசியச் சட்டங்களில் இச்சர்வதேச அதிகார வரம்பின் சரத்துக்களை ஏற்றுக் கொண்ட தேசங்களால் அல்லது விசேட அல்லது சிறிலங்காவில் இடம்பெற்ற இச்சர்வதேசக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களது வழக்குகளைக் கையாள்வதற்கான அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி உருவாக்கப்படும் சிறப்பு நீதிமன்றங்கள் ஊடாக விசாரணைக்கு உட்படுத்தப்பட முடியும். [155]

உரோமச் சட்டத்தின் கீழ், பரந்த தாக்குதல்களின் ஒரு பகுதியாகவோ அல்லது திட்டமிட்ட தாக்குதலாகவோ, எந்தவொரு பொது மக்கள் கூட்டத்திற்கும் எதிராக, நிகழ்த்தப்படும் பின்வரும் செயல்கள், மனித குலத்திற்கு எதிரானவையாகக் கருதப்படும்: (1)கொலை (2)சிறையில் அடைத்தல் அல்லது நடமாடும் சுதந்திரத்தை பறிப்பதன் மூலம் சர்வதேச சட்டத்தின் அடிப்படை விதிமுறைகளை மீறுதல் (3)சித்திரவதை (4)வன்புணர்வு, வேறு வடிவங்களில் பாலியல் வன்முறை (5)வலிந்து காணாமலாக்கப்படுதல் (6)வேண்டுமென்றே பெரும் வலியை அல்லது தீவிரமான காயங்களை ஏற்படுத்தும், மனிதாபிமானமற்ற பிறசெயல்கள்.

### சட்டப் பிரயோகம்

இந்திய அமைதிப்படை வீரர்கள், வல்வெட்டித்துறை மக்களின் அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறினர், அவர்களின் வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு உரிமைகள் உட்பட, எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாத நிராயுதபாணியான அவர்களை இரக்கமின்றி தடுத்து வைத்து, சித்திரவதை செய்து, கொன்றனர். இந்தியப் படையினர் கண்மூடித்தனமாக பொது மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் பலர் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தனர் அல்லது கடுமையாக காயமடைந்தனர். மூன்று நாட்களுக்கு மேலாக நடந்த இந்த வன்முறைகளில் இடம்பெற்ற நீதிக்கு புறம்பான கொலைகள், சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் மனிதத் தன்மையில்லாத நடத்தை என்பன, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை (IHRL) மீறுவதாகும்.

பொதுமக்கள் உடல் மற்றும் உளவியல் சித்திரவதைகளை அனுபவித்தனர். அவர்கள் கடுமையான காயங்களுக்கு ஆளானார்கள் மற்றும் மருத்துவ உதவி மறுக்கப்பட்டனர். அதே நேரத்தில் அவமானம், கடுமையான கட்டளைகள் மற்றும் மோசமான நடவடிக்கைக்கு உட்படுத்தப் பட்டனர். சிலர் அழுவதற்கு கூட அனுமதிக்கப்படவில்லை. கடுமையான காயமடைந்திருந்த பலருக்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப் படவில்லை. தமது அன்புக்குரியவர்கள் தம் கண்முன்னே சித்திரவதை செய்யப்படுவதையோ அல்லது கொல்லப்படுவதையோ பார்க்கவேண்டிய நிலைமை அல்லது தமது அன்புக்குரியவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா அல்லது எங்கே இருக்கின்றார்கள் என்பதுகூடத் தெரியாத நிலைமை அவர்களது மனவேதனையை மேலும் அதிகரித்தது. இந்த அனுபவங்கள் மேலும் சித்திரவதை மற்றும் இழிவான சிகிச்சைக்கு சமம். நீண்டகால உளவியல் வடுக்களை விட்டுச் செல்கிறது. ஜனவரி மாத சம்பவத்திற்கு பொறுப்புக் கூறலுக்கான அவர்களின் நியாயமான அழைப்புகளுக்கு பழிவாங்கும் விதமாக ஓகஸ்ற் மாதத்தில் வல்வெட்டித்துறைப் பொதுமக்கள் மீதான தாக்குதல், இந்திய அமைதிப் படையானது நிராயுதபாணி மக்கள்மீது அவர்களது மனித உரிமைகளைப் புறந்தள்ளி, வேண்டுமென்றே துஷ்பிரயோகம் செய்ததையே சுட்டிக் காட்டுகின்றது. கொடூரமான தாக்குதல்களின் போது, வாய்மூலமான மிரட்டல்களும் சேர்ந்து, மேலும் உளம் சார்ந்த சித்திரவதையாகிறது, முன்னர் நடந்த சம்பவங்கள் விட்டுச் சென்ற ஆழமான காயங்கள், இப்போதும் மனதில் புதியதாக இருக்கும்போது, பொது மக்கள், உறவினர்களும் நண்பர்களும் தங்கள் கண்முன்னே கொல்லப்படுவதை பார்ப்பது, தாங்களும் மேலும் உடல் ரிதியான சித்திரவதைக்கு உள்ளாகி இறக்கவும் கூடும் என்று அவர்களை நியாயமாக நம்பவைத்தது. மக்களுக்கு எதிரான பெருங்கொடுமைகள் இறுதியில் நிறுத்தப்பட்ட பிறகும், பாதிக்கப்பட்டவர்களிடம்

---

*[155] Under UN HRC Resolution 30/1, Sri Lanka committed to establishing a Special Hybrid Court in 2025. See UN Human Rights Council, Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka: resolution / adopted by the Human Rights Council, A/HRC/RES/30/1 (14 October 2015) [https://www.refworld.org/legal/resolution/unhrc/2015/en/108751](https://www.refworld.org/legal/resolution/unhrc/2015/en/108751).*

உடல் மற்றும் உளம் சார்ந்து விட்டுச் சென்ற காயங்களும், மனவலியும் தசாப்தங்களாகத் தொடர்கிறது.

மார்பில் கடிப்பது முதல் கூட்டு வன்புணர்வு வரை, பல்வேறுபட்ட வடிவங்களில், பெண்கள் பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டனர். இது ஒருவரின் வாழ்வதற்கான மற்றும் பாதுகாப்புக்கான உரிமையை அத்து மீறுவதன் மூலம் IHRL ஐ மீறுவதாகும். பாதிக்கப்பட்ட பெண்கள் மௌனத்தில் போராடி, வருந்தும் அதே வேளை, பெரும் அவமானத்தையும் சுமந்தனர். பாலியல் வன்முறை பற்றி பேசுவதற்கு தமிழ்ச் சமூகத்திடையே மனத்தடை இருப்பதோடு, இது வெளியே தெரியும் போது, அப்பெண்கள் களங்க முற்றவர்களாக முத்திரை குத்தப்படுவார்கள். பாலியல் வன்முறையின் உடல் உளம் சார்ந்த பாதிப்புகளின் விளைவாக, சித்திரவதை அல்லது கொடுமை, அவமானப் படுத்தல், மனிதாபிமானமில்லாமல் நடத்துதல் போன்றவை IHRL ஐ மீறுவதாகும்.

அதுமட்டுமில்லாமல் இந்திய அமைதி காக்கும் படையினர், வல்வெட்டித்துறைப் பொதுமக்களின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு உரிமைகளை அவர்களைத் தன்னிச்சையாக கைது செய்தல், தடுத்து வைத்தல் மற்றும் வலுக்கட்டாயமாக காணாமல் போதல் மூலம் மீறினர். பொதுமக்கள் எந்த சட்ட நியாயமும் இல்லாமல் பல்வேறு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர், சிலர் காவலில் இறந்தனர், மற்றவர்கள் மீண்டும் ஒருபோதும் காணப்படவில்லை, IHRL இன் தெளிவான மீறல்களுக்கு சமம். கொலைகள், சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் வலிந்து காணாமலாக்கும் நடவடிக்கைகளின் போது இந்திய இராணுவ வீரர்கள் வீடுகளுக்குள் ஊடுருவியமையானது பொதுமக்களின் தனியுரிமை உரிமையை மீறும் செயலுமாகும்.

மேலும், ஊரடங்கு உத்தரவு மற்றும் சடலங்களை எடுத்துச் செல்வதற்கு இந்திய அமைதிப் படை அனுமதி மறுத்தமையால், உடல்கள் அழுகிப் பழுதடைய ஆரம்பித்தன. அதனால் பழுதடைந்த உடல்கள் அவரசமாக தகனம் செய்யப் பட்டன. இந்தச் செயலானது மக்களது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான, தன்மானத்தை ஒட்டு மொத்தமாக மீறுவதுடன், இந்து பாரம்பரியம் மற்றும் சம்பிரதாயங்கள் அடிப்படையில், முறையான ஈமச்சடங்குகளை செய்வதற்கான, வல்வெட்டித்துறை மக்களின் பாரம்பரிய உரிமைகளையும் மீறுவதாகும். மக்களின் வாழ்வாதாரத்திற்கு அவசியமான வீடுகள், வணிகங்கள் மற்றும் பிற சொத்துக்கள் பரவலாக அழிக்கப்பட்டதாலும் தீ வைக்கப்பட்டு, சூறையாடப்பட்டதாலும் மக்களில் பலரால் தேவையான உணவுப் பொருட்கள் உட்பட அடிப்படைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. இது மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின் (UDHR) பிரிவு 17 மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் (ICESCR) கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வுக்கான உரிமைகளை மீறும் செயல்களாகும். ஊரடங்கு உத்தரவு மற்றும் முற்றுகை, வல்வெட்டித்துறை பொதுமக்களை மனிதாபிமான உதவிகள் சென்றடைவதைத் தடுத்தது, பட்டினி மற்றும் மருத்துவ பராமரிப்பு இல்லாததால் அவர்கள் உயிர்வாழும் உரிமைகளுக்கு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியது.

மேலும், இந்த பாரிய அட்டூழியங்களை தற்செயலான அல்லது தவிர்க்க முடியாத பொதுமக்கள் உயிரிழப்புகளாகக் கருத முடியாது. நிலைமையை அமைதிப்படுத்த பொதுமக்கள் திரும்பத் திரும்ப முயற்சித்த போதிலும், கெஞ்சி மன்றாடிய போதிலும், தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளையும் பொது மக்களையும் வேறுபடுத்திப் பார்ப்பதற்கு இந்திய அமைதிப்படை எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. அதற்கு பதிலாக, அவர்கள் வேண்டுமென்றே பொது மக்களை, அதிலும் குறிப்பாக இளவயது ஆண்களை, அவர்களின் வீடுகளுக்குள் நுழைந்து, அவர்களைத் தேடிப்பிடித்து, ஈவிரக்கமின்றி அவர்களைத் தாக்கி அல்லது அவர்களைப் பேசவிடாமல் கதைக்க எத்தனிக்கும் போதே நடுவே அவர்களைச் சுட்டுக் கொன்றனர். இந்த நடவடிக்கைகள் மற்றும் இலங்கையில் அவர்கள் இருந்த 32 மாதங்களில் செய்யப்பட்ட பிற அட்டூழியங்களைக் கருத்தில் கொண்டால், இவை சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாக தகுதி பெறும் வகையில் பொதுமக்கள் மீதான வேண்டுமென்றே, பரவலான மற்றும் திட்டமிட்ட தாக்குதலின் ஒரு பகுதியாக இருக்கலாம்.

14187

## AFFIDAVIT

I, Valliammai Widow of Selliah, Aged 58 Years, being a Hindu, Srilan-kan Tamil and resident of Koddappanai, Kamparmalai, Valvettiturai do hereby solemnly, sincerely and truly declare and affirm as follows

I. I am the affirmant abovenamed.

2. My only son Selliah Yogarajah, aged I9 years was inside the "Dayana Mini Cinema" at Valvettiturai Junction watching a film on 02.8.I989. At about II.30 a.m. The Indian Army Person-nel (I.P.K.F) while on rampage, took him and manyothers who were also inside the said Cinema into cusbody and removed them to their Camp.

3. Uptodate, My said son Selliah Yogarajah did not return home or I did not hear any thing about my son. He was wearing a gold-chain and two rings weighing about 05 soverigns at the time of leaving home on 02.8.I989 morning.

4. I made various attempts to findout his whereabouts. But, I could not succeed. I made inquiries at the I.P.K.F. Camps at Polikandy, Udupiddy and Kankesanthurai and I was told by the Army-Personnel that they will inform about my son Selliah Yogarajah after making inquiries about him. But, they did not confirm whether he is in their custody.

5. Even though two weeks has elapsed since the date of arrest, I did not reciewe any information about my son Selliah Yoga-rajah from the I.P.K.F. or from anybody.

Readover and explained to the abovenamed affirmant who affirmed to the correct-ness hereof set her signature before me at ...Valvetty... On this 23rd...... day of August, I989.



ச.வள்ளியம்மா...

Affirmant.

Before me.

...................

Justice of the Peace. J.P.

Dr. S. RAMASAMY
JUSTICE OF THE PEACE
SAMARABAHU
UDUPPIDDY

திருமதி தங்கப்பொண்ணு செல்லத்துரை

AFFIDAVIT

I,(Mrs) Thangaponnu widow of late Kandavanam Sellathurai,aged 81years,being a Hindu,Sri Lankan Tamil,residing at Manal Valavu, Valvettiturai,do hereby solomenly.sincerely and truely declare and affirm as follows:-

1. I am the deponent herein holding National Identity Card No 086640716 V.
2. I am a poor widow and I eke out an excistance by running a minor shop,adjoining my house.
3. On 02.8.1989 at about 11.30 a.m I heard gun blasts alround,and I immediately closed my shop and kept indoors.

   Roundabout 4.00 p.m some soldiers approached my shop,broke open the doors,walked in and assaulted me severely.
4. Temporary treatment was given but,as my general condition got worse I was admitted to the Govt Base Hospital,Point Pedro. I was discharged from there on 13.8.89. As further complications have setin I am again warded at the Govt Hospital and treatment is continuing( Medical Report No A 163515 from the Govt Medical Officer,Point Pedro is attached)
5. Marriage Certificate

   I got married in 1928 according to Hindu religious rites;the marriage was solominized by the Chief Priest of Nediyakadu Pillaiyar Temple(late Somasuntharakkurrukkal).It is regretted that I am unable to trace the certificate of marriage.
6. I have the undermentioned children;

   (i) Mr S.Sothilingam,son aged 50.

   (2) Mrs Anandaranee Velummylum aged 48.

   (30 Mrs Indranee Arunasalam aged 45.

I am being now maintained and looked after by Anandaranee Velummylum.

Declared and affirmed at)
Valvettiturai this 22nd )
day of October 1989. )

Declarant.




Before me.

J.P.

S. THANDABANIKA THESIGAR,
JUSTICE OF THE PEACE
Sri Muthumari Amman Temple
VALVETTITURAI

# 6. முடிவும் பரிந்துரைகளும்

இந்த அறிக்கை, 1989 ஓகஸ்ற்றில், இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதியிலிருந்த இந்திய அமைதி காக்கும் படையால் நடாத்தப்பட்ட வல்வெட்டித்துறைப் படுகொலை என்ற குறிப்பிட்ட சம்பவத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

இப்பாரதூரமான வன்முறைகள் அரங்கேற்றப்பட்டிருந்த போதிலும், பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை மக்களுக்கு பயனுள்ள சட்டத் தீர்வுகளையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனினும், வல்வெட்டித்துறை மக்கள் தம்மிடம் காணப்பட்ட ஆழமான கவலை, வருத்தம் கோபத்தையும் மீறி, நீதிக்கான தமது தேடலில், சரியான நேரத்தில் ஆதாரங்களைச் சேர்த்து வைத்தனர். தமக்கான விளக்கத்தையும் தீர்வுகளையும் பெற்றுக் கொள்வதற்காக இந்திய அமைதி காக்கும் படையுடனும் இந்திய அரசாங்கத்திடமும் தொடர்ச்சியாகத் தொடர்பு கொள்ள முயற்சித்தனர். இருந்தபோதிலும், எதுவுமே நடக்கவில்லை என்ற மறுப்பும், இராஜதந்திர மொழிநடையில் சித்திரவதைகள் 'தவறுதலாக நடந்தது' என்றும் மழுப்பலான பதில்களே அவர்களுக்குக் கிடைத்தன. அது மட்டுமன்றி படுகொலைச் சம்பவங்கள் கூட இந்திய அதிகாரிகளால் மூடி மறைக்கப்பட்டன.

இலங்கையில் அடுத்துவந்த அரசாங்கங்கள், இந்திய அமைதி காக்கும் படையின் குற்றங்களை விசாரிக்கவில்லை அல்லது அவர்களையும் அவர்களது தலைமைப்பீடத்தையும் பொறுப்புக் கூற வைப்பதற்கு எந்தவிதமான முயற்சிகளையும் எடுக்க–வில்லை. ஐ.நா படையினர் நிலை ஒப்பந்தம் (UN Status of Force Agreement) போல, இந்திய அமைதி காக்கும் படைக்கு தண்டனை விலக்களிப்பு வழங்கியமைகூட இதற்குக் காரணமாக இருக்கலாம். [156] அப்படிப்பட்ட ஒப்பந்தம் இல்லா விட்டாலும் கூட, இலங்கையில் நீதிக்கான சாத்தியம் குறைவாக இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவது, மேலே விபரிக்கப்பட்ட இந்திய அமைதி காக்கும் படையினரின் மீறலின் அளவு மற்றும் தன்மையை முற்றாக உள்ளடக்கி, கொடுங்குற்றங்கள் மற்றும் கட்டளைப் பொறுப்பை விசாரித்து, தண்டனை வழக்கும் ஏற்பாடுகள், இலங்கை உள்நாட்டுச் சட்டவிதிகளில் இல்லை; எந்தவொரு உண்மை ஆணையம் அல்லது கலப்பு நீதிமன்றம் நிறுவப்படுவதற்கு முன்பு சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படுவது முக்கியமானது. இரண்டாவதாக, சட்டமா அதிபர் துறையின் சுதந்திரம் சமரசம் செய்யப்படுகிறது, ஏனெனில் அது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதுடன் அரச வழக்கறிஞராகவும் செயல்படுகிறது, இது குடிமக்களின் உரிமைகளை திறம்பட பாதுகாப்பதைத் தடுக்கிறது.[157]

படுகொலையின் போது ஏற்பட்ட கடுமையான மீறல்கள் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களாக இருக்கலாம் என்று அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

இந்திய அமைதி காக்கும் படைகள் இலங்கையிலிருந்து வெளியேறி, இத்தனை வருடங்கள் கடந்த பிறகு, இறந்த பொதுமக்களின் துல்லியமான எண்ணிக்கை, பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை மக்கள் மீது இது ஏற்படுத்திய பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் அரசியல் தாக்கங்கள் அத்தோடு அவர்களுடைய பொருளாதார இழப்பின் முடக்கம், அளவு என்பவற்றைத் துல்லியமாக மதிப்பிடுவது மிகவும் கடினமானது.

சர்வதேச நியமங்கள் மற்றும் தரநிலைகளின் கீழ், எந்த ஒரு அரசும், அரசோடு தொடர்புடையவர்களின் நடத்தையால், சேதங்கள் ஏற்பட்டால், அதற்கு பொறுப்பேற்று, முழுமையான இழப்பீடு வழங்க அரசுகள் கடமைப்பட்டுள்ளன. [158] பாதிக்கப் பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது அல்லது அவற்றைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்வதென்பது சர்வதேச சட்டத்தை நிலை நிறுத்துவதற்கும் செயற்படுத்துவதற்குமான அரச பொறுப்பின் முக்கிய பகுதியாகும். [159] மனித உரிமைகள் மீறப்படும்போது, பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் பயனாளிகள் இழப்பீடு பெற உரிமை உண்டு, அதாவது அரசுகள்

---

[156] *Anurangi Singh, 'SOFA debate: Full of sound and fury?' Sunday Observer (28 July 2019) https://www.sundayobserver.lk/2019/07/28/news-features/sofa-debate-full-sound-and-fury.*

[157] *Danielle Ireland-Piper, 'Institutional dichotomies: The Solicitor-General in Sri Lanka', Bond Law Review, Vol.' 23, Issue 2, p11-25 (2011) https://blr.scholasticahq.com/article/5582-institutional-dichotomies-the-solicitor-general-in-sri-lanka/attachment/15626.pdf.*

[158] *UN General Assembly, Responsibility of States for internationally wrongful acts: Resolution adopted by the General Assembly, A/RES/56/83, UN General Assembly (28 January 2002) https://www.refworld.org/legal/resolution/unga/2002/en/12632, and UN General Assembly, Basic Principles and Guidelines on the Right to a Remedy and Reparation for Victims of Gross Violations of International Human Rights Law and Serious Violations of International Humanitarian Law: resolution / adopted by the General Assembly, A/RES/60/147 (21 March 2006) Section IX, https://www.refworld.org/legal/resolution/unga/2006/en/12095.*

[159] *Final report of the Special Rapporteur, Mr. M. Cherif Bassiouni, submitted in accordance with Commission resolution 1999/33, E/CN.4/2000/62 (18 January 2000) Section II, para 3, https://digitallibrary.un.org/record/407931?ln=en&v=pdf.*

இழப்பீடு வழங்க வேண்டும் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் பொறுப்பானவர்களிடமிருந்து நிவாரணம் பெறுவதற்கான ஏது நிலையை ஏற்படுத்த வேண்டும். [160] மேலும், பாதிக்கப் பட்டவர்களின் நிவாரண உரிமைகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டம், [161] சர்வதேச மனிதாபிமான சட்டம் [162] மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் [163] பாதுகாக்கப் படுகின்றன. இந்த உரிமைகளில் சேதங்களுக்குச் சரியான நேரத்தில், பயனுள்ள மற்றும் போதுமான இழப்பீடு பெறுதல், மீறல்கள் பற்றிய பொருத்தமான தகவல்களை அணுகுதல் மற்றும் இழப்பீடு வழங்குவதற்கான வழிமுறைகள் ஆகியவை அடங்கும். [164] இழப்பீடுகள் மீறல்களின் தீவிரத் தன்மைக்கும் அதன் விளைவாக ஏற்படும் தீங்குக்கும் பொருத்தமானவையாக இருக்க வேண்டும். [165] இது வெவ்வேறு வடிவங்களை உள்ளடக்கி இருக்கிறது: நட்டஈடு, இழைப்பீடு, மறுவாழ்வு மற்றும் திருப்தி என்பவையே அவையாகும். [166] பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படும் பொருளாதார மற்றும் தார்மீகச் சேதங்களை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு இந்த வகையான இழப்பீடுகள் ஒன்றையொன்று பூர்த்தி செய்ய வேண்டும். [167] ஆதாரங்கள் இல்லாததால் சேதங்களை மதிப்பிடுவது சவாலானதாக இருக்கலாம் என்றாலும், சர்வதேச வழக்குச் சட்டம் இழப்பீடு வழங்குவதைத் தடுக்கக் கூடாது என்பதைக் குறிக்கிறது. [168] கடுமையான மனித உரிமை மீறல்கள் இயல்பாகவே குறிப்பிடத்தக்க தீங்கு விளைவிக்கின்றன, அவை பொருள் அல்லது தார்மீகமாக இருந்தாலும் சரி. எனவே, மீறலின் தன்மையின் அடிப்படையில் சேதங்களை ஊகிக்க வேண்டியிருக்கலாம். மேலும் நிதி இழப்பீடு நியாயத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படலாம்.[169]

இப்படுகொலை தொடர்பில், பயனுள்ள தீர்வுகள் மற்றும் நிவாரணங்கள் இன்னமும் அவர்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதன் மூலம் வல்வெட்டித்துறைப் பொது மக்களின் உரிமைகள் தொடர்ந்தும் மீறப்பட்டே வருகின்றது.

[160] *Diane Orentlicher, Report of the independent expert to update the Set of principles to combat impunity, E/CN.4/2005/102/Add.1, UN Commission on Human Rights (8 February 2005) Principle 31, https://www.refworld.org/reference/themreport/unchr/2005/en/35515.*

[161] *See eg UDHR, Article 8; ICCPR, Article 2; CAT, Article 14; and CEDAW, Article 2.*

[162] *See The Hague Convention respecting the Laws and Customs of War on Land (Article 3); and the Protocol Additional to the Geneva Conventions relating to the Protection of Victims of International Armed Conflicts (Article 91).*

[163] *See Rome Statute of the International Criminal Court (Articles 68,75, and 79).*

[164] *UN General Assembly, Basic Principles and Guidelines on the Right to a Remedy and Reparation for Victims of Gross Violations of International Human Rights Law and Serious Violations of International Humanitarian Law: resolution / adopted by the General Assembly, A/RES/60/147 (21 March 2006) Section VII, https://www.refworld.org/legal/resolution/unga/2006/en/12095.*

[165] *Id. Section IX.*

[166] *Id.*

[167] *International Commission of Jurists, The Right to a Remedy and Reparation for Gross Human Rights Violations: A Practitioners' Guide, Revised Edition (2018) p212, https://www.icj.org/wp-content/uploads/2018/11/Universal-Right-to-a-Remedy-Publications-Reports-Practitioners-Guides-2018-ENG.pdf.*

[168] *Id. p213.*

[169] *Id.*

## இந்திய அமைதிப் படையின் வல்வெட்டித்துறை வன்முறைகளில் உயிர் தப்பியவர்களுக்கான, நிலைமாறுகால நீதியும், நீதிக்கான வாய்ப்பும்

ஜனநாயக, பன்முகத்தன்மை கொண்ட, உள்ளடக்கிய மற்றும் அமைதியான சமூகத்தை உருவாக்குவதற்கு, மோதல்களிலி–ருந்து கடந்த காலக் குற்றங்களை நிவர்த்தி செய்வது மிகவும் முக்கியமானது என்பதை ஜொய்ரெற்/ ஓறியென்லிச்சரின் மோதல் தண்டனை விலக்களிப்புத் தொடர்பாக புதுப்பிக்கப்பட்ட கொள்கைகள் (The Jointet/Orentlicher Updated Principles to Combat Impunity) வலியுறுத்துகின்றன. பாதிக்கப்பட்டவர்களின் கண்ணியத்தை மீட்டெடுக்கவும், சமூகம் நம்பிக்கையை மீண்டும் பெறவும், நல்லிணக்கத்தைத் தொடங்கவும் கடுமையான மனித உரிமை மீறல்களை ஒப்புக்கொள்வது மிக முக்கியம். இது ஜனநாயக, பன்மைத்துவ, ஒன்றுபட்ட, அமைதியான சமூகத்தை உருவாக்க உதவும். [170] இந்தக் கொள்கைகள் நான்கு முக்கிய யோசனைகளை அடிப்படையாகக் கொண்டவை: பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய உண்மையை அறிய மறுக்க முடியாத உரிமை, பொறுப்பானவர்களை விசாரித்து, அடையாளம் கண்டு, வழக்குத் தொடர வேண்டிய அவசியம், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதன் முக்கியத்துவம் மற்றும் அத்தகைய மீறல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள். [171] சட்ட விளைவுகள் எதுவாக இருந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மீறல்களின் சூழ்நிலைகளையும், இறந்தவர்கள் அல்லது காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் புரிந்து கொள்ள நிரந்தர உரிமை உள்ளது என்று இப்புதுப்பிக்கப்பட்ட கொள்கைகள் கூறுகின்றன.[172]

உண்மை, நீதி, இழப்பீடு, மீண்டும் நிகழாமல் தடுத்தல் ஆகியவற்றை ஊக்கப்படுத்துவதற்கான முன்னாள் ஐ.நா. சிறப்புத் தூதுவர் பாப்லோ டி கிரீஃப், (Pablo de Greiff) இந்தக் கொள்கைகள் அங்கீகாரம் மற்றும் நம்பிக்கையின் உடனடி இலக்குகளையும், நல்லிணக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுப்பது என்ற நீண்டகால இலக்குகளையும் அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்று குறிப்பிட்டார்: இந்த விரிவான அணுகுமுறை சமூகங்களை குணப்படுத்தவும், எதிர்கால மோதல்களைத் தடுக்கவும் கடந்த கால அநீதிகளை

[170] *Diane Orentlicher, Report of the independent expert to update the Set of principles to combat impunity, E/CN.4/2005/102/Add.1, UN Commission on Human Rights (8 February 2005) https://www.refworld.org/reference/themreport/unchr/2005/en/35515 [accessed 18 October 2024].*

[171] *Diane Orentlicher, Report of the independent expert to update the Set of principles to combat impunity, E/CN.4/2005/102/Add.1, UN Commission on Human Rights (8 February 2005) https://www.refworld.org/reference/themreport/unchr/2005/en/35515 [accessed 18 October 2024]*

[172] *ibid.*

முழுமையாக நிவர்த்தி செய்யவும் வடிவமைக்கப் பட்டுள்ளது.[173]

## நினைவுகூரல்

2005 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 60/147 தீர்வு மற்றும் இழப்பீட்டுக்கான உரிமை குறித்த அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வழி காட்டுதல்கள், பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்ந்து கௌரவிப்பது இழப்பீட்டுச் செயல்முறையின் ஒரு பகுதியாகும் என்பதை அங்கீகரிக்கிறது. [174] அத்தீர்மானம், பின்வரும் நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இருக்க வேண்டும், என்பதை குறிப்பாக சுட்டிக் காட்டுகிறது: உண்மையை சரி பார்த்தலும் அதை முழுமையாகவும் பகிரங்கமாகவும் பொது மக்களுக்கு வெளிப்படுத்தலும்; பாதிக்கப்பட்டவர்களதும், அவர்களுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டவர்களதும் கண்ணியம், புகழ் மற்றும் உரிமைகளை மீளவும் ஏற்படுத்துவதை வலியுறுத்தும் உத்தியோகபூர்வமான அறிவிப்பு அல்லது சட்டத் தீர்வு; உண்மைகளை ஒப்புக்கொள்ளுதல், பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுதல் உட்பட்ட பொது மன்னிப்புக் கோரல்; பாதிக்கப் பட்டவர்களுக்கான நினைவு கூரலும் அஞ்சலி செலுத்துதலும்; மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம், மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தொடர்பில் இடம்பெறும் பயிற்சிக் கற்கை நெறிகளிலும், அனைத்து மட்டங்களிலும் இடம்பெறும் கல்விசார் நடடிவடிக்கைகளிலும் மீறல்களின் துல்லியமான தகவல்களை உள்ளடக்குதல்.

வான் போவென் (Van Boven) கோட்பாடுகளில் இந்த செயல் முறைகளின் முக்கியத்துவம் பற்றி ஏற்கனவே வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும், பல மோதலுக்குப் பிந்தைய நாடுகள் நினைவுகூரும் செயற்பாடுகளைப் புறக்கணித்துள்ளன. முன்னாள் சிறப்பு தூதுவர் பபியன் சல்வியோலி (Fabián Salvioli) நினைவுகூரல் நிகழ்வை இடைக்கால நீதியின் முக்கிய அங்கமாக மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். [175] மனித உரிமைகள் பேரவைக்கு அவர் அளித்த அறிக்கையில், நினைவுகூரல் நிகழ்வை நீண்டகால முயற்சியாக விபரித்தார், அதிகாரிகள் பல்வேறு கண்ணோட்டங்களை ஆதரித்து குடியியல் சமூகத்துடன் நன்கு ஒத்துழைக்கும்போது அது வெற்றி பெறும். [176] வரவு செலவுத் திட்டம், அரசியல் அல்லது கட்டமைப்பு சவால்களைப் பொருட்படுத்தாமல், மனித உரிமை மீறல்களை நிவர்த்தி செய்வதன் ஒரு பகுதியாக நினைவு கூருதலை செயல்படுத்த அரசாங்கங்கள் கடமைப்பட்டுள்ளன என்றும் சால்வியோலி வலியுறுத்தினார். நிலைமாறுகால நீதியின் பிற பகுதிகளில் கவனம் செலுத்துவது இந்தக் கடமையைப் புறக்கணிப்பதை மன்னிக்காது என்று அவர் வாதிட்டார். [177] சிறிலங்கா அரசாங்கம், உண்மையை மீட்டல், இழப்பீட்டைப் பெறுதல், நினைவூட்டலை எடுத்துரைத்தல் மூலம் கொல்லப்பட்டவர்களினதும், தாங்கள் விரும்பிய ஒருவரை இழந்தது மட்டுமில்லாமல் கடும் பொருளாதார இழப்பால் பாதிக்கப்பட்ட அவர்களது குடும்ப உறுப்பினர்களினதும் கண்ணியத்தை மீட்க வெகு தூரம் செல்லவேண்டும்.

## மனிதப் புதைகுழிகளும் அகழ்வுகளும்

வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேசச் சட்டம் (International Convention for the Protection of All Persons from Enforced Disappearance(ICPPED)[178]. உள்ளிட்ட சர்வதேச மற்றும் பிராந்திய மனித உரிமைச் சட்டங்களில் கூறப்பட்டுள்ளது போன்று, இறந்தவர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு மரியாதை வழங்குவதற்குமுரிய கடப்பாடு அனைத்து அரசுகளுக்கும் உள்ளது. இச்சட்டத்தின் 23(3) சரத்து, அரசுகள் இறந்து போனவர்களது அதிகாரபூர்வ பதிவுகளை வைத்திருக்க வேண்டும் என்றும், அதில் இறந்தமைக்கான காரணம், இறுதி அடக்கம் செய்யப்பட்ட இடம் என்பவை அதில் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும், மரணம் நிகழும்போது, அவ்விடத்திற்குச் சென்று, உரிய மரியாதைகளுடன் சடலத்தை இறந்தவர்களின் குடும்பம் கேட்டுக் கொண்டால், அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் கூறுகின்றது. சட்டத்திற்குப் புறம்பான, ஏதேச்சதிகார, முழுமையான விசாரணைகளற்ற கொலைகளை செயற்றிறனாகத் தடுத்தலும் விசாரணை செய்தலும் மீதான கோட்பாடுகள், மற்றும் சட்ட விரோதமானதாக இருக்கக் கூடிய கொலைமீதான விசாரணை தொடர்பான மின்னெசொற்றா நெறிமுறை ஆகியனவற்றில், மனிதப் புதைகுழிகள் பாதுகாக்கப்படுவது மற்றும் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக நியமச் செயற்பாடுகள் பற்றியும் வழிகாட்டல்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. [179] வல்வெட்டித்துறையில் கொல்லப் பட்டவர்களது குடும்பங்களுக்கு அவர்களது உறவுகளின் சடலங்களின் எச்சங்கள் தோண்டி எடுக்கப்பட்டு, அவர்களிடம் ஒப்படைக்கப் படுவதற்குரிய தகைமை உள்ளது.

---

[173] *Pablo de Greiff, Report of the Special Rapporteur on the Promotion of Truth, Justice, Reparation and Guarantees of Non-Recurrence, A/HRC/21/46, UN Human Rights Council (9 August 2012) https://www.refworld.org/reference/themreport/unhrc/2012/en/88402 [accessed 18 October 2024]*

[174] *UN General Assembly, Basic Principles and Guidelines on the Right to a Remedy and Reparation for Victims of Gross Violations of International Human Rights Law and Serious Violations of International Humanitarian Law : resolution / adopted by the General Assembly, A/RES/60/147 (21 March 2006) https://www.refworld.org/legal/resolution/unga/2006/en/12095 [accessed 18 October 2024]*

[175] *UN Human Rights Council, Memorialization processes in the context of serious violations of human rights and international humanitarian law: the fifth pillar of transitional justice, A/HRC/45/45*

[176] *ibid.*

[177] *ibid.*

[178] *UN General Assembly, International Convention for the Protection of All Persons from Enforced Disappearance (20 December 2006) https://www.refworld.org/legal/agreements/unga/2006/en/57490 [accessed 22 October 2024]*

[179] *https://www.ohchr.org/en/publications/reference-publications/minnesota-protocol-investigation-potentially-unlawful-death*

## இலங்கையில் நிலைமாறுகால நீதி

2015ஆம் ஆண்டு, சிறிலங்கா அரசாங்கம், இலங்கையில் நல்லிணக்க, பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதாக வாக்குறுதி வழங்கி, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானமான 30/1 இற்கு ஆதரவு வழங்கியது. அத்துடன், 2017ஆம் ஆண்டும் 2019ஆம் ஆண்டும், இதற்கான ஆதரவினைப் புதுப்பித்துக் கொண்டது. இத்தீர்மானங்களில், 'மனித உரிமை மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்கள் தொடர்பாகவும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் மீறல்கள் தொடர்பாகவும் விசாரணை நடாத்துவதற்கு விசேட ஆணையாளரைக் கொண்ட நீதித்துறைப் பொறிமுறையினையும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றினையும், காணாமற் போனோர் தொடர்பாக அலுவலகம் ஒன்றினையும் அமைப்பதற்கு' சிறிலங்கா அரசாங்கம் உறுதிவழங்கியது. ஆனால், 2019 இல் நடந்த ஆட்சி மாற்றத்தினைத் தொடர்ந்து, இத்தீர்மான உறுதிமொழிகளிருந்து விலகிக்கொள்வதாக புதிய அரசாங்கம் அறிவித்ததுடன், 'உள்நாட்டிலேயே ஏற்படுத்தப்பட்ட, நடைமுறைப்படுத்தப்படும் நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயல் முறையூடாக நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு' தாம் அர்ப்பணிப்புக் கொண்டுள்ளதாகவும் கூறியது.

## இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை உருவாக்குதல்

2023ஆம் ஆண்டில், சிறிலங்காவின் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க தென்னாபிரிக்க மாதிரியை அடிப்படையாகக் கொண்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை (Truth and Reconciliation Commission-TRC) உருவாக்குவதற்குரிய முன்மொழிவை வைத்தார். மேலும் TRCஐ ஆரம்பிப்பதற்கான சட்டவரைபினை முன்மொழிந்த போதும் அது நிறைவேற்றப்படவில்லை [180] மேலும், இவ்வமைப்புடன் இணைந்து செயற்படுவதற்கு தேசிய ஐக்கிய மற்றும் இணக்கப்பாட்டு ஆணைக் குழுவினையும் (National Unity and Reconciliation Commission-NURC) சிறிலங்கா அரசாங்கம் எற்படுத்தியது.

அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. ஐச் சேர்ந்த அனுர குமார திஸநாயக்கா வெற்றி பெற்று, ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அவர் பதவிக்கு வந்த பின்னர், 2019 இல் நடந்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல், 2005 இல் தமிழ் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவருடைய படுகொலை உள்ளிட்ட சில முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளை மீள் விசாரணை செய்வதற்கு அவரது அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், சிறிலங்கா தொடர்பாக ஐ.நா. விசாரணைக்கு (UN investigation on Sri Lanka(SLAP) ஒத்துழைப்பு வழங்க புதிய அரசாங்கம் தயாராக இல்லை என்பதையும் மீளவும் வலியுறுத்தியுள்ளது.

முன்மொழியப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினை அல்லது வேறு நிலைமாற்று நீதிக் கட்டமைப்பினை உருவாக்குவதற்குரிய எந்த முன்மொழிவுகளையும் புதிய அரசாங்கம் இன்னனும் அறிவிக்காத போதிலும், வல்வெட்டித்துறைப் படுகொலையினதும், இதர இந்திய அமைதிப்படைகளால் நடாத்தப்பட்ட குற்றச்செயல்களிலும் உயிர் தப்பியவர்களதும் குடும்பங்களதும் உரிமைகளை உறுதிப்படுத்தவும், இவற்றுக்குக் காரணமானவர்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்குமான சட்ட ரீதியான கடப்பாடு அவ்வரசாங்கத்திற்கு உள்ளது.

*180* *[https://srilankabrief.org/sri-lanka-21-member-national-unity-and-reconciliation-commission-proposed-excerpts-from-the-draft-act](https://srilankabrief.org/sri-lanka-21-member-national-unity-and-reconciliation-commission-proposed-excerpts-from-the-draft-act)*

1411).

AFFIDAVIT.

I, Kanagasabai Thangarasa, age 62 years, of Vellaivaikal, Sivankovilady, Valvettiturai and holding National Identity Card No.282630958 X, being a Hindu, do hereby, solemnly, sincerely and truely declare and affirm as follows:-

1. I am the affirmant above named.

2. On Wednesday the 2nd August 1989, at about 2-30 p.m. the Indian Army entered mu house and pulled my daughter's husband out of the house and put him against a wall and shot him. Then they threatened to shoot my daughter and children and burnt all house hold goods after poring kerosine brought from the kitchen. My house and kitchen were completely burnt. The loss is about 50,000 rupees. When I saw my son-in-law, after the soldiers left he was dead. [illegible]

Declared and Affirmed at Valvettiturai this 14th day of August 1989 and the declarant seeming to understand a translation of the foregoing in Tamil, his own language, set his signature.




.....................
Declarant
Before Me

Justice of the Peace. J.P.

Dr. S. RAMASAMY
JUSTICE OF THE PEACE
SAMARABAHU
UDUPPIDDY

M. SINNADURAI
JUSTICE OF THE PEACE
"KUGAN KUDISAI"
POLIKANDY
VALVETTITURAI

AFFIDAVIT (14191)

1.00 25/8/89

I, Rasiah Sothilingam, age 42, Fishing, Hindu, Sri -
-Lankan Tamil, of Alady Lane, Polikandy, Valvettiturai do
hereby solemnly, sincerely and truly declare and affirm as
follows:

1. I am the affirmant herein. (N.I.C. No: 472560360V.)

2. On the 02nd. day of August, 1989, while my eldest son RAMESHKUMAR, age 18, wa going to Valvettiturai town at about 10.30 am was stopped by the I.P.K.F. personnels near Nullan Vairavar Temple with his friends and later was chased and on their return they were fired and on receiving the news the injured were admitted to the Govt. Hospital, Valvettiturai and there my son the said Rameshkumar died. Later the body was cerema ted on the 04th day of August, 1989 at Oorany cemtery, Valvettiturai and the death was registered with the Registrar of Deaths Valvettiturai on the 19th day of August, 1989 under the No.1555.

3. Rameshkumar is my eldest son who was helping me in my profession. I have another three girls at the age of 17, 15 and 08 years and a boy at the age of 11 years. I was running my family with great difficulty after loosingh most of my belongings during the Liberation Operation and I lost most of my professional equipments too. My late son Rameshkumar left school and was assisting me as I was unable to earn our family's living alone.

4. With his asistance I managed the family and was abl. to educate the other children.

5. By the death of my late son Rameshkumar I had lost a great asset, of my family.

The foregoing were readover, explained to the abovenamed affirmant in Tamil his own language who understood the same set his signature before me affirming to the truth and correctness therein at Polikandy on this 25th day of August, 1989.

இ. சோதிலிங்கம்

BEFORE ME

M. Sinnadurai

M. SINNADURAI
JUSTICE OF THE PEACE
"KUGAN KUDISAI"
POLIKANDY
VALVETTITURAI

JUSTICE OF THE PEACE

# பரிந்துரைகள்

## இந்திய அரசாங்கத்திற்கு:

இந்திய அமைதி காக்கும் படைகளால் சிறிலங்காவில் மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வு வழங்கவேண்டிய கடப்பாடு இந்திய அரசாங்கத்திற்கு உள்ளது.

**இந்திய அரசாங்கமானது பின்வருவனவற்றை நிறை வேற்ற வேண்டும்:**

### பொறுப்புக்கூறல்:

1. வல்வெட்டித்துறைப் படுகொலையிலும், சிறிலங்காவில் இருந்த நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களிலும் இந்திய அமைதி காக்கும் படையின் வகிபாகம் தொடர்பாக பொறுப்புக் கூறல் மட்டில் சர்வதேச சட்டத்தின் கீழ் தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதுடன், இந்திய அமைதி காக்கும் படையின் கட்டளை அதிகார வலையமைப்பினையும் அதன் மூத்த அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலையும் தெளிவுபடுத்தவேண்டும்

2. இவ்வன்முறைகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அவர்களது கட்டளை அதிகாரிகளும் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டு, பொறுப்புக்கூறல் செயற்பாட்டின் குற்றச் சாட்டுக்களை எதிர் கொள்வதை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் மூலமாக இவர்களால் இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், அதனால் ஏற்பட்ட இழப்புக்களுக்கும் வல்வெட்டித்துறைப் படுகொலையில் பாதிக்கப்பட்ட மக்கள் முறைப்பாடுகளை மேற்கொள்வதை ஏதுவாக்கும் நிலை ஏற்படும்.

### பரிகாரங்கள்

1. வல்வெட்டித்துறைப் படுகொலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு மற்றும் ஆதரவினை வழங்க உறுதியளிக்கவும், அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை நிவர்த்தி செய்யவும், அவர்களது குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறைச் சமூகத்திற்கு பொருளாதார மற்றும் அடையாள உதவிகளை வழங்கு வதையும் மேற்கொள்வதற்கு உறுதியளிக்க வேண்டும்.

2. ஒரு விரிவான இழப்பீட்டு மற்றும் புனர்வாழ்வு செயல் திட்டத்தை உருவாக்குதல், இதில் பிரதான உழைப்பாளிகள், காயமடைந்தவர்கள், சொத்திழப்புக்கள், வருமான இழப்புக்கள், வாழ்வாதார இழப்புக்கள், பொருளாதார வாய்ப்புக்களில் இழப்புக்களுக்கான பதிலீடுகள், மருத்துவ மற்றும் உளவியல் சமூக ஆதரவுகள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.

3. வல்வெட்டித்துறைப் படுகொலையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்திடமும், வல்வெட்டித்துறைச் சமூகத்திடமும் எழுத்து மூலமான பொது மன்னிப்புக் கோருதல்

## சிறிலங்கா அரசாங்கத்திற்கு:

வல்வெட்டித்துறைப் படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களும், இலங்கையில் இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட மோசமான மனித உரிமை மீறல்களால் பாதிக்கப் பட்டவர்களும் நீதியையும், பொறுப்புக் கூறலையும் பெற்றுக் கொள்வதற்கும், ஏற்பட்ட இழப்புக்களுக்கும் பரிகாரம் கிடைப்பதற்குமான சிறிலங்கா அரசாங்கத்தின் சர்வதேச மற்றும் உள்ளூர் கடப்பாடுகளை கருத்தில் கொண்டு, பின்வரும் விடயங்களை சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்:

### பொறுப்புக்கூறலும் பரிகாரங்களும்

1. 1989 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதத்தில் இந்தியப் படைகளால் வல்வெட்டித்துறையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை தொடர்பில் சுயாதீன விசாரணையினை ஏற்படுத்தி, இதில் சம்பந்தப்பட்ட இந்தியப் படைகளின் அதிகாரிகளையும், அந்நேரத்தில் அவர்களது கட்டளைய அதிகாரிகளையும் இனம் கண்டு, குற்றவியல் பொறுப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

2. வல்வெட்டித்துறைப் படுகொலையால் மக்கள் பாதிக்கப் பட்டார்கள் என்பதை ஏற்றுக்கொள்வதுடன், அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு பரிகாரங்கள் பெற்றுக் கொள்வதையும் உறுதிப்படுத்துதல்.

3. இலங்கையில் இந்தியப் படைகள் இருந்த நேரத்தில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட வல்வெட்டித்துறைப் படுகொலை உட்பட்ட, பாரதூரமான மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக அவர்களைப் பொறுப்புக்கூற வைக்கவும், நீதியைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டிலும் இந்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களிடமும் அவர்களது குடும்பங்–களிடமும் இந்திய அரசாங்கம் மன்னிப்புக் கேட்பதுடன், வல்வெட்டித்துறைப் படுகொலையில் உயிரிழந்தவர்கள் நினைவாக நினைவுத்தூபி ஏற்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குவதையும் உறுதி செய்வதுடன், பாதிக்கப்பட்ட வர்களுக்குப் பொருத்தமான இழப்பீடு வழங்கப்படுகின்றது என்பதையும் உறுதிசெய்ய வேண்டும்.

## நினைவுகூரல்

4. வல்வெட்டித்துறைப் படுகொலையிலும், இந்தியப் அமைதிப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட இதர வன்முறைகளிலும் பாதிக்கப்பட்டவர்கள் நிலைமாற்று நீதியைப் பெற்றுக் கொள்வதை ஏதுவாக்குதல், இதில் உண்மையைக் கண்டறிவதுடன், காணாமற்போனவர்களை அல்லது அவர்களது சடலங்களை தேடி, மீட்டெடுத்து, அவற்றை உரிய முறைப்படி அடக்கம் செய்தல், வெளிப்படையான மன்னிப்புக் கோரல், சட்ட ரீதியான மற்றும் நிருவாக ரீதியான தடைகள், நினைவு கூரல்கள், நினைவுச் சின்னங்கள் என்பன இதில் உள்ளடங்கும். இலங்கையில் இந்தியப் படைகள் செயற்பட்ட காலத்தில் ஏற்பட்ட வன்முறைகளால் கொல்லப்பட்டவர்களதும் காணாமல் போனவர்களும் அடையாளம் காணப்பட்டு, அவர்களது பெயர்கள் சேகரிக்கப்படுவதும் உள்ளடங்கும். தற்போதுள்ள பட்டியல்கள் டிஜிற்றல்–யுகத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் சேர்கப்பட்டவை என்பதுடன் பரவலாகப் பகிரப்படவு–மில்லை என்பதனால், இவை சேரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, எண்ணிமைப்படுத்தப்பட்டு (டிஜிற்றல்), காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்திற்கும், பொறுப்புக்கூறல் தொடர்பாக எதிர் காலத்தில் அமைக்கப் படவுள்ள நிலைமாற்று நீதி அமைப்புக்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்.

5. இலங்கையில் இறந்த இந்திய அமைதிப் படைகளுக்கான நினைவுத் தூபிகள் அந்நாட்டில் உள்ளன. ஆகவே, வல்வெட்டித்துறைப் படுகொலையில் கொல்லப்பட்டவர்–களுக்கான நிரந்தரமான நினைவுத்தூபி ஒன்று, பாதிக்கப்பட்டவர்களது குடும்பங்களுடனும், உயிர் தப்பிய–வர்களுடனும் கலந்துரையாடி இறந்தவர்களுக்கு மரியாதை வழங்கும் வகையில் அவர்களது பெயர்களைக் கொண்ட நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

## அகழ்வுகள்

6. வல்வெட்டித்துறைப் படுகொலையில் கொல்லப்பட்ட–வர்களின் குடும்பங்களை திருப்திப்படுத்தும் கடமை அரசுக்கு உள்ளது என்பதை கருத்தில் கொண்டும், தமது அன்புக்குரியவர்களது எச்சங்களை பாதிக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உள்ளது என்பதையும் கருத்தில் கொண்டும், அவர்களது புதைகுழிகள் அகழப்பட்டு, எச்சங்கள் அவர்களது குடும்பங்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

7. சிறிலங்காவில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் என்பன, கட்டடப்பணிகளுக்காக, வீதிப் பணிகளுக்காக அல்லது இதையொத்த வேறு பணிகளுக்காக நிலத்தைத் தோண்டும்போது தவறுதலாக சடலங்கள் கண்டு பிக்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே அப்பகுதிகளில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்தற்கு அதிகாரிகள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, [181] இந்திய அமைதி காக்கும் படையின் இராணுவ முகாமாகப் பயன்படுத்தப்பட்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் உள்ள மனிதப் புதைகுழியினை அகழும் பணிக்கு சிறிலங்கா அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றது. மேலும், சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப [182] வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 10 சிறுவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் அப்பாடசாலையின் வளாகத்திலுள்ள இடத்தினை அடையாளம் கண்டு, அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு, உடலின் எச்சங்களை அவர்களது குடும்பங்களிடம் ஒப்படைக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். [183]

8. எண்ணுக்கணக்கானவர்கள் காணாமல் போயும் காணாமற் போகடிக்கப்பட்டுள்ளதையும் கருத்தில் கொண்டு, அவர்களது சடலங்கள் மீட்கப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றின் மீது மரபணுப் பரிசோதனை மேற்கொள்வதற்–காக காணாமற் போனவர்களது உறவினர்களுடைய மரபணு மாதிரிகள் சேகரிக்கப் படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## நிலைமாற்று நீதி

9. சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கம் உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினை இலங்கையில் அமைக்கும் பட்சத்தில், இலங்கையின் வடக்குக் கிழக்கில் இந்திய அமைதி காக்கும் படை பணியாற்றிய காலப் பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களில் அவர்களது வகிபாகம் மற்றும் நடத்தை–களையும் உள்ளடக்குவதற்குரிய ஆணையினையும் அவ்வாணைக்குழு கொண்டிருக்க வேண்டும்.

## தடைகள்

10. தற்போதைய அரசாங்கம், எந்தவொரு குற்றவியல் பொறுப்பும் இல்லாத நிலையில், வல்வெட்டித்துறைப் படுகொலையில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்ட இந்திய அமைதி காக்கும் படையின் அதிகாரிகள் தொடர்பில் இலக்கு வைக்கப்பட்ட தடைகள் மற்றும் பயண அனுமதிப்பத்திரத் (விசா) தடைகள் ஆகியவற்றை கொண்டு வருவது தொடர்பில் பரிசீலிக்க வேண்டும்.

---

[181] *JDS, FOD, CHRD and ITJP, Mass graves and failed exhumations in Sri Lanka (June 2023)* [https://itjpsl.com/reports/mass-graves.](https://itjpsl.com/reports/mass-graves)
[182] *JDS, FOD, CHRD and ITJP, p14 -18.*
[183] *JDS, FOD, CHRD and ITJP, p 4-5, including references to Minnesota Protocol and Bournemouth Protocol.*

ITJP என்பது சிறிலங்காவில் நீதியையும் பொறுப்புக் கூறலையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் 2013லிருந்து பணியாற்றும் சர்வதேச சுயாதீன அமைப்பாகும்.

www.itjpsl.com